இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

இணக்கத் தணிக்கை

மார்ச் 2021-உடன் முடிந்த ஆண்டிற்கானது

தமிழ்நாடு அரசு

அறிக்கை எண் 7 - 2022

பொருளடக்கம்

	பத்தி	பக்கம்
முகவுரை		v
கண்ணோட்டம்		vii
அத்தியாயம் I - முன்னுரை		
இவ்வறிக்கை பற்றிய விவரம்	1.1	1
தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட அமைப்புகளின் விவரக்குறிப்புகள்	1.2	2
தணிக்கை செய்வதற்கான அதிகாரம்	1.3	2
திட்டமிடல் மற்றும் தணிக்கை நடத்துதல்	1.4	3
தணிக்கைக்கான பதிற்குறிப்பு	1.5	4
பரிந்துரைகள்	1.6	4
தணிக்கை அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கை	1.7	5
அத்தியாயம் II - குறிப்பிட்ட பகுதி மீதான இணைக்கத் தணிக்கை		
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை		
நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் செயலாக்கம்	2.1	7
அத்தியாயம் III - இணக்கத் தணிக்கை		
மோசடியான கோரிக்கைகள்/பணம் வழங்குதல்கள்	**3.1**	
உயர் கல்வித் துறை **அண்ணா பல்கலைக்கழகம்**		
பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதில் உள்ள முறைகேடுகள்	3.1.1	35
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை **தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**		
மோசடியான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத முறையில் ஒப்பந்தக்காரருக்கு பணம் வழங்கல்	3.1.2	40
இழப்பு/வீண் செலவினம்	**3.2**	
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை		
இரண்டு தங்குமிடங்கள் கட்டுமானத்தில் பயனற்ற செலவு	3.2.1	44
பள்ளிக் கல்வித் துறை		
இலவச சீருடை வழங்குவதில் தேவையற்ற செலவினம்	3.2.2	46

	பத்தி	பக்கம்
ஒழுங்குமுறை முறைகேடுகள் மற்றும் பிற சிக்கல்கள்	3.3	
உயர்கல்வித் துறை		
ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகள்	3.3.1	49
நீர்வளத் துறை		
கூடுதல் நிதிச்சுமை	3.3.2	56
தவிர்த்திருக்கக்கூடிய/பயனற்ற செலவு	3.4	
கால்நடை வளர்ப்பு, பால், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை		
ஒப்பந்தக்காரருக்கு தகுதியற்ற சலுகை	3.4.1	58
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை		
அதிக அளவு நெல் விதைகளை வழங்குதலில் தவிர்க்கக்கூடிய செலவினம்	3.4.2	61
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை		
MRI ஸ்கேனர்களை வாங்குவதில் தவிர்க்கக்கூடிய அதிகப்படியான செலவினம்	3.4.3	64
நிதி முடக்கம்/பயனற்ற முதலீடுகள்	3.5	
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை		
திருச்சியில் மத்திய வணிக வளாகம் செயல்படுத்தப்படாமை	3.5.1	68
உயர்கல்வித் துறை		
அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் விடுதிகள் பயனுக்கு வராமை	3.5.2	70
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை		
ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையக் கட்டிடத்தின் செயலற்ற நிலை	3.5.3	73

இணைப்புகள்

இணைப்பு எண்	விவரங்கள்		பக்கம் எண்
1.1	நிலுவையில் உள்ள ஆய்வு அறிக்கைகள் மற்றும் பத்திகளின் துறை வாரியான விவரங்கள்		77
2.1	வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் விவரங்கள்		78
2.2	NMSA - RADன் கீழ் மாவட்ட வாரியான பரப்பளவு		79
2.3	ஒப்புதல், ஒதுக்கீடு, அனுமதி, வழங்குகை மற்றும் உண்மையான செலவினத்தின் விவரங்கள் (கூறு வாரியாக)		81
2.4	நிழல் வலைக் கூடங்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் பயனற்ற நிலையில் வைத்தல்		82
2.5	தகுதியற்ற பயனாளிகளுக்கு கறவை மாடு மானியம்		85
2.6	நிலமற்ற பயனாளிகளுக்கு மானியம் வழங்குதல்		88
2.7	தேனீ வளர்ப்பு அலகுகளின் முறையற்ற பராமரிப்பு		91
2.8	மாவட்டம் வாரியான நாற்றுகள் விநியோகம் மற்றும் துளிர்க்கை		95
3.1	டெண்டர் கோரிக்கைகளில் உள்ள முரண்பாடுகளின் விவரங்கள்		96
3.2	டிஜிட்டல் மயமாக்கலுக்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட மற்றும் உண்மையில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரவுகளின் விவரங்கள்		97
3.3	நீர் உட்புகவிடா மற்றும் கிழிக்க இயலாத வெற்று சான்றிதழ்களின் கொள்முதல் விவரங்கள்		98
3.4	போலி/மாற்றப்பட்ட சான்றிதழ்கள் காரணமாக அதிகப்படியான கோரிக்கை		99
3.5	உதிரி பாகத்தின் விலைக்கு ஏற்றுக்கொள்ள முடியாத பணக் கோரிக்கை		100
3.6	சேவைக் கட்டணத்தின் ஏற்றுக்கொள்ள முடியாத பணக் கோரிக்கை		101
3.7	(i)	M/s சுந்தர் ஸ்கேல்ஸ் உடன் AMCல் ஆண்டுக்கு ஆண்டு ஏற்பட்ட செலவினம்	102
	(ii)	மற்ற ஒப்பந்ததாரருடன் AMCல் ஆண்டுக்கு ஆண்டு ஏற்பட்ட செலவினம்	103
3.8	காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூர் மற்றும் தையூர் ‘B’ கிராமங்களில் தங்கும் விடுதிகள் கட்டுதல்		104

இணைப்பு எண்	விவரங்கள்		பக்கம் எண்
3.9	கன்னியாகுமரி மாவட்டம் சின்னத்துறை மற்றும் இரவிபுத்தன்துறை கிராமங்களில் மீன் இறங்கு மையம் கட்டுமானத்திற்கான அசல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் பற்றிய விவரங்கள்		105
3.10	(i)	பல்வேறு அரசு மருத்துவ நிறுவனங்களில் வழங்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட MAGNETOM MRI ஸ்கேனர்களின் விவரங்கள்	106
	(ii)	TNMSC வழங்கிய கொள்முதல் ஆணைகளின் (PO) விவரங்கள்	107
	(iii)	நிதி ஆதாரம்	107
	சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு		108

முகவுரை

மார்ச் 2021 உடன் முடிந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழக ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் (ம) உழவர் நலம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் (ம) மீனவர் நலம், கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு, மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு, தொழிலாளர்கள் நலன் (ம) திறன் மேம்பாடு, பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாடு மற்றும் நீர் வளம் ஆகிய துறைகள் உள்பட்ட அரசுத் துறைகளில் முதன்மை கணக்காய்வுத்தலைவர் (தணிக்கை-I)ஆல் நடத்தப்பட்ட இணக்கத் தணிக்கைகளின் முக்கிய தணிக்கைக் குறிப்புகளை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

2020-21ம் ஆண்டின் கணக்குகளை சோதனை தணிக்கை செய்யும்போது கண்டறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. 2020-21ம் ஆண்டிற்குப் பிந்தைய காலத்தில் கண்டறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத்தமிழ் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை குறிப்புகள் ஆங்கில அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கில அறிக்கையில் உள்ள குறிப்புகளின் பொருள் இத்தமிழ் அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தமிழ் அறிக்கையில் ஏதாவது ஐயம் எழுமானால், ஆங்கில அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

கண்ணோட்டம்

கண்ணோட்டம்

இந்த அறிக்கையில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தை செயல்படுத்துவதற்கான குறிப்பிட்ட பகுதிமீதான இணக்கத் தணிக்கை மற்றும் 12 இணக்கத் தணிக்கை பத்திகள் உள்ளன.

தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்க திட்டத்தின் செயலாக்கத்தின் (National Mission for Sustainable Agriculture (NMSA)) மீதான குறிப்பிட்ட பகுதி இணக்கத் தணிக்கை

வருடாந்திர செயற் திட்டங்களில் (Annual Action Plans - AAP) முன்மொழியப்பட்ட நிதிச் செலவினங்களைக் கணிசமாகக் குறைத்ததால், மாநிலத்தில் NMSAன் அமலாக்கம் பாதிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட செலவினங்களின் அடிப்படையில் AAPகளை மறுசீரமைப்பதில் GoTN தவறியதால், கூறுகளுக்கு நிதி வளங்கள் குறைவாக அளிக்கப்பட்டது மற்றும் திட்டங்களின் துணைக் கூறுகள் குறைக்கப்பட்டன. மானாவாரிப் பகுதி மேம்பாட்டின் (Rainfed Area Development - RAD) கீழ் உள்ள பகுதி எந்த அர்த்தமுள்ள தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாத அளவுக்கு மிகக் குறைவாக இருந்தது. கீழிருந்து மேல் நோக்கு திட்டமிடல் (bottom-up planning) இல்லாமை மற்றும் பண்ணை நீர் மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கேற்ப செயல்படுதல் ஆகிய திட்டத்தின் கூறுகளைத் தவிர்ப்பது, முழுமையான திட்டமிடலை மோசமாக பாதித்தது. பயனாளிகளை அடையாளம் காணுதலில் தவறுகள், வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்புகளில் குறைபாடுகள் போன்ற காரணங்களால் கள அளவிலான செயலாக்கம் பயனற்றதாயிற்று.

➢ AAPயானது, கீழிருந்து மேலாக திட்டமிடல் என்ற கருத்தின்படி தயாரிக்கபடாததால், அடிப்படை உண்மைகளுடன் கூடிய ஒரு வரிசைப்படுத்தல் திட்டத்தில் காணப்படவில்லை. இதனால் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு திட்டத்தின் கீழ் உள்ள பயன்களை அளிப்பதில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.

(பத்தி 2.1.6.1; பக்கம் 9)

➢ 2018-21 ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த மானாவாரிப் பரப்பான 22.12 இலட்சம் ஹெக்டேருடன் ஒப்பிடும்போது, NMSAன் கீழ் உட்படுத்தபட்ட 0.52 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு (2.34 விழுக்காடு) மிகவும் குறைவாக இருந்தது. NMSAன் கீழ் மானாவாரிப் பகுதியின் பரப்பளவு குறைவாக இருப்பதற்கு மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்காதது அதற்கான காரணங்களுள் ஒன்றாகும்.

(பத்தி 2.1.6.2; பக்கம் 10)

- மானாவாரிப் பகுதி மேம்பாட்டை செயல்படுத்துவதில் உள்ள முக்கிய இன்னல்கள், பயனாளிகளின் முறையற்ற தேர்வு, நிழல் வலை வீடுகளுக்கு வழங்கப்பட்ட மானியத்தை தவறாகப் பயன்படுத்தியது (₹ 2.47 கோடி), கறவை மாடுகள்/எருமைகள் வாங்குதலுக்கு அளிக்கப்பட்ட மானியம் (₹ 14.70 இலட்சம்), நிலமற்ற பயனாளிகளுக்கு தவறாக அளிக்கப்பட்ட மானியம் (₹ 36.75 இலட்சம்) ஆகியவை ஆகும்.

(பத்திகள் 2.1.8.1 முதல் 2.1.8.4 வரை; பக்கங்கள் 17 முதல் 21 வரை)

- தேனீ வளர்ப்பு அலகுகளுக்கான துணைக் கூறுகள் சரிவர செயல்படுத்தப்படாததால், 169 விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்ட ₹ 10.34 இலட்சம் பயனற்ற செலவினம் ஆனது.மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், IFS கூறுகளின் கீழ் வழங்கப்பட்ட பழ நாற்றுகளின் துளிர்க்கை விகிதம் வெறும் 58.76 விழுக்காடாக இருந்தது.

(பத்திகள் 2.1.8.5 முதல் 2.1.8.6 வரை; பக்கங்கள் 21 முதல் 22 வரை)

- மூன்றாம் தரப்பு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு நடத்தப்படவில்லை. 2018-21ல் உருவாக்கப்பட்ட மொத்த 4,08,554 சொத்துக்களில், எதுவும் புவிசார் குறியிடப்படவில்லை.

(பத்திகள் 2.1.10.2 மற்றும் 2.1.10.3; பக்கம் 31)

இணக்க தணிக்கை பத்திகள்

- "அண்ணா பல்கலைக்கழகத்தின்" உள் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் குறியீட்டு விதிகளை மீறுதல் ஆகியவற்றின் விளைவாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் செய்வதற்கான முறையற்ற பண செலுத்தங்கள் ஏற்பட்டது.

(பத்தி 3.1.1; பக்கம் 35)

- "தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்" மண்டல மேலாளர்களால் கொள்முதல் நடைமுறை மீறப்பட்டமை மற்றும் உள் கட்டுப்பாடுகளின் தோல்வி காரணமாக ₹ 3.22 கோடி ஏற்றுக்கொள்ள முடியாத செலவினம் ஏற்பட்டது.

(பத்தி 3.1.2; பக்கம் 40)

- GoTN கட்டுமானத் தொழிலாளர்கள் தங்குவதற்கு இரண்டு தங்குமிடங்களைத் தேவை மதிப்பீடு ஆய்வு மேற்கொள்ளாமலும், மற்றும் கட்டட அமைப்பாளர்களுடன் இணைந்து செயல்படாமலும் கட்டியது. இந்த தங்கும் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டதிலிருந்து பயன்படுத்தபடாமல் இருப்பதால் ₹ 31.66 கோடி பயனற்ற செலவினமாக மாறியது.

(பத்தி 3.2.1; பக்கம் 44)

- சொந்த சீருடை பரிந்துரைத்த 72 மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 31,152 மாணவர்களுக்கு சீருடை வழங்குவதில் ₹ 4.13 கோடி வீண் செலவு ஏற்பட்டது. மேலும், 49 மாதிரி பள்ளிகளில் 21,086 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ₹ 2.22 கோடி மதிப்பிலான சீருடைகள் மிகக்குறைவாக மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

(பத்தி 3.2.2; பக்கம் 46)

- “மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின்” மின்-பாடத்தொகுப்புகள் மற்றும் மின்-கற்றல் முகப்பு உருவாக்குதலுக்கான ஒப்பந்த ஆவணங்கள் தயாரிப்பதில் முறைகேடுகள், ஒப்பந்த மதிப்பீட்டில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் ஒப்பந்ததாரர் வழங்கிய சேவையின் தரத்தை உறுதி செய்யத் தவறியதால் ₹ 10.70 கோடி தேவையற்ற செலவினமும் ₹ 5.17 கோடி தொகை செலுத்தும் எதிர்பாரா பொறுப்பும் ஏற்பட்டது.

(பத்தி 3.3.1; பக்கம் 49)

- மத்திய அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல், நீர்ப்பாசனத் குளங்களை செப்பனிடுதல், புதுபித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியவற்றுக்கான திட்டத்தை விரைவாக செயல்படுத்தியதால், மத்திய அரசின் ₹ 29.95 கோடி உதவித் தொகை கிடைக்கப்பெறவில்லை. இது மாநில அரசின் நிதி, நிலைக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தியது.

(பத்தி 3.3.2; பக்கம் 56)

- நடைபெற்று வந்த கட்டுமானப் பணிகளை இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக காப்பீடு (Insurance) செய்ய ஒப்பந்தக்காரர் தவறியது, மற்றும் ஒப்பந்த நிபந்தனையை தள்ளுபடி செய்ததன் விளைவாக, ஒக்கி (Ockhi) புயலினால் ஏற்பட்ட சேதங்களின் மறுசீரமைப்பில் ₹ 3.15 கோடி தவிர்க்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது.

(பத்தி 3.4.1; பக்கம் 58)

- வேலூர் மாவட்டத்தில் உழவர்களுக்கு நெல் விதைகளை அவர்கள் தேவைக்கேற்ப வழங்காததால், 590 மெட்ரிக் டன் நெல் விதைகள் அதிகளவில் வழங்கப்பட்டுள்ளது, இது தவிர்க்ககூடிய ₹ 1.33 கோடி கூடுதல் செலவிற்கு வழிவகுத்தது.

(பத்தி 3.4.2; பக்கம் 61)

- மூன்று அரசு மருத்துவமனைகளின் தலைவர்களின் செயல்பாட்டால் MRI ஸ்கேனர்கள் பொருத்துவதற்கான இடத்தை அடையாளம் காண்பதில் தாமதம் ஏற்பட்டது. இதன் விளைவாக ₹ 1.12 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது மற்றும் தேவைப்படும் நோயாளிகளுக்கு MRI ஸ்கேன் சேவைகள் தொடங்குவதில் ஒரு வருடத்திற்கும் மேலாக தாமதம் ஏற்பட்டது.

(பத்தி 3.4.3; பக்கம் 64)

- திருச்சிராப்பள்ளி அருகே கள்ளிக்குடியில் ₹ 77.04 கோடி செலவில் கட்டப்பட்ட மத்திய வணிக வளாகம், முறையற்ற திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் உரிய நிலம் அடையாளம் காணப்படுவதில் உள்ள குறைபாடுகளால் நான்கு ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் உள்ளது.

(பத்தி 3.5.1; பக்கம் 68)

- ஐந்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில், விடுதிகள் செயல்பட போதிய முன்முயற்சிகள் இல்லாததால், ₹ 6.64 கோடி பயனற்ற செலவினம் ஏற்பட்டது.

(பத்தி 3.5.2; பக்கம் 70)

- மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையத்தை உருவாக்கத் தவறியதால், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ₹ 2.27 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டடம் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. மேலும், ஓராண்டுக்கும் மேலாக, ₹ 2.73 கோடி வங்கிக் கணக்கில் முடக்கப்பட்டது.

(பத்தி 3.5.3; பக்கம் 73)

அத்தியாயம் I

முன்னுரை

அத்தியாயம் I

முன்னுரை

1.1 இவ்வறிக்கை பற்றிய விவரம்

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) தமிழக அரசின் (GoTN) மீதான இவ்வறிக்கையானது தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் மீதான குறிப்பிட்ட பகுதியின் (specific area) இணக்கத் தணிக்கை மற்றும் முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), தமிழ்நாடு, அவர்களின் தணிக்கைக்கு உட்பட்ட அரசுத் துறைகள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மீதான இணக்கத் தணிக்கை ஆகியவற்றின் மூலம் எழும் குறிப்புகள் தொடர்பானதாகும்.

மாநில சட்டமன்றத்தின் பார்வைக்கு தணிக்கையின் முக்கிய விளைவுகளை கொண்டு செல்வதே இவ்வறிக்கையின் முக்கிய நோக்கமாகும். நிதிசார் நடவடிக்கைகளின் இயல்பு, அளவு மற்றும் பரிமாணம் ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் அறிக்கையளித்தலின் தன்மை இருக்க வேண்டும் என்று CAGயால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரநிலைகள் கூறுகின்றன. சிறந்த ஆட்சி முறைக்கும், அரசு அமைப்புகளின் மேம்பட்ட நிதி மேலாண்மைக்கும் வழி வகுக்கும் தகுந்த கொள்கை முடிவுகளையும், ஆணைகளையும் உருவாக்கவும் அவற்றை நிறைவேற்றுபவர்கள் தகுந்த திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும் தணிக்கைக் கண்டுபிடிப்புகள் உதவிட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பொருத்தமான சட்டங்கள், விதிகள் முறைமைகள், பல்வேறு ஆணைகள், தகுதி வாய்ந்த அமைப்புகளின் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு, தணிக்கைக்குட்படுத்தப்படும் அமைப்புகள் இணங்கி நடக்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள அந்த அமைப்புகளின் வரவுகள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளின் ஆய்வையே இணக்கத் தணிக்கை குறிக்கிறது.

குறிப்பிட்ட பகுதி மீதான இணக்கத் தணிக்கையானது, திட்டத்தின் நோக்கங்கள் எந்த அளவு சிக்கனமாகவும், சிறந்த முறையிலும், பயனுள்ளதாகவும் நிறைவேறின என்பதை ஆராய்கிறது.

தணிக்கைக்கு உட்படுத்தப்படும் அமைப்புகளின் விவரம், தணிக்கைக்குத் திட்டமிடல், தணிக்கையின் அளவு மற்றும் தணிக்கைக் குறிப்புகளின் தொடர் நடவடிக்கைகள் இந்த அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன. குறிப்பிட்ட பகுதி மீதான இணக்கத் தணிக்கையின் குறிப்புகள் அத்தியாயம் IIலும், பல்வேறு துறைகள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நடவடிக்கைகள் மீதான இணக்கத் தணிக்கையின் குறிப்புகள் அத்தியாயம் IIIலும் தரப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில் உபயோகிக்கப்பட்ட சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டும் 108ம் பக்கத்தில் உள்ளது

1.2 தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட அமைப்புகளின் விவரக் குறிப்புகள்

மாநிலத்தில் தலைமைச் செயலக அளவில் கூடுதல் தலைமை செயலர்கள்/முதன்மை செயலாளர்கள்/செயலாளர்கள் தலைமையில் இயங்கும் 36 துறைகள் உள்ளன. இவர்களுக்கு உதவியாக ஆணையர்கள், இயக்குநர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் செயல்படுகின்றனர். இவற்றில் 18 பொதுத்துறை நிறுவனங்கள், 765 தன்னாட்சி/உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 23 துறைகள், முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), தமிழ்நாடு, அவர்களின் தணிக்கைக்கு உட்பட்டவையாகும்.·

அரசு, 2020-21ல் மேற்கொண்ட செலவினம் அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளோடு ஒப்பீடு செய்யப்பட்டதன் நிலை **அட்டவணை 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.1: செலவினங்களின் ஒப்பீட்டு நிலை

(₹ கோடியில்)

செலவுகள்	2016-17	2017-18	2018-19	2019-20	2020-21
வருவாய் செலவினம்	***1,53,195***	***1,67,874***	***1,97,200***	***2,10,435***	***2,36,402***
பொதுச் சேவைகள்	51,452	60,451	72,450	78,138	78,993
சமூக சேவைகள்	55,297	59,790	70,202	73,999	89,805
பொருளாதார சேவைகள்	33,980	36,162	39,669	42,610	51,808
உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும்	12,466	11,471	14,879	15,688	15,796
மூலதனச் செலவினம்	***20,709***	***20,203***	***24,311***	***25,632***	***33,067***
வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும்	***26,046***	***6,517***	***6,478***	***4,022***	***3,835***
பொதுக்கடன் திருப்பிச் செலுத்துவது	***8,200***	***8,991***	***15,064***	***17,866***	***16,228***
எதிர்பாராச் செலவு நிதி	***இல்லை***	***இல்லை***	***10***	***இல்லை***	***இல்லை***
பொதுக் கணக்கு செலவுகள்	***1,73,007***	***1,84,209***	***2,23,930***	***2,44,023***	***3,23,189***
மொத்தம்	**3,81,157**	**3,87,794**	**4,66,993**	**5,01,978**	**6,12,721**

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

1.3 தணிக்கை செய்வதற்கான அதிகாரம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள், 149 மற்றும் 151 மூலமும் மற்றும் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவரின் (கடமைகள், அதிகாரம் மற்றும் பணி முறைமைகள்) (CAG's DPC) சட்டம், 1971ன் மூலமும் CAG தணிக்கை செய்வதற்கான அதிகாரத்தைப் பெறுகிறார். இச்சட்டத்தின் பிரிவு 13[1]ன் கீழ் தமிழ்நாடு அரசுத் (GoTN) துறைகளின் செலவுகளை CAG தணிக்கை

[1] (i) மாநிலத்தின் தொகு நிதியிலிருந்தான அனைத்து நிதி நடவடிக்கைகள், (ii) எதிர்பாராச் செலவு நிதி மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான அனைத்து நிதி நடவடிக்கைகள், (iii) வணிகம், உற்பத்தி, இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இதர துணை கணக்குகள் ஆகியவற்றின் மீதான தணிக்கை.

செய்கிறார். இச்சட்டத்தின் பிரிவு 19(2)[2]ன் கீழ் தணிக்கை செய்யப்படும் ஒரு தன்னாட்சி அமைப்புக்கு CAG பிரத்யேக தணிக்கையாளராவார். CAGன் DPC சட்டம் பிரிவு 19 (1)ன் கீழ் அரசு நிறுமங்களின் தணிக்கை நடத்தப்படுகிறது. மேலும், அரசால் கணிசமான அளவு நிதியுதவி வழங்கப்படும் இதர தன்னாட்சி அமைப்புகளின் தணிக்கையும் இச்சட்டத்தின் பிரிவு 14[3]ன் கீழ் CAGஆல் மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு தணிக்கைகளுக்கான கொள்கைகள் மற்றும் வழிமுறைகள், CAGஆல் 2020ல் வெளியிடப்பட்ட தணிக்கை மற்றும் கணக்குகள் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் CAGன் தணிக்கைத் தரநிலைகள் 2017 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.4 திட்டமிடல் மற்றும் தணிக்கை நடத்துதல்

ஒட்டுமொத்தமாக துறைகள்/அமைப்புகளில் தவறு நிகழக்கூடிய வாய்ப்புகளின் மதிப்பீடு, அரசுத் துறைகளின் ஒவ்வொரு அலகும் மேற்கொண்ட செலவினம், அவற்றின் வகை, துறை மேற்கொண்ட நடவடிக்கைகளின் முக்கியத்தன்மை/ சிக்கலான தன்மை, நிதிசார்ந்த அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்ததன் அளவு, உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளின் மதிப்பீடு மற்றும் சம்பந்தப்பட்டோரின் விசாரங்கள், அபாயநிலை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளின் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கை செயல்முறை துவக்கப்படுகிறது. இம்மதிப்பீடுகளில் முந்தைய ஆண்டுகளில் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறிப்புகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. தவறு நிகழக்கூடிய வாய்ப்புகளின் மதிப்பீட்டு அடிப்படையில், தணிக்கைக்கான காலஇடைவெளி மற்றும் தணிக்கையின் பரப்பு ஆகியவை முடிவு செய்யப்படுகின்றன. மேலும், மேற்கண்ட அடிப்படையில் தணிக்கை மேற்கொள்வதற்காக, ஆண்டு தணிக்கைத் திட்டம் வகுக்கப்படுகிறது.

தணிக்கை முடிவடைந்த பின்னர், தணிக்கைக் குறிப்புகள் அடங்கிய ஆய்வறிக்கைகள் தணிக்கை செய்யப்பட்ட அலுவலகங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வறிக்கைகள் பெறப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் தணிக்கைக் குறிப்புகளுக்கு பதில் அளித்திட அவ்வலுவலகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பதில்கள் பெறப்படும் நேர்வுகளில், தணிக்கைக் குறிப்புகள் தீர்வு செய்யப்படுகின்றன அல்லது விதிகளின் படி மேல்நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகின்றனர். ஆய்வறிக்கைகளில் உள்ள முக்கிய தணிக்கைக் குறிப்புகளை மாநில சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கும் பொருட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 151ன் கீழ், மாநில ஆளுநருக்கு அனுப்பப்படும் தணிக்கை அறிக்கைகளில் சேர்ப்பதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

---

[2] சம்பந்தப்பட்ட சட்டங்களில் செய்யப்பட்டுள்ள வழிவகைக்கு ஏற்ப பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது பாராளுமன்றம் தாமே நிறுவிய கழகங்களின் கணக்குகள் மீதான தணிக்கை (நிறுமங்கள் அல்லாதவை).

[3] (i) மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து கணிசமாக மானியங்கள் அல்லது கடன்கள் மூலம் நிதியுதவி பெறும் ஒரு அமைப்பு/அதிகார அமைப்பின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்களின் தணிக்கை மற்றும் (ii) ஒரு நிதியாண்டில் மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவி ₹ 1 கோடிக்கு குறையாமல் உள்ளதோ அவ்வகை அமைப்பு/அதிகார அமைப்பின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்களின் தணிக்கை.

1.5 தணிக்கைக்கான பதிற்குறிப்பு

1.5.1 வரைவு தணிக்கை பத்திகள் மற்றும் குறிப்பிட்ட பகுதி மீதான இணக்கத் தணிக்கைகள்

ஆறு வார காலத்திற்குள் தங்களது மறுமொழிகளை அனுப்பவேண்டும் என்ற வேண்டுகோளுடன் 14 வரைவுத் தணிக்கைப் பத்திகளும் ஒரு குறிபிட்ட பகுதி மீதான இணக்கத் தணிக்கையும் சம்பந்தப்பட்ட துறைகளின் கூடுதல் தலைமை செயலாளர்கள்/முதன்மை செயலாளர்கள்/சம்மந்தப்பட்ட துறை செயலாளர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் மூலம் ஆகஸ்ட் 2021 முதல் நவம்பர் 2021 வரையிலான காலத்தில் அனுப்பி வைக்கப்பட்டன. அனுப்பப்பட்ட தணிக்கைப் பத்திகள் அனைத்திற்கும் துறையின் மறுமொழிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட மறுமொழிகள், இவ்வறிக்கையில் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசுப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களும் இவ்வறிக்கையை இறுதி செய்யும் போது கருத்தில் கொள்ளப்பட்டன.

1.5.2 ஆய்வறிக்கைகளின் நிலுவை நிலை

31 மார்ச் 2021 அன்றுள்ளவாறு, பல்வேறு துறைகளுக்கும் மற்றும் அதனுடைய துணை அலுவலகத்திற்கும் 30 செப்டம்பர் 2020 வரை அனுப்பப்பட்ட 15,791 பத்திகளை கொண்ட 3,531 ஆய்வறிக்கைகள் ஆறு மாத காலத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்தன. இதன் விவரங்கள் **இணைப்பு 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2020-21 ஆம் ஆண்டில், நிலுவையில் உள்ள ஆய்வறிக்கைகள் மற்றும் பத்திகளை தீர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம், செப்டம்பர் 2019ல் நிலுவையிலிருந்த ஆய்வறிக்கைகள் மற்றும் பத்திகள், செப்டம்பர் 2020ல், முறையே 4,346ல் இருந்து 3,531 ஆகவும் 18,083ல் இருந்து 15,791 ஆகவும் குறைந்துள்ளன**.** அலுவலகத் தலைவர்கள்/துறைத் தலைவர்கள் மேற்கூறப்பட்டதற்காக எடுத்த முயற்சி பாராட்டப்படத்தக்கதாக இருப்பினும், பெரும் எண்ணிக்கையிலான ஆய்வறிக்கைகள் நிலுவையிலுள்ளமை, ஆய்வறிககளில் சுட்டிகாட்டப்பட்ட குறைப்பாடுகள், மற்றும் முறைகேடுகளை களைவதற்கு இவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதை சுட்டிக் காட்டுகிறது.

1.6 பரிந்துரைகள்

பொதுவாக துறைத் திட்டங்களின் செயலாக்கத்தின் மீதான சிறந்த நடவடிக்கைகளையும் கண்காணிப்பையும் மேம்பாடு அடையச் செய்ய உதவும் நிர்ணயிக்கப்பட்ட உள்செயல்முறை மற்றும் ஒழுங்கு முறைகளை கடைபிடிக்காமை உள்ளிட்ட பல நிகழ்வுகள் மீது குறிப்பிட்ட பரிந்துரைகளை இவ்வறிக்கை கொண்டுள்ளது. இப்பரிந்துரைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படுமாறும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தகுந்த நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யுமாறும் மாநில அரசிடம் எடுத்துச் சொல்லப்படுகிறது.

1.7 தணிக்கை அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கை

தணிக்கை அறிக்கையில் உள்ளடங்கிய தணிக்கை பத்திகளுக்கான விளக்க குறிப்புகளை தணிக்கை அறிக்கை சட்ட பேரவையில் வைக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அரசு துறைகள் சமர்ப்பிக்க வேண்டும் என சட்டசபைக்கான பொதுக் கணக்குக் குழு காலவரையறை நிர்ணயித்துள்ளது. இந்த விளக்க குறிப்பில் சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்போகும் நடவடிக்கைகளை குறிப்பிட வேண்டும்.

31 மார்ச் 2022ல் உள்ளவாறு பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகளுக்கான நிலுவையிலுள்ள விளக்கக் குறிப்புகள் **அட்டவணை 1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது

அட்டவணை 1.2 : பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகளுக்கான விளக்கக் குறிப்புகள் பெறப்படாமை

பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகளுக்கு வரவேண்டிய விளக்கக்குறிப்புகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்	தணிக்கை அறிக்கை		
	2017-18 வரை	2018-19	2019-20
அரசு துறைகள்/தன்னாட்சி அமைப்புகள்	198	23	23

மேலும், பொதுக் கணக்குக் குழுவின்(PAC) பரிந்துரைகள் மீது, அரசு துறைகள் நடவடிக்கை எடுத்ததற்கான அறிக்கைகளை (Action Taken Notes - (ATNs)) சமர்ப்பிக்க வேண்டும். மார்ச் 2022ல் உள்ளவாறு, 1979-80 முதல் 2015-16 வரையிலான அரசு துறைகள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய தணிக்கை அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழுவால் (PAC) வழங்கப்பட்ட 904 பரிந்துரைகளுக்கு ATNகளை துறைகள் அளிக்கவில்லை.

அத்தியாயம் II

குறிப்பிட்ட பகுதி மீதான இணக்கத் தணிக்கை

2.1 நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் செயலாக்கம்

2.1.1 முன்னுரை

இந்திய அரசு (GoI) 2014ல், 60:40 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில நிதியுதவியுடன், மத்திய நிதியுதவி திட்டமாக, நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் செயலாக்கத்தை (National Mission for Sustainable Agriculture - NMSA) தொடங்கியது. மேம்படுத்தப்பட்ட பண்ணை நடைமுறைகள், கால்நடைகள் மற்றும் மீன் வளர்ப்பு, நீர் பயன்பாட்டு திறன், பூச்சி (pest) மேலாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை, விவசாய காப்பீடு, கடன் ஆதரவு போன்றவற்றின் மூலம் நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயத்தை அதிக ஆக்கப்பூர்வமாக்குதலை NMSA நோக்கமாகக் கொண்டுள்ளது. NMSA கட்டமைப்பானது நிலையான வேளாண்மை தொடர்பான அனைத்து நடைமுறையிலுள்ள மற்றும் புதிதாக முன்மொழியப்பட்ட செயல்பாடுகள்/திட்டங்களை ஒன்றிணைத்து, ஒருங்கிணைத்து மற்றும் உட்படுத்துவதன் மூலம் வடிவமைக்கப்பட்டது.

இது ஏற்கனவே உள்ள நான்கு திட்டங்களான, (i) நுண்ணீர் பாசனத்திற்கான தேசிய இயக்கம், (National Mission on Micro Irrigation) (ii) இயற்கை வேளாண்மைக்கான தேசிய திட்டம் (National Project on Organic Farming), (iii) மண் வளத்தை நிர்வகிப்பதற்கான தேசிய திட்டம் (National Project on Management of Soil Health and Fertility) மற்றும் (iv) மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டம் (Rainfed Area Development Programme) ஆகியவற்றை உட்படுத்தியுள்ளது . NMSAன் கீழ் உள்ள திட்டங்கள்:

- **மானாவாரி பகுதி மேம்பாடு (RAD)**: தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தொகுப்புகளில் செயல்படுத்தப்படும் இந்தக் கூறு, பயிர்கள், தோட்டக்கலை, கால்நடைகள், மீன் வளர்ப்பு, வனவியல் போன்ற வேளாண்மையின் பல கூறுகளை ஒருங்கிணைத்து பொருத்தமான விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **மண்வள மேலாண்மை (Soil Health Management - SHM)**: வயலின் தேவையற்ற அகற்றல்களின் (residue) மேலாண்மை, இயற்கை வேளாண்மை நடைமுறைகள், நிலத் திறனை அடிப்படையாகக் கொண்ட நிலப் பயன்பாடு, உரங்களின் தேவைகேற்ப அளவான பயன்பாடு மற்றும் மண்ணரிப்பு/சீரழிவைக் குறைத்தல் உள்ளிட்ட நீடித்த நிலையான மண் வள மேலாண்மை முறைகளை மேம்படுத்துவதை SHM நோக்கமாகக் கொண்டுள்ளது. மண்வள அட்டைகள் (SHC) மற்றும் பரம்பரகட் கிரிஷி விகாஸ் யோஜ்னா (PKVY) ஆகியவற்றை வழங்குவதும் இதில் அடங்கும்.
- **பண்ணை நீர் மேலாண்மை (On Farm Water Management - OFWM):** OFWM ஆனது நீர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், திறமையான நீர் விநியோகம் மற்றும் விநியோக அமைப்புகள், பண்ணைக் குட்டைகளைத் தோண்டுதல் போன்றவற்றைப் பின்பற்றுகிறது.

- **காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வேளாண்மை (Climate Change and Sustainable Agriculture - CCSA):** விவசாயிகள் மற்றும் அறிவியல் நிறுவனங்களுக்கு இடையே காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவை இருதரப்புப் பரப்புதல்.

2.1.2 NMSA திட்ட அமலாக்கத்திற்கான நிறுவன அமைப்பு

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசாங்கச் செயலர் (Agriculture Production Commissioner - APC) தலைமையிலான வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையானது, வேளாண்மை இயக்குநர் (Director of Agriculture - DoA) மற்றும் இயக்குநர் தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள் (Director of Horticulture and Plantation Crops - DoH) மூலம் திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. வேளாண்மை இணை இயக்குநர்கள் (Joint Directors of Agriculture - JDoA), தோட்டக்கலை துணை இயக்குநர்கள் (Deputy Directors of Horticulture - DDoH) மற்றும் உதவி வேளாண் இயக்குநர்கள் (Assistant Directors of Agriculture - ADA) ஆகியோர் இந்தத் திட்டத்தை களத்தில் செயல்படுத்துகின்றனர். தமிழ்நாடு அரசு (GoTN) தமிழ்நாடு நீர்நிலை மேம்பாட்டு முகமை (Tamil Nadu Watershed Development Agency - TAWDEVA)ஐ NMSAஐ வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காக பல்வேறு துறைகளுடன் திறம்பட ஒருங்கிணைக்கும் மாநில அளவிலான இணைப்பு முகமையாக நியமித்தது (மே 2014).

2.1.3 தணிக்கையின் செயற்பரப்பு மற்றும் முறைமை

NMSAன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயல்பாடுகளை இணக்கத் தணிக்கை உள்ளடக்கியுள்ளது. தணிக்கை, ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2021 வரையிலான காலத்தின் மீதானதாகும். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை ஆகியவற்றின் செயலகம், இயக்குநரகங்கள், TAWDEVA மற்றும் தொடர்பற்ற முறையில் (random) மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்கள் மற்றும் அதில் உள்ள 47 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் உள்ள பதிவுகளை தணிக்கை ஆய்வு செய்தது (**இணைப்பு 2.1**). மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், திட்டத்தைச் செயல்படுத்தும் அனைத்துக் குழுக்களும் விரிவான தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

தணிக்கை முறையானது, 47 மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், RAD, SHC மற்றும் PKVY கூறுகளின் கீழ் பயனடைந்த 5,760 பயனாளிகளில்[1] 956 பயனாளிகளின் கூட்டு நேரடி சரிபார்ப்பு (Joint physical verification - JPV) மற்றும் பயனாளிகள் கருத்தாய்வை உள்ளடக்கியது.

APC உடன் 7 ஜூலை 2021 அன்று நடைபெற்ற நுழைவு கூட்டத்தில் தணிக்கையின் நோக்கங்கள், அளவுகோல்கள், செயற்பரப்பு, தணிக்கை சான்றுகள் மற்றும் வழிமுறைகள் விவரிக்கப்பட்டன. மேலும், தணிக்கை கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் 8 பிப்ரவரி 2022 அன்று APC உடன் நடைபெற்ற நிறைவுக் கூட்டத்தில் விவரிக்கப்பட்டன.

[1] ஐந்து விழுக்காடு பயனாளிகள், ஒரு தொகுப்பிற்க்கு 5 முதல் 10 பயனாளிகளுக்கு மிகாமல்.

2.1.4 தணிக்கையின் நோக்கம்

தணிக்கை நோக்கங்கள் பின்வருவனவற்றை மதிப்பிடுவதே ஆகும்:

(i) துரிதமான மற்றும் திறம்பட்ட செயலாக்கத்தின் பொருட்டு திட்ட நோக்கங்களை சாத்தியமான களத் திட்டங்களாக மாற்றியமைத்தலில் திட்டமிடல் பயனுள்ளதாக இருந்ததா?

(ii) பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு திறமையாக திட்டம் செயல்படுத்தப்பட்டதா மற்றும் நிலையான விவசாயத்தை உறுதி செய்வதில் அதன் நோக்கங்களை அடைந்ததா?

(iii) திட்டமானது துறைகளுக்கிடையே மற்றும் துறையினுள்ளேயான ஒருங்கிணைப்புகளுடன் திறம்பட செயல்படுவதைக் கண்காணிக்க ஒரு திறமையான அமைப்பு உள்ளதா?

2.1.5 தணிக்கையின் அளவுகோல்கள்

தணிக்கை கண்டுபிடிப்புகள் பின்வரும் அளவுகோல்களுக்கு எதிராக தரப்படுத்தப்பட்டன:

- இந்திய அரசு 2014 மற்றும் 2017 ல் வழங்கிய செயல்பாட்டு வழிகாட்டுநெறிமுறைகள்.
- தமிழக அரசு வழங்கிய வழிகாட்டுநெறிமுறைகள். தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம் 1998; அவ்வப்போது வெளியிடப்படுகின்ற அரசு ஆணைகள், துறைசார் கையேடுகள், நடைமுறைகள், நிர்வாக அறிவுரைகள் மற்றும் சுற்றறிக்கைகள்.
- மாநில அளவிலான குழுவின் (State Level Committee - SLC) கூட்டங்களின் விவரச் சுருக்கங்கள்.

2.1.6 NMSA செயல்படுத்தலுக்கான திட்டமிடல்

இந்திய அரசால் (GoI) வெளியிடப்பட்ட (2014) வழிகாட்டுநெறிமுறைகளின்படி, ஐந்து முதல் ஏழு ஆண்டுகள் வரையிலான காலகட்டத்திற்கான அமலாக்கத் திட்டத்தையும் (Mission Implementation Plan - MIP), மாவட்ட செயல்திட்டங்களின் (District Action Plans - DAP) அடிப்படையில் வருடாந்திர செயல்திட்டங்களையும் (Annual Action Plans - AAP) அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். திட்டமிடல் செயல்முறையுடன் (Planning process) தொடர்புடைய பதிவுகளின் ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

2.1.6.1 வருடாந்திர செயல் திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் உருவாக்குவதில் உள்ள குறைபாடுகள்

AAPகளின் தயாரிப்பின் வழிகாட்டுதலுக்கு GoTN, MIPஐத் தயாரிக்கவில்லை. எனவே, AAPகள் ஒரு முழுமையான மூலோபாயத்தை (strategy) அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. MIP இல்லாத நிலையில், NMSA திட்டம், விவசாய நிலதின் பரப்பளவு/விவசாயிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான நீண்ட கால இலக்கு இல்லாமல் அமலாக்கப்பட்டது. இது **பத்தி 2.1.6.6**ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி,

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு இடையே திட்டத்தின் கீழ் பலன்கள் வழங்குதலில் சமசீராக இல்லாத நிலை ஏற்படுத்தியது.

வழிகாட்டுநெறிமுறைகளின்படி, AAP மாநில இணைப்பு முகமையால் (TAWDEVA) தயாரிக்கப்பட வேண்டும், மேலும் APC தலைமையிலான மாநில அளவிலான குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட இயக்கக் குழு (DMC) அங்கீகரித்த DAPன் அடிப்படையில் AAP தயாரிக்கப்பட வேண்டும். மாவட்ட அளவிலான அலுவலர்களால் DAPகள் தயாரிக்கப்படவில்லை என்பதும், மாவட்ட ஆட்சியர்கள் திட்டமிடல் பணியில் ஈடுபடவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. எனவே, AAPகள் உண்மை தேவைகளின் அடிப்படையில் கீழிருந்து மேல் செல் அணுகுமுறை கொண்டு திட்டமிடல் முறையைப் பின்பற்றாமல் தயாரிக்கப்பட்டன. இது, தேனீ வளர்ப்பு அலகுகள் **(பத்தி 2.1.8.5)**, குறைவான துளிர்க்கை விகிதம் கொண்ட பழ நாற்றுகள் **(பத்தி 2.1.8.6)** மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), ஒருங்கிணைந்த நீர்நிலை மேலாண்மை திட்டம் (IWMP) போன்றவற்றின் கீழ் உள்ள வளங்களை இணைக்காதது **(பத்தி 2.1.6.2)** போன்ற இன்னல்களுக்கு வழிவகுத்தது.

ஒருங்கிணைந்த மாநில AAP ஆனது DAPகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). ஆனால், மாவட்ட அளவிலான அதிகாரிகள், தணிக்கைக்கு பதிலளித்ததில், DAPகள் தயார் செய்யப்படவில்லை என்று தெரிவித்தனர்.

2.1.6.2 மற்ற திட்டங்களுடன் ஒன்றிணைக்காததன் காரணமாக மிகக்குறைந்த அளவிலான செயல்பாடு

RAD என்பது NMSAன் முக்கிய அங்கமாகும். இது நிலத்தொகுப்பு அணுகுமுறையில் செயல்படுத்தப்படுகிறது. NMSAன் RAD கூறினை, 2018-21 ஆம் ஆண்டில், 0.52 இலட்சம் ஹெக்டேர்[2] பரப்பளவில் 587 நிலத்தொகுப்புகளில் செயல்படுத்த GoTN திட்டமிட்டுள்ளது. 2018-21ஆம் ஆண்டில் இந்தக் கூறுக்காக முன்மொழியப்பட்ட ₹ 230.25 கோடிக்கு எதிராக ₹ 165.37 கோடி அனுமதிக்கப்பட்டது. மாநிலத்தில் மொத்த மானாவாரி நிலப்பரப்பான 22.12 இலட்சம் ஹெக்டேரை கருத்தில் கொண்டு நோக்குகையில், NMSAன் (2.34 விழுக்காடு) கீழ் கையாளப்பட்ட (covered) 0.52 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு மிகச் சிறியதாகவும், கணிசமான தாக்கத்தை ஏற்படுத்த இயலாத அளவிலும் இருந்தது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), ஒருங்கிணைந்த நீர்நிலை மேலாண்மைத் திட்டம் (IWMP), ராஷ்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY) போன்ற பிற திட்டங்கள்/இயக்கங்களின் வளங்களைப் பயன்படுத்தி, திட்ட செயலாக்கத்தை ஒருங்கிணைக்க இந்தத் திட்ட வழிகாட்டுநெறிமுறைகள் கருதுகின்றன. ஆயினும், கீழிலிருந்து மேல் செல் அணுகுமுறை கொண்டு திட்டமிடல் முறையைப் பின்பற்றாததால் பிற திட்டங்களின் நிதியைப் பயன்படுத்தி, NMSAன் கீழ் அதிக பகுதிகளை உள்ளடக்குவதற்கான ஒருங்கிணைப்பை அடைய இயலவில்லை. எனவே, NMSAன் கீழ் மாநிலத்தில் மானாவாரிப் பரப்பு குறைவாக இருப்பதற்கு மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்காதது ஒரு காரணம் என்று தணிக்கை கண்டறிந்தது. 0.52 இலட்சம் (மொத்த மானாவாரி பரப்பளவில் 2.34 விழுக்காடு)

[2] வேளாண்மைத் துறை மூலம் 43,274 ஹெக்டேர் மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் 8,452 ஹெக்டேர்.

ஹெக்டர் பரப்பளவிற்க்கு ₹ 165.37 கோடி செலவு செய்வது, செலவிடப்பட்ட தொகைக்கு விகிதாச்சாரமாக (proportionate) இல்லை என்பதால், இது ஒரு திறனான நிதிப்பயன்பாடாக (effective intervention) ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என தணிக்கை குறிப்பிட்டுள்ளது.

அனைத்து திட்டங்களையும் தனி ஒரு விவசாயி அளவில் ஒருங்கிணைப்பது சாத்தியமில்லை என்று GoTN பதிலளித்தது. ஆனால், கிராம அளவில் மற்ற துறைகளுடன் ஒன்றிணைக்கப்படுகிறது என்றும் தெரிவித்தது (பிப்ரவரி 2022) எனவே, ஒருங்கிணைப்பிற்கான எந்த ஒரு முயற்சியும் கள அளவில தொடங்கப்பட வேண்டும் என்றிருக்க, கீழிலிருந்து மேல் செல் அணுகுமுறை அடிப்படையில் திட்டமிடல் இல்லாமையே ஒருங்கிணைப்பு குறைபாடுகளுக்கு காரணம் என்று தணிக்கை கண்டறிந்தது.

2.1.6.3 RAD கூறுகளை குறைத்தல்

ஒவ்வொரு ஆண்டும், AAP தயாரிக்கும் பொருட்டு உத்தேச நிதிச் செலவினங்களை முன்குறிப்பாக GoI தெரிவிக்கிறது. 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில், GoI வழங்கிய உத்தேச செலவினத்தை விட அதிகமான செலவினத்தை GoTN முன்மொழிந்தது, இது **அட்டவணை 2.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி குறைப்புக்கு வழிவகுத்தது.

அட்டவணை 2.1: திட்ட செலவினம் - RAD

ஆண்டு	GoI முன் குறிப்பிட்ட உத்தேச செலவினம் (₹ கோடியில்)	AAPல் GoTN ஆல் முன்மொழியப்பட்ட செலவு		GoI ஆல் அங்கீகரிக்கப்பட்ட AAP	
		திட்ட அமலாக்கப்பட வேண்டிய பகுதி (ஹெக்டேரில்)	தொகை (₹ கோடியில்)	திட்ட அமலாக்கப்பட்ட பகுதி (ஹெக்டேரில்)	தொகை (₹ கோடியில்)
2018-19	59.16	37,615	96.06	37,615	60.37
2019-20	55.00	7,122	84.19	7,122	55.00
2020-21	50.00	6,989	50.00	6,989	50.00
மொத்தம்	**164.16**	**51,726**	**230.25**	**51,726**	**165.37**

(ஆதாரம்: TAWDEVA வழங்கிய தரவு)

ஒப்புதல் கட்டத்தில் செலவினம் குறைக்கப்பட்டாலும், AAPல் முன்மொழியப்பட்ட பரப்பளவு குறைக்கப்படவில்லை. 2018-19 ஆம் ஆண்டில், குறைக்கப்பட்ட செலவினத்திற்கு இடமளிக்கும் வகையில், துணைக் கூறுகளில் ஒன்றான பண்ணைக் குளம், செயல்பாட்டிலிருந்து முற்றிலும் விலக்கப்பட்டது. முதலில் முன்மொழியப்பட்ட செயல்பாட்டுப் பரப்பளவை குறைக்காமல் திட்டத்தைச் செயல்படுத்த, 2019-20 ஆம் ஆண்டில், ஹெக்டேருக்கு ₹ 1 இலட்சம் என்ற அனுமதிக்கப்பட்ட உதவிக்கு எதிராக, DoA மற்றும் DoH ஆகியவை ஒரு ஹெக்டேருக்கு ₹ 60,000 மட்டுமே அனுமதித்தன. நிதிச் செலவினங்களைக் குறைப்பதன் மூலம் கறவை மாடு/எருமை, தேனீ வளர்ப்பு அலகுகள் ஆகியவற்றின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது மற்றும் அதன் விளைவாக முதலில் திட்டமிட்டபடி திட்டம் செயல்படுத்தப்படாமல் போனது. GoI வழங்கிய தற்காலிக செலவீனத்தை விட அதிகமான செலவீனத்தை முன்மொழிவதும், அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களின் அடிப்படையில் AAPஐ மறுசீரமைக்கத் தவறியதும் பண்ணைக் குளங்கள் செயல்பாட்டைத் தவிர்த்து, திட்டத்தின் பல்வேறு கூறுகளில் நிதி வளங்களைக் குறைந்த அளவில் பயன்படுத்துதல்

போன்றவற்றிக்குக் காரணமாக அமைந்ததை தணிக்கை கண்டறிந்தது. இது, இறுதியில், திட்டத்தின் செயல்திறனை குறைக்கிறது.

2019-20ஆம் ஆண்டில், மண்வள மேலாண்மை (SHM) தொடர்பாக ₹ 36.46 கோடி தற்காலிக செலவீனத்தை GoI குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், GoTN, AAPஐ ₹ 30.79 கோடிக்கு மட்டுமே முன்மொழிந்தது, அதற்கு எதிராக GoI ₹ 18.70 கோடியை அனுமதித்தது. குறைந்த செலவில் AAPயை முன்மொழிவதற்கு TAWDEVA எந்த காரணத்தையும் தெரிவிக்கவில்லை.

தமிழக அரசு (GoTN) கூடுதல் ஒதுக்கீட்டை எதிர்பார்த்து, GoIயிடமிருந்து அதிகபட்ச நிதியைப் பெறுவதற்கு அதிக செலவீனத்தை முன்மொழிந்தது என்று பதிலளித்தது (ஜனவரி 2022). மேலும், GoIஆல் அங்கீகரிக்கப்படாத துணைக் கூறுகள் மட்டுமே நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தது. கறவை மாடுகள் வழங்கல், தேனீ வளர்ப்பு அலகுகள் வழங்கல் மற்றும் நாற்றுகள் வழங்கல் போன்ற துணைக் கூறுகளையும் நிறுத்தி வைத்ததால், GoIஆல் அங்கீகரிக்கப்படாத துணைக் கூறுகளை மட்டுமே நிறுத்தி வைத்ததாகக் கூறுவது தவறானது என்று தணிக்கை கண்டறிந்தது. இந்த குறைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் திட்டம் செயல்படுத்தப்படுவதை பாதிக்கும் வகையில் அமைந்தன.

2.1.6.4 மாநில நிலையான தொழில்நுட்பக் குழுவை உருவாக்காமை

வழிகாட்டுநெறிமுறைகளின்படி, மாநில திட்ட அமலாக்கத்திற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க, மாநில நிலையான தொழில்நுட்பக் குழுவை (State Standing Technical Committee - SSTC) GoTN அமைக்க வேண்டும். இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (Indian Council of Agricultural Research - ICAR), வேளாண் பல்கலைக்கழகம் (Agriculture University - SAUs) போன்றவற்றை சார்ந்த மூன்று முதல் நான்கு தொழில்நுட்ப வல்லுநர்கள், நிலையான விவசாய நடைமுறைகளுக்கான வழிமுறைகளை பரிந்துரைப்பதில் SSTCக்கு உதவ முழுநேர அல்லது ஆலோசனை அடிப்படையில் ஈடுபட வேண்டும். மேலும், மாவட்ட அளவில் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க மாவட்ட அளவிலான ஆலோசகர்களும் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இருப்பினும், GoTN, SSTCஐ உருவாக்கவில்லை என்பதும், திட்டமிடலில் அறிவியல் பூர்வமான வழிகாட்டுதலை வழங்க மாநில அளவில் தொழில்நுட்ப வல்லுநர்களையோ அல்லது மாவட்ட அளவில் மாவட்ட அளவிலான ஆலோசகர்களையோ ஈடுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

பத்தி 2.1.6.5ல் குறிப்பிட்டுள்ளபடி, நிபுணர்கள் இல்லாத நிலையில், காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வேளாண்மை (Climate Change and Sustainable Agriculture - CCSA) என்ற கூறுகளின் கீழ் GoTN எந்த குறிப்பிட்ட செயல்பாட்டையும் முன்மொழியவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

GoTN SSTCஐ அமைத்துள்ளதாக பதிலுரைத்தது (ஜனவரி 2022). ஆயினும், SSTCயின் அமைப்பிற்காக வெளியிடப்பட்ட G.O. இன்னும் செயல்படுத்தப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

2.1.6.5 NMSA இன் கூறுகளை செயல்படுத்தாதது

காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வேளாண்மைக்கான (CCSA) NMSAன் துணைக் கூறானது காலநிலை மாற்றம் தொடர்பான தகவல் மற்றும் அறிவை இரு தரப்பு (விவசாயிகளிடமிருந்து ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் நேர் மாறாகவும்) பரப்புதலை நோக்கமாக கொண்டுள்ளது. காலநிலை புலநுணர்வுடன் கூடிய நிலையான மேலாண்மை நடைமுறைகளின் களத்தில் (domains of climate smart sustainable management practices) காலநிலை மாற்றம் தழுவல்/தணிப்பு ஆராய்ச்சி (mitigation research)/மாதிரித் திட்டங்களை முன்னதாகவே அறிந்துகொள்வதன் மூலம் மேற்கூறப்பட்ட தகவல் மற்றும் அறிவைப் பெற விழைகின்றது. இந்த கூறின் கீழ் எந்த செயல்பாட்டையும் AAPகள் முன்மொழியவில்லை என்பது கண்டறியப்பட்டது.

GoI கேட்காததால் இந்த இரண்டு கூறுகளின் கீழ் எந்த செயல்திட்டமும் முன்மொழியப்படவில்லை என்று DoA மற்றும் DoH தணிக்கைக்கு பதிலளித்தன. CCSAஐ செயல்படுத்துவதற்காக AAP மூலம் GoI உடன் இதை தொடர GoTN தவறியதை தணிக்கை கண்டறிந்தது.

2.1.6.6 மாவட்டங்களுக்கு விகிதாச்சாரமற்ற (disproportionate) ஒதுக்கீடு

DAPகள் இல்லாத நிலையில், DoA மற்றும் DoH அனைத்து மாவட்டங்களுக்கும் AAP முன்மொழிவுகளை தாங்களாகவே வடிவமைத்து அவற்றை ஒருங்கிணைப்பதற்கும் ஒப்புதலுக்கும் TAWDEVAக்கு அனுப்பியது. வெவ்வேறு மாவட்டங்களில், திட்டத்தின்கீழ் உள்ளடக்கப்பட்ட பரப்பளவு, மாவட்டங்களில் உள்ள மொத்த மானாவாரி நிலப்பரப்புக்கு விகிதாசாரமற்றதாக இருப்பது கண்டறியப்பட்டது **(இணைப்பு 2.2)**. எடுத்துக்காட்டு நேர்வாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் 10,648 ஹெக்டேர் மானாவாரி நிலப்பரப்பில், 2018-21ஆம் ஆண்டில், 1,098 ஹெக்டேர் (10.31 விழுக்காடு) NMSA-ன் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், விழுப்புரம் மாவட்டத்தில், 9,03,022 ஹெக்டேர் மானாவாரி நிலப்பரப்பில், 2018-21ம் ஆண்டில், 2,900 ஹெக்டேர் (0.32 விழுக்காடு) மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, புதுக்கோட்டை மற்றும் விழுப்புரத்திற்கான மாவட்ட செயல்திட்டம் இல்லாததால், NMSA திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட பரப்பில் மண்டல ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது என்று தணிக்கை கண்டறிந்தது. மாதிரி மாவட்டங்களில், சில மாவட்டங்கள் (புதுக்கோட்டை போன்றவை) மற்ற மாவட்டங்களை காட்டிலும் அதிக பயனடைந்தது.

வரும் ஆண்டுகளில் அதிக மானாவாரிப் பகுதி உள்ள மாவட்டங்களுக்கு அதிக கவனம் செலுத்தப்படும் என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). பதிலில் முன்மொழியப்பட்ட செயல்திட்டம் கண்காணிக்கப்பட வேண்டும்.

2.1.7 நிதி மேலாண்மை

அங்கீகரிக்கப்பட்ட AAP அடிப்படையில், GoI அதன் பங்கை GoTNக்கு தவணைகளில் வெளியிடுகிறது. GoIன் பங்கு மற்றும் அதன் சொந்த பங்கை GoTN வரவு செலவு திட்டத்தின் மூலம் வெளியிடுகிறது. DoAன்(JDoA & ADoA) கள நிலை அலுவலர்கள், திட்டத்தைச் செயல்படுத்த, கருவூலம் மூலம் திட்ட நிதியைப் பெறுகின்றனர். இருப்பினும், தோட்டக்கலைத் துறையில், கள நிலை

அலுவலர்கள், DoHல்[3] இருந்து வங்கி மூலம் திட்ட நிதியைப் பெற்றனர். மேலும், DoA அதன் நிர்வாகச் செலவுக்காக முதன்மை நிறுவனமான TAWDEVAக்கு நிதியை வழங்கியது.

2.1.7.1 நிதி குறைப்பு

2018-21ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவினம், அங்கீகரிக்கப்பட்ட செலவினம், GoI மற்றும் GoTN மூலம் நிதி வெளியீடு மற்றும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான உண்மையான பயன்பாடு ஆகியவற்றின் விவரங்கள் **அட்டவணை 2.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன. பாகங்கள் வாரியான விவரங்கள் **இணைப்பு 2.3**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2: முன்மொழியப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட செலவினம்

(₹ கோடியில்)

ஆண்டு	AAP முன்மொழியப்பட்ட உத்தேச செலவினம்	அனுமதிக்கப்பட்ட செலவினம்			உண்மையில் வழங்கப்பட்ட தொகை			பயன்படுத்தப் பட்ட தொகை	செலவிடப் படாத மீதம்
		GoI	GoTN	மொத்தம்	GoI	GoTN	மொத்தம்		(8) - (9)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
2018-19	129.76	56.44	37.63	94.07	57.32	54.21	111.53	104.13	7.40
2019-20	133.49	48.38	32.25	80.63	48.96	31.94	80.90	77.27	3.63
2020-21	131.49	43.14	28.76	71.90	43.14	28.76	71.90	59.36	12.54
மொத்தம்	**394.74**	**147.96**	**98.64**	**246.60**	**149.42**	**114.91**	**264.33**	**240.76**	**23.57**

(ஆதாரம்: TAWDEVA வழங்கிய தரவு)

- AAPல் முன்மொழியப்பட்ட ₹ 394.74 கோடிக்கு எதிராக, 2018-21ஆம் ஆண்டில் ₹ 246.60 கோடி மட்டுமே அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- AAPன் கீழ் 2018-21 காலகட்டத்தில் NMSAன் கீழ் ₹ 264.33 கோடி வெளியிடப்பட்டது. இதில், AAPல் RADக்காகக் கோரப்பட்ட தொகையான ₹ 230.25 கோடிக்கு எதிராக, ₹ 165.37 கோடி மட்டுமே GoI ஒப்புதல் அளித்தது, இது மொத்த செலவில் 63 விழுக்காடாகும். குறைக்கப்பட்ட தொகையின் விளைவாக, 2018-19ஆம் ஆண்டில், **பத்தி 2.1.6.3ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, திட்டத்தின் துணைக் கூறுகள் நீக்கப்பட்டன அல்லது குறைக்கப்பட்டன.
- 2018-21 ஆம் ஆண்டில், SHMக்காக AAPல் திட்டமிடப்பட்ட ₹ 33.09 கோடிக்கு எதிராக, ₹ 23.11 கோடி மட்டுமே GoI ஒப்புதல் அளித்தது. இதேபோல், SHC வழங்குவதற்கு, AAPல் ₹ 72.49 கோடி கோரப்பட்ட நிலையில், வழங்கப்பட்ட தொகை ₹ 52.86 கோடி மட்டுமே. இதன் விளைவாக, **பத்தி 2.1.9.2**ல், குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2019-21ஆம் ஆண்டில் SHC வழங்குதல் வெகுவாகக் குறைந்தது.
- SHMன் கீழ் உள்ள துணைக் கூறான, பரம்பரகத் க்ரிஷி விகாஸ் திட்டத்திற்காக (PKVY) AAPல் கோரப்பட்ட ₹ 58.91 கோடிக்கு எதிராக, வழங்கப்பட்ட தொகை ₹ 24.05 கோடி மட்டுமே. AAPல் முன்மொழியப்பட்ட செலவினங்களைக் குறைப்பதன் காரணமாக,

[3] DoH திட்ட நிதியை அரசுக் கணக்கில் இருந்து பெற்று, தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமைக்கு (TANHODA) வழங்கியது, இது வங்கி வழி மூலம் கள நிலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

தணிக்கைக் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிலத்தொகுப்புகளில் PKVY கூறு செயல்படுத்தப்படவில்லை. எனவே, PKVY கூறு மூலம் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கமே அமல்படுத்தப்படவில்லை.

அனைத்து மாநிலங்களுக்கிடையில் அதிக ஒதுக்கீட்டை இம்மாநிலம் பெற்றுள்ளது என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). மேலும், AAP மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களைக் பொருத்தமட்டில், GoI குறைந்த நிதி வழங்கியதில் மாநிலத்தின் தவறு இல்லை என்றும் தெரிவித்தது. அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தை முழுமையாகப் பெறாதது, GoI உடன் பயனுள்ள வகையில் தொடர்பு கொள்ளுதலில் உள்ள குறைபாடுகளின் அறிகுறியே என்பது தணிக்கையின் கருத்து.

2.1.7.2 நிதியை குறைவாகப் பயன்படுத்துதல்

2018-21 ஆம் ஆண்டில் NMSA செயல்படுத்துவதற்க்காக அளிக்கப்பட்ட ₹ 264.33 கோடிக்கு எதிராக, உண்மையான செலவினம் ₹ 240.76 கோடியாக இருந்தது. மேலும், மீதத் தொகை, செயல்படுத்தும் முகமைகளிடம் (agencies) இருந்தது அல்லது பட்ஜெட்டில் ஒப்புவிப்பு செய்யப்பட்டது. நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டதிற்கான முக்கிய நேர்வுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு நிலத் தொகுப்பிலும், பண்ணை உற்பத்தியாளர் அமைப்புகளை (Farm Producers Organisations - FPO) நிறுவுதல் என்பது RADன் துணைக் கூறாகும். 31 மார்ச் 2021 நிலவரப்படி, தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்திற்கு (Tamil Nadu State Agricultural Marketing Board- TNSAMB) வழங்கப்பட்ட ₹ 3.25 கோடிக்கு எதிராக ₹ 1.40 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டது. FPOக்களின் இலக்கான 14க்கு எதிராக 10 FPOக்களை மட்டுமே நிறுவியதால் சேமிப்பு ஏற்பட்டது. மேலும், TAWDEVAன் பதிலில் இருந்து, FPOக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியானது FPOகளின் உண்மையான தேவையை விட அதிகமாக இருந்தது என்று கண்டறியப்பட்டது. இவ்வாறு, தேவைக்கு அதிகமான நிதி வழங்கியது, TNSAMBக்கு நிதியை அதிகமாக வழங்கியதற்கும், பயனற்ற நிலையில் கிடப்பில் இருப்பதற்கும் ஒரு காரணமாகும்.
- "மதிப்புக் கூட்டல் மற்றும் வளப் பாதுகாப்பு"என்ற துணைக் கூறுகளின் கீழ், விவசாயிகளுக்கு, நெகிழி பசுமை வீடுகள், (poly green houses) நிழல் வலைகள் போன்றவற்றைக் கட்டுவதற்கு உதவி வழங்கப்படுகிறது. இந்த துணைக் கூறுகளின் கீழ் 2018-19 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ₹ 13.27 கோடிக்கு எதிராக, ₹ 12.61 கோடி மட்டுமே செலவினம் ஏற்பட்டது. இலக்கான 1,89,000 ச.மீ.க்கு எதிராக, சாதனை 1,78,705 ச.மீ., ஆக இருந்தது. இவ்வாறு, இலக்கை அடையாததால் ₹ 0.66 கோடி (₹13.27 கோடி - ₹ 12.61 கோடி) சேமிப்பு ஏற்பட்டது.
- 2018-20 ஆம் ஆண்டில் "மண்வள அட்டையின் (Soil Health Card - SHC)" துணைக் கூறுகளின் கீழ் வழங்கப்பட்ட ₹ 27.23 கோடிக்கு எதிராக, ₹ 24.51 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டது. மேலும், 2020-21ஆம் ஆண்டிற்கான AAPக்கு ஒப்புதல் அளிக்கும் போது GoIஆல் ₹ 2.72 கோடி சரிக்கட்டப்பட்டது. போதுமான எண்ணிக்கையிலான SC/ST விவசாயிகள் இல்லாததால்,

SHCக்காக ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியவில்லை என்று TAWDEVA தணிக்கைக்கு பதிலளித்தது. மாநில அளவில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், அந்தந்த மாவட்டங்கள்/ஊராட்சி ஒன்றியங்களின் நிலம் வைத்திருக்கும் SC/ST மக்கள்தொகை அடிப்படையில், மாவட்ட/ஊராட்சி ஒன்றிய அளவிலான ஒதுக்கீடுகள் செய்வதன் மூலம் இந்த இன்னலைத் தவிர்த்திருக்கலாம் என்று தணிக்கை கண்டறிந்தது.

- TAWDEVAன் ஊழியர்கள் மற்றும் இதர நிர்வாகச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ₹ 12.75 கோடியில் ₹ 7.78 கோடி செலவழிக்கப்படவில்லை. வருடாந்திர ஒதுக்கீட்டில், ஐந்து விழுக்காடானது மாநில அளவில் நிர்வாகச் செலவுகளுக்காக, அதாவது, தொழில்நுட்ப ஆதரவு அலகுகள் (Technical Support Units - TSU), நிறுவும் செலவு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, திறன் மேம்பாடு மற்றும் பிற செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டது. **பத்தி 2.1.8.7ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி திட்டத்தை திறம்பட திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆலோசகர்கள், இளநிலை ஆராய்ச்சியாளர்கள் (Junior Research Fellows - JRF) பணியமர்த்தப்படாததால், நிதி சேமிப்புகள் ஏற்பட்டதாக தணிக்கை கண்டறிந்தது.

2.1.7.3 நிதி நிர்வாகத்தில் உள்ள சிக்கல்கள்

DoHன் கள அதிகாரிகளால் செயல்படுத்தப்படும் செயல்பாடுகளைப் பொறுத்தவரை, முழு பட்ஜெட் ஒதுக்கீடும் DoH ஆல் எடுக்கப்பட்டு மற்றும் வங்கி வழிகள் மூலம் கள நிலை அதிகாரிகளுக்கு (DDoHகள்) மாற்றப்பட்டது. 31 மார்ச் 2021 நிலவரப்படி, மாதிரி மாவட்டங்களில் DDoHகளின் வங்கிக் கணக்குகளில் மொத்தம் ₹ 22.11 இலட்சம் செலவிடப்படாமல் இருந்தது. தமிழ்நாடு வரவு செலவு நடைமுறை கையேடு விதிகளின்படி, செலவழிக்கப்படாத தொகையானது, திருத்தப்பட்ட மதிப்பீட்டின் கட்டத்தில், HoDகளால் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையிலிருந்து விலகி, முன்கூட்டியே பணம் எடுத்து வங்கிக் கணக்கில் வைத்திருப்பதால், DDoHகளின் வங்கிக் கணக்குகளில் ₹ 22.11 இலட்சம் செலவழிக்கப்படாமல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

செலவழிக்கப்படாத நிலுவைகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). மேலும், நிதி மேலாண்மைக்கான புதிய முறை அறிமுகம் செய்யப்படுவதன் மூலம், இந்தப் சிக்கல் மீண்டும் வராது என்றும் கூறப்பட்டது.

2.1.7.4 ஈட்டப்பட்ட வட்டி துறைகளால் பயன்படுத்தப்படாமை

JDoA, DoH மற்றும் TAWDEVA ஆகியவற்றின் வங்கிக் கணக்குகளில் எடுக்கப்பட்ட மற்றும் தக்கவைக்கப்பட்டிருந்த திட்ட நிதியில் ஈட்டப்பட்ட வட்டி விவரங்கள் **அட்டவணை 2.3ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3: செலவழிக்கப்படாத நிலுவைகளில் பெறப்பட்ட வட்டி

(₹ இலட்சத்தில்)

இயக்குநரகம்/ இணைப்பு முகமை நிறுவனத்தின் பெயர்	கூறுகளின் பெயர்	2018-19	2019-20	2020-21	மொத்தம்
DoA	RAD	0.00	3.91	1.45	**5.36**
	நிர்வாக செலவினங்கள்	0.00	0.41	0.15	**0.56**
DoH	RAD	0.25	9.57	25.34	**35.16**
	PKVY	9.93	19.99	4.43	**34.35**
TAWDEVA	நிர்வாகச் செலவினங்கள்	23.72	30.45	28.92	**83.09**
மொத்தம்		**33.90**	**64.33**	**60.29**	**158.52**

(ஆதாரம்: DoA, DoH மற்றும் TAWDEVA)

திட்ட வழிகாட்டுநெறிமுறைகளின்படி, ஈட்டப்பட்ட வட்டி மீண்டும் அரசாங்கக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ஈட்டப்பட்ட வட்டியான ₹ 1.59 கோடியனது வழிகாட்டுதலின்படி அரசிடம் ஒப்படைக்கப்படாமல் வங்கிக் கணக்குகளில் கிடப்பில் இருப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

2.1.8 மானாவாரி பகுதி மேம்பாட்டு கூறுகளை செயல்படுத்துதல்

மானாவாரிப் பகுதி மேம்பாடு (Rainfed Area Development RAD) என்பது NMSAன் முக்கிய அங்கமாகும், இது 2018-21 மொத்த நிதிச் செலவில் 63.31 விழுக்காட்டை கொண்டுள்ளது. இது, பயிர்கள், தோட்டக்கலை, கால்நடை, மீன்பிடி, வனவியல் போன்ற விவசாயத்தின் பல கூறுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது. இது ஒரு கூட்டு (cluster) அடிப்படையிலான அணுகுமுறையில் செயல்படுத்தப்படுகிறது. பயனாளிகளின் வயல்களில், ஒருங்கிணைந்த வேளாண்மை முறையை[4] (Integrated Farming System - IFS) செயல்படுத்த, சுமார் 100 ஹெக்டேர் கொண்ட ஒவ்வொரு நிலத்தொகுப்பும், ஒரு நிலத்தொகுப்பிற்கு தோராயமாக 100 பயனாளிகளுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு, மானாவாரி சாகுபடி, காலநிலை கட்டுப்பாட்டு கட்டமைப்புகளான நெகிழி பசுமை வீடுகள், நிழல் வலை போன்றவற்றை வழங்குதல், கால்நடைகள், கோழிப்பண்ணை அலகு, தேனீ வளர்ப்பு அலகு வாங்குதல், போன்றவற்றுக்கு உதவி வழங்கப்படுகிறது.

2.1.8.1 RADஐ செயல்படுத்த பயனாளிகளைத் தவறாக தேர்ந்தெடுத்தமை

NMSAன் RAD கூறு, மானாவாரி தொழில்நுட்பங்களை பிரதானமாகக் கொண்டு வருவதன் மூலம் மானாவாரிப் பகுதிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. GoTN, RADன் கீழ் IFSஐ செயல்படுத்துவதற்கான ஆணைகளை வழங்கும் போது, RADன் கீழ் IFSஐ மானாவாரி பகுதிகளில் மட்டுமே செயல்படுத்த வேண்டும் என்று தெளிவுபடுத்தியது.

ஆயினும், RADன் கீழ் IFSஐ செயல்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தொகுப்புகள் உண்மையில் முழுவதுமாக மானாவாரி நிலங்களா என்பதை DoA மற்றும் DoH உறுதி செய்யவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. பாசன

4 பயிர், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற விவசாயத்தின் பல கூறுகளின் ஒருங்கிணைப்பு.

நிலங்கள் தேர்வு செய்யப்பட்டதும், RADன் கீழ் உதவி பெற்ற 284 மாதிரி விவசாயிகளில், 24 பேர் (8.50 விழுக்காடு) நஞ்சை நிலத்தில்[5] IFSஐ நடைமுறைப்படுத்தியிருப்பதும் கண்டறியப்பட்டது. மானாவாரிப் பகுதிகளுக்குப் பதிலாக நீர்ப்பாசன நிலங்களில் இந்தத் திட்டத்தை முறையற்ற வகையில் செயல்படுத்தியதற்கு, கீழிருந்து மேல் திட்டமிடல் இல்லாமை மற்றும் DAP இல்லாமல் AAP ஐ வடிவமைத்தல் ஆகியவை காரணமாக இருக்கலாம் என்பது கண்டறியப்பட்டது.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட சில விவசாயிகளுக்கு மானாவாரி மற்றும் நஞ்செய் நிலங்கள், இரண்டுமே இருந்தன என்றும், சிலருக்கு நஞ்செய் நிலம் இருந்தும் மானாவாரி விவசாயம் மட்டுமே செய்து வருவதாகவும், மேலும் சிலர் நஞ்செய் நிலத்தை வறண்ட நிலமாக மாற்றுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளதாகவும் GoTN (ஜனவரி 2022) பயனாளிகளின் தேர்வை நியாயப்படுத்தியது. ஆயினும், இது வறண்ட நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே உதவியை அனுமதிக்கப்படும் G.O.ன் விதிகளுக்கு கண்டிப்பாக இணங்க தணிக்கை வலியுறுத்துகிறது. இந்த நிபந்தனை தளர்த்தப்படுதல், கவனிக்கப்படாமல் விடப்பட்டால், மானாவாரிப் பகுதியின் மிகுந்த வளர்ச்சி என்ற நோக்கத்தை அடைய முடியாமல் போகும்.

2.1.8.2 மானியத்தின் சந்தேகத்திற்குரிய தவறான பயன்பாடு மற்றும் பயனற்ற செலவினங்கள்

நிழல் வலை வீடுகள் வெப்பமான காலநிலையில் அல்லது கோடை மாதங்களில் தாவரங்களை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. நிழல் வலை வீடுகள் தூண்-ஆதரவு அமைப்பாக கட்டப்பட்டு, பாலி ப்ரோப்பிலீன் (poly propylene) நிழல் துணியால் மூடப்பட்டிருக்கும். வெவ்வேறு அளவுடனான காற்றோட்டம் மற்றும் வண்ணங்களில் பாலிப்ரொப்பிலீன் நிழல் துணி பயிர் மற்றும் கால நிலைமைகளின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது.

RADன் கீழ், பயனாளி விவசாயிகளின் வயல்களில் நிழல் வலை வீடுகள் கட்டுவதற்கு GoTN உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒரு சதுர மீட்டருக்கான செலவில் 50 விழுக்காடாக, அதிகபட்சம் ₹ 355 உதவி வழங்கப்படுகிறது.

2018-21ஆம் ஆண்டில், **அட்டவணை 2.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி 356 பயனாளி விவசாயிகளுக்கு 2.94 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் நிழல் வலை வீடுகள் கட்டுவதற்காக தனிநபர் அடிப்படையிலான ₹ 10.45 கோடி மானியத்தை GoTN வழங்கியது.

அட்டவணை 2.4: நிழல் வலை வீடுகளுக்கு வழங்கப்படும் மானியம்

ஆண்டு	மாவட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	பரப்பளவு (ச.மீ ல்)	வழங்கப்பட்ட மானியத் தொகை (₹ கோடியில்)
2018-19	12	135	1,04,911	3.72
2019-20	11	126	1,19,486	4.24
2020-21	12	95	70,000	2.49
மொத்தம்	**35**	**356**	**2,94,397**	**10.45**

(ஆதாரம்: DoH)

5 உறுதியான நீர்ப்பாசன வசதியுடன் கூடிய சதுப்பு நிலம்.

மாதிரி மாவட்டங்களில், 83 பயனாளி விவசாயிகளின் வயல்களில் தணிக்கை பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டு JPV நடத்தப்பட்டது. JPV பின்வருவனவற்றை வெளிப்படுத்துயது:

- மாதிரி விவசாயிகள் 83 பேர்களில் பதின்மூன்று பேர், நிழல் வலை வீடுகளை முழுவதுமாக **(விளக்கப்படம் 2.1 மற்றும் 2.2)** தங்கள் வயல்களில் இருந்து அகற்றினர்.

விளக்கப்படம் 2.1: பயனாளியால் அகற்றப்பட்ட நிழல் வலை வீடு

(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

- மாதிரி விவசாயிகள் 83 பேர்களில் ஐந்து பேர் நிழல் வலை வீடுகளை முழுவதுமாக அகற்றி, முழுப் பொருட்களையும் (கம்பங்கள்/துணிகள்) தங்கள் வயல்களில் வைத்துள்ளனர்.
- எண்பத்து மூன்று மாதிரி விவசாயிகளில் பதினாறு பேர் துணி வலையை அகற்றியிருந்தனர் மற்றும் கம்பங்கள் மட்டுமே அவர்களது வயல்களில் எஞ்சியிருந்தன.
- மாதிரி விவசாயிகள் 21 பேர்களின் நிழல்வலை வீடுகள் சேதமடைந்த நிலையில் இருந்தன மற்றும் சரியாக பயன்படுத்தப்படவில்லை.
- 25 மாதிரி விவசாயிகளின் நிழல் வலை வீடுகள் நல்ல நிலையில் இருந்தன, ஆனால் சரியாக பயன்படுத்தப்படவில்லை (₹ 55.03 இலட்சம் மானியத்தை உட்படுத்திய 15,500 ச. மீ.).
- மூன்று விவசாயிகளின் நிழல் வலை வீடுகள் மட்டுமே சரியாக பயன்படுத்தப்பட்டு வந்தன.

விளக்கப்படம் 2.2: மாதிரி பயனாளிகளின் நிழல் வலை பயன்பாட்டின் நிலை



(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

நிழல் வலை வீடுகளுக்கான மானியத்தை வழங்குவதற்கான நிபந்தனைகளின்படி, குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்கு கட்டமைப்பைப் பயன்படுத்த வேண்டும், தவறினால் மானியத்தை 12 விழுக்காடு வட்டியுடன் பயனாளியிடம் இருந்து வசூலிக்க வேண்டும்.

தணிக்கை பின்வருவனவற்றை கண்டறிந்தது:

- நிழல் வலையை பிரித்தெடுத்து, கம்பங்களை அகற்றி மற்றும் கம்பங்கள் மற்றும் வலைகளை தங்கள் வயல்களில் வைத்திருந்த விவசாயிகள், பண ஆதாயத்திற்காக, மானியத்தைத் தவறாகப் பயன்படுத்தும் சந்தேகத்திற்கு உரிய நபர்கள் என்றறியப்படுகிறது.
- மாதிரி விவசாயிகள் 83ல், அதிக எண்ணிக்கையான 80 பேர் (96.39 விழுக்காடு), கட்டுமானம் முடிந்த ஒன்று முதல் மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே நிழற் வலை வீடுகளை அகற்றியது அல்லது சேதமடைந்த/பயன்படுத்தப்படாத நிலையில் வைத்தது, NMSAன் இந்த கூறானது முழுவதுமாக பயனற்று போனதை வெளிப்படுத்துகிறது. பயனாளிகள் தேர்வு மற்றும் மேற்பார்வையில் களநிலை அலுவலர்கள் முற்றிலும் தோல்வியடைந்ததை இது சுட்டிக்காட்டுகிறது. மேலும், முறைகேடு செய்த பயனாளிகள் மீது அபராத நடவடிக்கை எடுக்காதது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் கடுமையான குறைபாடுகளை சுட்டிக்காட்டியது.
- இதன் மூலம் 80 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ₹ 2.47 கோடி மானியம் (**இணைப்பு 2.4**) பயனற்றதாகின்றது.

தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட 80 விவசாயிகளில், 75 விவசாயிகளின் நிழல் வலைகள், வைக்கப்பட்ட இடத்தில் இல்லை என்பதை GoTN ஏற்றுக்கொண்டது (ஜனவரி 2022). மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிழல் வலையின் நிலையை சரிபார்க்க GoTN ஒப்புக்கொண்டது.

2.1.8.3 தகுதியற்ற பயனாளிகளுக்கு முறையற்ற மானிய அனுமதி

கறவை மாடு/எருமை வைத்திருப்பது IFSன் இன்றியமையாத பகுதியாகும். பாலுடன் கூடுதலாக, இந்த விலங்குகள் மண்புழு உரம் அலகுகளை (vermicompost units) பராமரிக்க சாணத்தை வழங்குகின்றன. 2019-20க்கான [6] திட்ட வழிகாட்டுநெறிமுறைகளின்படி, மாடு/எருமையின் விலையில் 50 விழுக்காடு என்ற விகிதத்தில், ஒரு கால்நடைக்கு அதிகபட்சமாக ₹ 15,000க்கு உட்பட்டு, IFS-ன் பயனாளிகளுக்கு, அதிகபட்சம் இரண்டு கால்நடைகளை வாங்குவதற்கு வழிவகுக்கிறது. கறவை மாடு/எருமை இல்லாத விவசாயிகள், இரண்டு கால்நடைகளுக்கு உதவி பெற தகுதியுடையவர்கள்; அதேசமயம், ஒரு கறவை மாடு/எருமையை வைத்திருப்பவர்கள், மற்றொரு கறவை மாடு/எருமைக்கு மட்டுமே உதவி பெற தகுதியுடையவர்கள். 2020-21 ஆம் ஆண்டில், எந்த கால்நடையும் சொந்தமாக இல்லாத பயனாளிகள் ஒரு கறவை மாடு/எருமை மாட்டினை மட்டுமே வாங்குவதற்கான உதவியைக் கட்டுப்படுத்தும் வகையில் வழிகாட்டுநெறிமுறைகள் மாற்றப்பட்டன.

[6] டிசம்பர் 2019 வரை பொருந்தும். 2020-21க்கான வழிகாட்டுநெறிமுறைகள் ஜனவரி 2020 முதல் பொருந்தும்.

மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 330 பயனாளி விவசாயிகளிடையே தணிக்கை மூலம் நடத்தப்பட்ட பயனாளிகள் கணக்கெடுப்பில், பின்வருமாறு மானியம் ஒழுங்கற்ற முறையில் வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது:

- 2019-20ஆம் ஆண்டில், ஏற்கனவே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கறவை மாடுகளை வைத்திருந்த 44 விவசாயிகளுக்கு கூடுதலாக ஒன்று/இரண்டு கறவை மாடுகளுக்கு மானியம் வழங்கப்பட்டது (**இணைப்பு 2.5**).
- 2020-21 ஆம் ஆண்டில், ஏற்கனவே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கறவை மாடு/எருமையை வைத்திருந்த 48 பயனாளிகளுக்கு கூடுதல் கால்நடை உதவி வழங்கப்பட்டது (**இணைப்பு 2.5**).

திட்ட வழிகாட்டுதல்களை கடைபிடிக்காததால் ஏற்பட்ட தகுதியற்ற செலவினம் ₹ 14.70 இலட்சம் ஆகும். ADA/DDoH, மானியத்தை அனுமதிக்கும் முன், நேரடி சரிபார்ப்பை மேற்கொள்ளத் தவறிவிட்டது, இதனால், தேவையுள்ள தகுதியான பிற பயனாளிகளுக்கு இந்தப் பலன், மறைமுகமாக கிடைக்காமல் போனது.

2.1.8.4 நிலமற்ற நபர்களுக்கு தவறாக மானியம் வழங்குதல்

வழிகாட்டுநெறிமுறைகளின்படி, ஒரு ஹெக்டேர் மற்றும் அதற்கு மேல் நிலம் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற தகுதியுடையவர்கள். இத்திட்டத்தின் கீழ் மானியத்திற்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள், நில உரிமையை நிலைநாட்ட பட்டா அல்லது விற்பனை/பகிர்வு பத்திரத்தின் நகல்களை வழங்க வேண்டும். மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், ADAக்கள்/DDoHக்கள், RADன் வெவ்வேறு துணைக் கூறுகளின் கீழ், அவர்கள் பயிரிடும்/பயிரிட முன்மொழிந்த நிலத்தின் உரிமையை உறுதி செய்யாமல், 56 விவசாயிகளுக்கு ₹ 36.75 இலட்சம் மானியம் வழங்கினர் (**இணைப்பு 2.6**).

நிலமற்ற பயனாளியின் தொடர்ச்சியான விவசாய நடவடிக்கைகள் நிச்சயமற்றதாக இருப்பதால், நிலம் இல்லாத விவசாயிகளுக்கு மானியம் வழங்குவது இயல்பான அபாயங்களைக் (inherent risks) கொண்டிருப்பதை தணிக்கை கண்டறிந்தது. இதுவும் வழிகாட்டுநெறிமுறைகளை மீறுவதாகும். திட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு கள அலுவலர்களை வலியுறுத்தாததற்கு DoA மற்றும் DoH குறிப்பிட்ட காரணங்களை வழங்கவில்லை.

தங்கள் பெயரில் நிலம் இல்லாத, ஆனால் தந்தை/குடும்ப உறுப்பினர் பெயரில் உள்ள நிலத்தில் விவசாயம் செய்யும் கூட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டதாக GoTN தெரிவித்துள்ளது. ஆயினும், மானியத்திற்கு அனுமதியளிக்கும் அதிகாரிகளின் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் வகையில், பயனாளியின் கூட்டுக்குடும்ப நிலம் பற்றிய உண்மை ஆவணப்படுத்தப்படவில்லை என்று தணிக்கை கருதுகின்றது.

2.1.8.5 தேனீ வளர்ப்பு அலகுகளுக்கான துணைக் கூறுகளின் குறைந்த செயல்படுத்தல்

அயல் மகரந்தச் சேர்க்கையைத் (cross pollination) தூண்டி, பயிர் உற்பத்தியை அதிகரிக்க தேனீக்கள் உதவுகின்றன. IFS கூறுகளின் கீழ், விவசாயக் குழுக்களில் ஒரு பயனாளிக்கு மூன்று[7] தேனீ வளர்ப்பு அலகுகள் மற்றும் தோட்டக்கலைக்

[7] 2020-21 முதல் ஒரு பயனாளிக்கு இரண்டு அலகுகளாக குறைக்கப்பட்டது.

குழுக்களில் ஒரு பயனாளிக்கு எட்டு அலகுகளை நிறுவுவதற்கு, அலகு ஒன்றுக்கு ₹ 1,600 மானியமாக வழங்கப்படுகிறது.

2019-21ஆம் ஆண்டில் தேனீ வளர்ப்பு அலகுகளுக்கான மானியத்தைப் பெற்ற 330 விவசாயிகளின் பயனாளிகள் கணக்கெடுப்பு மற்றும் JPV, அவர்களில் 169 பேர் (51 விழுக்காடு) இந்தத் திட்டத்தின்படி தேனீ வளர்ப்பு அலகுகளை ஆக்கப்பூர்வமான முறையில் பராமரிக்கவில்லை/பயன்படுத்தவில்லை என்று வெளிப்படுத்துகிறது **(இணைப்பு 2.7)** வெளிப்பட்டது. 169 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியத்தின் மூலம் பலனளிக்காத செலவினம் ₹ 10.34 இலட்சம் என்று தணிக்கை கணக்கீடு செய்தது.

தேனீ வளர்ப்பு, உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவும் ஒரு கருவியாக இருப்பதால், இந்தக் கூறுகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தத் தவறியது, இந்தத் திட்டம் அதன் நோக்கங்களை அடைவதில் பயனற்றதாக்கப்பட்டது. இந்தத் தோல்வியானது, பயனற்ற வழிகாட்டுதல் மற்றும் செயல்படுத்துதலுக்கான மற்றுமொரு அறிகுறியாகும்.

தேனீ வளர்ப்பு அலகுகளை புதுப்பிக்க மற்றுமொரு தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022).

2.1.8.6 பழ நாற்றுகளின் குறைவான துளிர்க்கை

IFS கூறுகளின் கீழ், பயனாளிகளின் வயல்களில் 300 பழ மரங்கள்/மித வறட்சி (semi-arid) நிலத்திற்கான பழ மரங்களை நடுவதற்கு, 2019-20ஆம் ஆண்டில், பயனாளிகளுக்கு ₹ 5,000 உதவி கிடைத்தது. **பத்தி2.1.6.3**ல் விவரிக்கப்பட்டபடி, திட்டச் செலவைக் குறைத்ததன் விளைவாக, இந்த உதவியானது ஜனவரி 2020 மற்றும் ஆகஸ்ட் 2020 முதல் ஒரு பயனாளிக்கு முறையே ₹ 1,500 மற்றும் ₹ 1,800 ஆகக் குறைக்கப்பட்டது.

வேளாண் காலநிலை மண்டலங்களுக்கு (Agro climatic zones) ஏற்ற நாற்றுகள், தோட்டக்கலைத் துறையின் பண்ணைகளால் வழங்கப்பட்டு, விவசாயிகள் அவற்றை நடவு செய்து பராமரிக்க வேண்டும். தணிக்கை மூலம் பயனாளிகளிடம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பானது, 330 பயனாளிகளில், அவர்களுக்கு வழங்கப்பட்ட 21,309 நாற்றுகளில், 12,521 மட்டுமே நடவு செய்த ஒரு வருடத்திலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் உயிர் பிழைத்துள்ளது என்று வெளிப்படுத்துகிறது (**இணைப்பு 2.8**). மாதிரித் தொகுதிகளில் நாற்றுகளின் துளிர்க்கை விகிதம் 58.76 விழுக்காடே இருந்தது மிகவும் மோசமானதாக இருந்தது, ஆனால், கள நிலை அலுவலர்கள் துளிர்க்கை விகிதத்தை அவ்வப்போது கண்காணித்து, தகுந்த நிவாரண நடவடிக்கைகளை பரிந்துரைக்க எந்த அமைப்பும் இல்லை. மேலும் 32 பயனாளிகளின் வயல்களில் நடப்பட்ட நாற்றுகள் எதுவும் உயிர் பிழைக்கவில்லை.

தோட்டக்கலைத் துறையால் வழங்கப்பட்ட நாற்றுகளின் இத்தகைய எச்சரிப்பிற்குரிய குறைவான துளிர்க்கையானது, நாற்றுகளின் மோசமான தரம் அல்லது பொய்யான கோரிக்கைகள் (claims) மற்றும் நடவு பற்றிய கூற்றுகளை சுட்டிக்காட்டுகிறது. இதற்கு முறையான விசாரணை மற்றும் தீர்வு நடவடிக்கை தேவைப்படுகிறது.

எனவே, கள நிலை அலுவலர்கள் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கவோ அல்லது பயனாளிகளுடன் அவ்வப்போது ஆய்வு/தொடர்புகளை மேற்கொள்ளவோ இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. **பத்தி 2.1.8.7ல்**

குறிப்பிடப்பட்டுள்ளபடி, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க போதுமான எண்ணிக்கையிலான JRFகள் ஈடுபடுத்தப்படாததும் இந்த தோல்விக்கு வழிவகுத்திருக்கலாம்.

2.1.8.7 JRFகளால் கள அளவிலான இன்னல்களை அடையாளம் காணாதது

IFSஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலை விவசாயிகளுக்கு வழங்க, 2019-20 முதல், 100 ஹெக்டேருக்கு (100 விவசாயிகள்) ஒரு JRFஐ பணி அமர்த்த வழிகாட்டு நெறிமுறை வழிவகுத்துள்ளது. அதன்படி, JRFகள் ஒரு வருடத்திற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில், மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியமாக ₹ 16,000 கொடுக்கப்பட்டு பணிஅமர்த்தப்பட வேண்டும் மற்றும் தேவையின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட வேண்டும். 3 நாட்களுக்கு ஒரு முறையாவது ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று கள அளவிலான இன்னல்களை கண்டறிந்து தீர்வுகளை வழங்குவதற்காக ஊராட்சி ஒன்றிய அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டும், மேலும் பயனாளிகளுடன் தொடர்பு கொண்ட விவரங்களை விரிவாகக் குறிப்பிட வேண்டும்.

அட்டவணை 2.5ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, IFSஐ செயல்படுத்துவதற்கு வழிகாட்டவும் ஆதரவளிக்கவும் போதுமான எண்ணிக்கையிலான JRFகளை DoA மற்றும் DoH ஈடுபடுத்தவில்லை.

அட்டவணை 2.5: JRFகளின் ஈடுபாட்டின் குறைபாடு

வ.எண்	துறை	ஆண்டு	ஈடுபடுத்தப்பட வேண்டிய JRFகளின் எண்ணிக்கை	ஈடுபடுத்தப்பட்டுள்ள JRFகளின் எண்ணிக்கை	ஈடுபடுத்துதலில் குறைபாடு
1	வேளாண்மை	2019-20	51	33	18
2		2020-21	50	34	16
3	தோட்டக்கலை	2019-20	21	13	8
4		2020-21	20	20	0

(ஆதாரம்: DoA மற்றும் DoH)

மேலும், பின்வருவன கண்டறியப்பட்டன:

- IFS-ஐ நடைமுறைப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பத்து JRFகள், 6 மாதங்களுக்குள் தங்கள் வேலையை விட்டு விலகினர், மேலும் 31 JRFகள் 6 முதல் 11 மாத சேவைக்குப் பிறகு தங்கள் வேலையை விட்டு விலகினர். DoA மற்றும் DoH, இத்தகைய கூடுதலான பணி விலகல் விகிதத்திற்கான (attrition rate) காரணங்களை ஆய்வு செய்யவில்லை.
- மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் ஈடுபட்டுள்ள JRFகள் தங்கள் களப் பார்வை விவரங்கள், அவர்களால் அடையாளம் காணப்பட்ட கள அளவிலான இன்னல்கள், விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட அறிவுரைகள், ஊராட்சி ஒன்றிய அளவிலான அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சிக்கல்கள் போன்ற விவரங்கள் எதையும் பதிவு செய்யவில்லை. மேலும் பயனாளிகளுடன் தொடர்பு மேற்கொண்டதற்கான விவரங்கள் எதுவும் இல்லை. JRFகள் பெரும்பாலும் கள அலுவலங்களில் எழுத்தர் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

➢ TAWDEVA மற்றும் DoH முறையே JDoA மற்றும் DDoHக்கு JRFகளுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்காக நிதியை வழங்கியது. JDoA/DDoAக்கு வழங்கப்பட்ட ₹ 1.92 கோடிக்கு மாறாக, ₹ 1.62 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டு, கள அலுவலர்களின் வங்கிக் கணக்கில் ₹ 0.30 கோடி நிலுவையாக இருந்தது.

இவ்வாறு நிதி வழங்கப்பட்டாலும், போதுமான எண்ணிக்கையிலான JRFகளை ஈடுபடுத்துவதில் மற்றும் தக்கவைத்துக்கொள்வதில் உள்ள தோல்வி, ஒருங்கிணைப்பு, வழிகாட்டுதல் மற்றும் திட்ட அமலாக்கத்தின் கண்காணிப்பு ஆகியவற்றின் குறைபாடுகள் மற்றும் மானியத்தை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் பயனற்ற செலவினங்கள் ஆகியவை போன்ற சிக்கல்களுக்கு பங்களித்தது, பத்திகள் **2.1.8.2, 2.1.8.3, 2.1.8.4** மற்றும் **2.1.8.6**.ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

JRFகளை ஈடுபடுத்துவதில் உள்ள பற்றாக்குறை குறித்து, குறைந்த சம்பளம் மற்றும், பிற நிரந்தர வேலைகள் கிடைப்பதால், JRFகளின் பணி விலகல் விகிதம் அதிகரித்தது என்று GoTN (ஜனவரி 2022) பதிலளித்தது. ஆயினும், இயக்கத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்கு JRFகளை தக்கவைத்துக்கொள்ள எந்த உத்தியையும் அரசாங்கம் பரிந்துரைக்கவில்லை.

2.1.8.8 பாலின இலக்குகளை அடைவதில் குறைபாடுகள்

திட்ட வழிகாட்டுநெறிமுறைகளின்படி, நிதி ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு பெண் பயனாளிகள்/விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். மாநிலத்தில் 2018-21 ஆம் ஆண்டில் திட்டத்தின் RAD கூறுகளின் கீழ் பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவு விவரங்கள் **அட்டவணை 2.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.6: பெண் பயனாளிகளைச் சேர்ப்பதற்கான நிதி இலக்கு மற்றும் சாதனை

ஆண்டு	DoA ஆல் செயல்படுத்தப்பட்ட கூறுகள்			DoH ஆல் செயல்படுத்தப்பட்ட கூறுகள்		
	இலக்கு (₹ கோடியில்)	சாதனை (₹ கோடியில்)	சாதனை விழுக்காடு	இலக்கு (₹ கோடியில்)	சாதனை (₹ கோடியில்)	சாதனை விழுக்காடு
2018-19	13.62	5.92	*43.47*	6.17	3.08	*49.92*
2019-20	9.91	5.41	*54.59*	5.78	3.48	*60.21*
2020-21	8.98	4.85	*53.01*	5.25	2.81	*53.52*
மொத்தம்	**32.51**	**16.18**	***49.77***	**17.20**	**9.37**	***54.48***

(ஆதாரம்: DoA மற்றும் DoH)

2018-21ஆம் ஆண்டில் பெண் பயனாளிகளுக்குத் திட்டப் பலன்களுக்கான மொத்த இலக்குச் செலவு ₹ 49.71 கோடியாக இருந்தது. அதற்கு மாறாக, இந்த காலக்கட்டத்தில், இதற்கான மொத்த செலவினம் ₹ 25.55 கோடியாக இருந்தது, அதாவது 16.25 விழுக்காடு மட்டுமே. இருப்பினும், வேளாண் துறையின் கீழ் உள்ள ஆறு மாவட்டங்களும்[8], தோட்டக்கலைத் துறையின் கீழ் உள்ள ஆறு மாவட்டங்களும்[9] அதிக எண்ணிக்கையிலான பெண் பயனாளிகளை பதிவு செய்து, பெண் பயனாளிகளுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீட்டை எட்டியுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளில் தலா 6 மாவட்டங்கள் சிறப்பாகச் செயல்பட்டு 30 விழுக்காடு பெண் பயனாளிகள் என்ற இலக்கை எட்டியிருப்பது, இந்த இலக்கை எட்டுவது உண்மையில் சாத்தியம் என்பதற்கான

8 கோவை, கடலூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம்.

9 கடலூர், கன்னியாகுமரி, மதுரை, பெரம்பலூர், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி.

அறிகுறியாகும். இதனால், மற்ற மாவட்டங்கள் இலக்கை எட்டாதது அவர்களின் செயல்திறனில் குறைபாடுகளை சுட்டிக்காட்டுகிறது.

இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று GoTN பதிலளித்தது.

2.1.9 மண்வள மேலாண்மை

NMSAன் மண்வள மேலாண்மை (Soil Health Management SHM) கூறு, இடம் மற்றும் பயிருக்கு ஏற்ற நிலையான மண்வள மேலாண்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, வயலின் தேவையற்ற அகற்றல்களின் மேலாண்மை (Residue Management), இயற்கை விவசாய நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பேரூட்ட-நுண்ணூட்டச் சத்து (macro-micro nutrient) மேலாண்மை, நிலத்திறன் அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்துதல் தேவைக்கேற்ப உரங்களை பயன்படுத்துதல் மற்றும் மண் அரிப்பு/சிதைவு ஆகியவற்றைக் குறைத்தல் ஆகியவற்றுடன் கூடிய மண்வள வரைபடங்களை உருவாக்குதல் மற்றும் இணைத்தல் ஆகிய உத்திகளைக் கொண்டுள்ளது. NMSAன் SHM கூறுகள் மற்றும் அதன் துணை கூறுகளான மண்வள அட்டை வழங்கல் மற்றும் பரம்பரகட் கிரிஷி விகாஸ் யோஜனா (PKVY) ஆகியவை விவசாய உற்பத்தி மற்றும் பண்ணை வருவாயை அதிகரிக்க மண்வள மேலாண்மை தொடர்பான இன்னல்களை தீர்க்கும் நோக்கில் செயல்படுகின்றன.

2.1.9.1 பயன்படுத்தப்படாத இயந்திரங்கள்

திரவ உயிர் உரங்கள் (liquid bio-fertilisers) வழங்கல் NMSAன் கீழ் உள்ள நிலையான விவசாயத்திற்கான ஒரு உத்தி ஆகும். NMSAன் SHM கூற்றின் கீழ், 2020-21 ஆம் ஆண்டில் தலா ₹ 50 இலட்சம் செலவில் ஏழு திரவ உயிர் உர உற்பத்தி அலகுகளை வலுப்படுத்த GoTN ஒப்புதல் அளித்தது. மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், இரண்டு உயிர் உர அலகுகளின் செயல்பாட்டின் தணிக்கை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

விளக்கப்படம் 2.3: குடியாத்தத்தில் கிடப்பில் இருக்கும் நொதிக்கும் இயந்திரங்கள்



(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

- NMSAன் கீழ், திண்டுக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஏற்கனவே இயங்கி வரும் ஒவ்வொரு உற்பத்தி நிலையத்திற்கும் திரவ உயிர் உர அலகுகளுக்கு கூடுதலாக ஐந்து நொதித்தல் (Fermentation) இயந்திரங்கள் ₹ 98.80 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு வழங்கப்பட்டன (ஜனவரி/ பிப்ரவரி 2021). இரண்டு இடங்களிலும், புதிதாக வழங்கப்பட்ட அலகுகள் நவம்பர் 2021 வரை கூட இயக்கப்படவில்லை **(விளக்கப்படம் 2.3)**. ஆண்டுக்கு 21.60 இலட்சம் லிட்டர்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட 12 திரவ உயிர் - உர உற்பத்தி அலகுகள் ஏற்கனவே DOAன் கீழ் செயல்பட்டுவருகின்றன.

இதற்கு எதிராக 2018-21 ஆம் ஆண்டின், ஆண்டு உற்பத்தி 18.93 இலட்சம் லிட்டர் மட்டுமே. எனவே, கூடுதல் திறன்கொண்ட அலகுகளை உருவாக்குதல் தேவையின் அடிப்படையில் இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. இந்த இயந்திர நிலையங்களை இயக்குவதற்கு DoAக்கள் பயனுள்ள நடவடிக்கை எடுக்கவில்லை.

- ஆகஸ்ட் 2017ல், உள்ளூர் தொழில்முனைவோரால் கிராம மண் பரிசோதனை ஆய்வகங்களை நிறுவுவதற்கான வழிகாட்டுதல்களை GoI வழங்கியது. வழிகாட்டுநெறிமுறைளின்படி, கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் மண் மாதிரிகளை ஆய்வு செய்வதற்கான நேரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த திட்டம் நிறுவப்படும். கிராம அளவிலான மண் பரிசோதனை ஆய்வகங்களுக்கான அதிகபட்ச திட்டச் செலவு ₹ 5 இலட்சம் ஆகும், இதில் 75 விழுக்காடு NMSAவின் கீழ் ஒரு முறை மானியமாக வழங்கப்படும், மேலும் மீதமுள்ள தொகையை தனியார் தொழில்முனைவோர் முதலீடு செய்ய வேண்டும். இந்த ஆய்வகங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்ட மண் மாதிரிக்கு ₹ 300ஐ GoTN வழங்கும். இதுபோன்ற இரண்டு ஆய்வகங்கள் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளன. களத் தணிக்கையின் போது, SHM-NMSAன் கீழ் ₹ 7.50 இலட்சம் மானியத்துடன் நிறுவப்பட்ட கிராம மண் பரிசோதனைக் கூடங்கள்[10] இரண்டும், இத்திட்டத்தின் கீழ் மண் மாதிரிகள் இந்த ஆய்வகங்களுக்கு அனுப்பப்படாததால், பயன்படுத்தப்படாமல் போனது இந்த கிராம அளவிலான ஆய்வகங்களுக்கு ஒரு மாதிரிக்கு ₹ 300 செலுத்த நிதி வழங்கப்படவில்லை என்று திருப்பூர் JDoA தெரிவித்துள்ளார். இதனால், கிராம அளவில் மண் பரிசோதனை ஆய்வகங்களை நிறுவும் நோக்கம் நிறைவேறவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.
- SHM-NMSAன் கீழ் ₹ 1.60 கோடி செலவில் கடலூர் மாவட்டத்தில் உள்ள பண்ருட்டியில் உயிரி-பூச்சிக்கொல்லி மருந்து அலகு நிறுவுவதற்கு GoTN அனுமதி அளித்தது (மார்ச் 2017). இத்திட்டத்தில், 2017-19ல் வழங்கப்பட்ட, ₹ 1.60 கோடியில், ₹ 1.32 கோடி மட்டுமே பண்ருட்டி ADA ஆல் செலவிடப்பட்டு மீதியான ₹ 0.28 கோடி, இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வங்கி கணக்கில் பயன்படுத்தப்படாமல் உள்ளது. சுட்டிக்காட்டப்பட்டதன் பேரில், JDoA, கடலூர், தற்போதுள்ள கேரியர் அடிப்படையிலான உயிர் உர அலகுகளை (carrier based bio fertiliser unit) திரவ உயிர் உர அலகாக (liquid bio fertiliser unit) மாற்றுவதற்கு நிதியைப் பயன்படுத்துமாறு DoAக்கு முன்மொழிந்தார். எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த கூடுதல் பதில் எதிர்நோக்கப்படுகிறது (நவம்பர் 2021).

மேற்குறிப்பிட்ட இனங்களில் இருந்து, மாநிலத்தில் மண் சுகாதார மேலாண்மைக்கு மதிப்பு சேர்க்க திட்ட நிதி திறம்பட பயன்படுத்தப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

[10] திருப்பூர் மாவட்டத்தில் குடிமங்கலம் மற்றும் குண்டடம் ஊராட்சி ஒன்றியங்களில்.

2.1.9.2 மண்வள அட்டை இலக்குகளை அடையாதது

NMSAன் கீழ் செயல்படுத்தப்படும் மண்வள அட்டை (SHC) கூறு, மண் வளம் நிலை மற்றும் உற்பத்தித்திறனை பாதிக்கும் பிற முக்கிய அளவுருக்கள் பற்றிய புலம் சார்ந்த விரிவான அறிக்கையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து பண்ணை நிலங்களுக்கும் SHCகள் விநியோகிக்கப்பட உள்ளன. SHC அடிப்படையில், விவசாயிகளுக்கு பயிர்கள் குறித்த குறிப்பிட்ட பரிந்துரைகள் மட்டுமன்றி நுண்ணூட்டச் சத்துகள், மண்ணை மேம்படுத்தும் பொருட்கள் மற்றும் உயிர் உரங்கள்.

தணிக்கை காலத்தில் NMSAன் SHC கூறுகளை DoA செயல்படுத்தினார். இத்திட்டத்தில் மண் பகுப்பாய்வு துறை பணியாளர்களுக்கு பயிற்சி, உரங்களை சமச்சீராக பயன்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி, மண்வள அட்டைகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவை அடங்கும். 2018-21ல் நிர்ணயிக்கப்பட்ட செயல் மற்றும் நிதி இலக்குகள் மற்றும் சாதனைகள் **அட்டவணை 2.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7: SHC - இலக்கு மற்றும் சாதனை

ஆண்டு	திட்ட செயல்பாடு		நிதி செயல்பாடு (₹ கோடியில்)	
	இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை
2018-19	34,83,360	29,72,257	16.77	12.24
2019-20	58,317	58,317	10.46	9.12
2020-21	0	0	5.02	2.07
மொத்தம்	**35,41,677**	**30,30,574**	**32.25**	**23.43**

(ஆதாரம்: DoAஆல் வழ்ங்கப்பட்ட விவரங்கள்)

➢ SHC வழிகாட்டுதல்களின்படி, மாதிரி தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கட்டத்திலும்[11] (Grid) உள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உறையிடப்பட்ட (Laminate) மண்வள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். எனவே, 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டுகளில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு முறையே 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆம் ஆண்டுகளில் புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டும். 2015-18ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மண்வள அட்டைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், 2018-21ஆம் ஆண்டில் மொத்தம் 1.03 கோடி புதிய அட்டைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டியதாக தணிக்கை கண்டறிந்துள்ளது. அதற்கு எதிராக, 2018-21ஆம் ஆண்டில் 35.42 இலட்சம் மண்வள அட்டைகளை மட்டுமே வழங்க DoA இலக்கு நிர்ணயித்துள்ளது. இலக்கில் 86 விழுக்காடு எட்டப்பட்டாலும், இலக்கே தவறாக இருந்தது. எனவே, சாதனையை திருப்திகரமாக கருத முடியவில்லை. **பத்தி 2.1.7.1ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, செலவினங்களைக் குறைப்பதன் காரணமாக இலக்குகள் குறைக்கப்பட்டதைக் காண முடிந்தது.

[11] ஒரு கட்டம் என்பது பாசன நிலத்தில் 2.5 ஹெக்டேர் பரப்பளவும், மானாவாரி நிலத்தில் 10 ஹெக்டேர் பரப்பளவும் ஆகும்.

- மண்வள அட்டைகளை வழங்குவதற்கான நபர்களின் இலக்குகளை (Physical targets) எட்டிய போதிலும், துறை ஊழியர்கள் மற்றும் விவசாயிகளின் பயிற்சி என்ற துணை கூறுகளில் இலக்கை எட்டாததால் நிதி இலக்குகள் அடையப்படவில்லை என்பது மேலும் கண்டறியப்பட்டது.

எனவே, இலக்குகளை அடையாதது திட்டத்தின் தாக்கத்தை பாதிக்கும், ஏனெனில் இது மண்வளம் தொடர்பான சிக்கல்களை அறிவியல் பூர்வமாக அளவிடுவதை தடுக்கிறது என்று தணிக்கை கண்டறிந்தது.

GoI நிதி வழங்காதது காரணமாக சாதனை குறைந்துள்ளது என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). ஆயினும், GoI தனது நிதியை நிறுத்திய பிறகு, GoTN தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி இந்த துணைக் கூறுகளை செயல்படுத்துவது குறித்து எந்த முடிவையும் எட்டவில்லை என்பதை தணிக்கைக் கண்டறிந்தது.

2.1.9.3 பரம்பரகத் க்ரிஷி விகாஸ் திட்டம்

பரம்பரகத் கிரிஷி விகாஸ் திட்டம் (*Paramparagat Krishi Vikas Yojana* - PKVY), அல்லது பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டம், SHM ன் துணைக் கூறு ஆகும். PKVY இயற்கை வேளாண்மை மற்றும் ரசாயனங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் இல்லாத விவசாய பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தொகுப்புகளில் PKVY மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. PKVYன் கீழ், இயற்கை வேளாண் கிராமத்தை தொகுப்பு அணுகுமுறையில் ஏற்படுத்துவதன் மூலமும் மற்றும் பங்கேற்கும் பண்ணைகளுக்கு பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (Participatory Guarantee System - PGS) சான்றிதழை வழங்குவதன் மூலமும் இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கப்படுகிறது. விவசாயிகளை அணிதிரட்டுதல், திறன் மேம்பாடு, அங்கக உரங்களை கொள்முதல் செய்தல், அங்கக உர உற்பத்தி அலகுகள், வயலின் தேவையற்ற அகற்றல்களின் பகுப்பாய்வு, கட்டுதல் (packing) பெயர் சீட்டு ஒட்டுதல் (labeling) மற்றும் அங்கக விளை பொருட்களின் முத்திரை குத்துதல் ஆகியவற்றிற்காக நிதி உதவி வழங்கப்பட்டது.

இரசாயன மற்றும் அங்கக உரங்களைப் பயன்படுத்துதலின் போக்கு

உரம் என்பது பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனுக்கான முக்கியமான உள்ளீடு ஆகும். 2018-21 ஆம் ஆண்டில் இரசாயன மற்றும் அங்கக உரங்களின் பயன்பாட்டின் போக்கு **விளக்கப்படம் 2.4ல்** சித்தரிக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.4: இரசாயன மற்றும் அங்கக உரங்களைப் பயன்படுத்துதல்



(ஆதாரம்: DoAஆல் வழ்ங்கப்பட்ட விவரங்கள்)

இரசாயன உரங்கள் மற்றும் உயிர் உரங்களைத் தவிர, விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 17,000 மெட்ரிக் டன் பண்ணை பசுந்தாள் உரம் பயன்படுத்துகின்றனர். உயிர் உரங்களின் பயன்பாட்டில் ஆரோக்கியமான உயர்வு இருந்தபோதிலும், 2019-21 ஆம் ஆண்டில் இரசாயன உரங்களின் பயன்பாடும் தொடர்ந்து அதிகரித்தது.

மாநிலத்தில் சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருவதால் ரசாயன உரங்களின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதாக GoTN பதிலளித்தது. ஆயினும், ரசாயன உரங்களின் பயன்பாட்டின் அதிகரித்து வரும் போக்கு, PKVY அதன் நோக்கத்தை அடையவில்லை என்பதை நிரூபித்ததை தணிக்கை கண்டறிந்தது.

2.1.9.4 PKVY செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்

மாதிரி மாவட்டங்களில் PKVY செயல்படுத்துவதில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளின் நிகழ்வுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

- பயனாளிகளின் வயலில் PKVY செயல்படுத்தும் முன் நீர் மற்றும் மண் பரிசோதனை செய்வது கட்டாயமாகும், ஆனால், சேலம் மாவட்டத்தில் 50 பயனாளிகளில் (வேளாண்மை) திருப்பூர் மாவட்டத்தில் 20 பயனாளிகளில் (தோட்டக்கலை) தண்ணீர் மற்றும் மண் பரிசோதனை செய்யப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.
- வழிகாட்டுநெறிமுறைகளின்படி, அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தின் மூலம் பூச்சிக்கொல்லி மற்றும் இரசாயனக் கழிவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் எட்டு மண் மாதிரிகள் PKVYன் கீழ் ஒவ்வொரு தொகுப்பிலிருந்தும் எடுக்கப்பட வேண்டும். இந்த பகுப்பாய்விற்கு ஒரு மாதிரிக்கு ₹ 10,000 த்தை திட்டம் வழங்குகிறது. **அட்டவணை 2.8**ல் கொடுக்கப்பட்டுள்ள திட்ட வழிகாட்டுதல்களை கள நிலை அலுவலர்கள் பின்பற்றவில்லை என்று கண்டறியப்பட்டது.

அட்டவணை 2.8: அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மூலம் கழிவுகளின் பகுப்பாய்வு

மாவட்டம்	குழுக்களின் எண்ணிக்கை	இரண்டு ஆண்டுகளில், ஒரு வருடத்திற்கு, ஒரு நிலத்தொகுப்பிற்க்கு, 8 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டிய ஆய்வு	உண்மையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	மாதிரி பகுப்பாய்வில் குறைபாடு/ அதிகப்படியானது	செலவிடப்பட்ட அதிகப்படியான தொகை (ரூபாயில்)
சேலம் -விவசாயம்	15	240	30	(-) 210	0
சேலம் - தோட்டக்கலை	1	16	52	36	1,08,000
தூத்துக்குடி - தோட்டக்கலை	1	16	54	38	1,12,566
வேலூர் - விவசாயம்	1	16	32	16	2,40,000

(ஆதாரம்: தணிக்கை மூலம் தொகுக்கப்பட்ட தரவு)

மேற்கூறியவற்றிலிருந்து, மாதிரி மாவட்டங்களில், மூன்று நிலத்தொகுப்புகள் தொடர்பாக மூன்று ஊராட்சி ஒன்றியங்களில், அதிகப்படியான மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன, மேலும் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில், போதுமான எண்ணிக்கையிலான மாதிரிகள் சோதிக்கப்படவில்லை என்று தெரிந்துகொள்ள முடிந்தது. குறைந்த சாதனையானது, இயற்கை விவசாயத்திற்கு மாறுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை கண்காணிக்காமையை குறிக்கிறது. அதே நேரத்தில், மூன்று மாவட்டங்களின் அதிகப்படியான சாதனைகள் ₹ 4.61 இலட்சம் தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினத்தை ஏற்படுத்தியது.

பங்கேற்பு உத்திரவாத அமைப்பு (PGS) சான்றிதழ், விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் அங்கக விளைப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துகிறது. PKVYன் கீழ், அடையாளம் காணப்பட்ட உள்ளூர் வள நபரின் ஆய்வு, ஆவணங்கள் மற்றும் மாதிரி மூலம் நிலத்தொகுப்பிற்கு PGS சான்றிதழை வழங்குவதற்கான செயல்முறையில், ஒரு நிலத்திதொகுப்பிற்கு ₹ 2,000 அனுமதிக்கப்பட்டது. 2018-21 ஆம் ஆண்டில், PKVY திட்டத்தில் பங்கேற்ற 20,814 விவசாயிகளில், 16,979 பயனாளிகளுக்கு (82 விழுக்காடு) மட்டுமே மாநிலத்தில் PGS சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

விதைச் சான்றளிப்புத் துறையானது, PGS சான்றிதழ்களை வழங்குவதற்கான, மண்டலக் குழுவாக நியமிக்கப்படுவதாக GoTN பதிலளித்தது. இருப்பினும் இயற்கை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு PGS சான்றிதழ்கள் விரைவாக வழங்கப்படுவதை உறுதிசெய்யலாம்.

2.1.10 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

2.1.10.1 மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்காதது

மாநில அளவில் NMSAன் கண்காணிப்பு கட்டமைப்பில் SSTC மற்றும் SLC ஆகியவை அடங்கும். மாவட்ட அளவில், JDoA மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது மற்றும் கிராம ஊராட்சிகள் கிராம அளவில் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். மூல நிறுவனம் மற்றும் GoI க்கு காலாண்டு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிப்பது ஆகியவை திட்டமிடப்பட்ட கண்காணிப்பு அமைப்பின் ஒரு பகுதியாகும். மேலும், NMSAன் துணை கூறுகள்

ஒவ்வொன்றின் கீழும், செயல் மற்றும் நிதி சாதனைகள் ஒவ்வொரு மாதமும் புதுப்பிக்கப்பட்டு NMSA இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

இருப்பினும், பின்வருவன கண்டறியப்படன:

- 2018-21ல் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட காலாண்டு அறிக்கைகளை DoA/DoH தொகுத்து மாநில இணைப்பு முகமைக்கு சமர்ப்பிக்கவில்லை. இதன் விளைவாக மாநில இணைப்பு முகமை, காலாண்டு முன்னேற்ற அறிக்கையை GoI க்கு வழங்கவில்லை.
- செயல்படுத்தும் அதிகாரிகள்/மாநில இணைப்பு முகமை செய்த முன்னேற்றத்தைப் புதுப்பிக்கத் தவறியதால், NMSA இணையதளம் 2019-21 தொடர்பான எந்தத் தரவையும் கொண்டிருக்கவில்லை.

முன்னேற்ற அறிக்கைகளை மாநில இணைப்பு முகமைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று DoA மற்றும் DoH பதிலளித்தன. NMSA செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றம், மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட பிற திட்டங்களுடன் கண்காணிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படுகிறது என்று பதிலளித்த GoTN, மேலும் 2021-22 முதல், TAWDEVAக்கு செயல்படுத்தும் முகமைகளால் முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது. ஆயினும், NMSA இணையதளத்தில் நபர்கள் மற்றும் நிதித் தரவுகளை அவ்வப்போது பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தணிக்கை கருதுகிறது.

2.1.10.2 மூன்றாம் தரப்பு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை நடத்தாதது

NMSA வழிகாட்டுதல்கள் 2014ன் பத்தி 10ன் படி, இடைநிலை திருத்தங்களை மேற்கொள்ள, திட்டத்தின் பலாபலங்கள், செயல்திறன், விளைவு மற்றும் குறைபாடுகளை மதிப்பிடுவதற்காக 'மூன்றாம் தரப்பு நிறுவனம்' ('third party agency') மூலம் NMSA ஆண்டிற்கு இருமுறை என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.இருப்பினும், மாநிலத்தில் மூன்றாம் தரப்பு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. மூன்றாம் தரப்பு மதிப்பீட்டிற்காக நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை என்று DoA மற்றும் TAWDEVA தெரிவித்துள்ளன. மூன்றாம் தரப்பு மதிப்பீட்டிற்காக AAPல் GoTN நிதி கோராததால் பதில் ஏற்றுக்கொள்ள முடியாதது.

மூன்றாம் தரப்பு மதிப்பீடு ஏற்பாடு செய்யப்படும் என்று GoTN பதிலளித்தது (ஜனவரி 2022).

2.1.10.3 NMSAன் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கு புவிசார்குறியீடு (Geotagging) செய்யப்படவில்லை

திட்ட வழிகாட்டுநெறிமுறைகளின்படி, RAD-NMSAன் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களின் புவியியல் இருப்பிடம் உருவாக்கப்பட்டு, மாவட்டம்/மாநிலத்தின் டிஜிட்டல் வரைபடத்தில் பதிவேற்றப்பட்டு, திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறந்த வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய பொது களத்தில் வைக்கப்பட வேண்டும். இதேபோல், NMSAன் PKVY கூறுகளின் கீழ் உள்ள நிலத்தொகுப்பானது, கண்காணிப்பு நோக்கத்திற்காகவும், பயிரிடப்பட்ட பயிர்களின் அடிப்படையில் சந்தைப்படுத்தல் முறையை எளிதாக்குவதற்காகவும் புவிசார்குறியிடப்பட வேண்டும்.

ஆய்வு செய்ததில், 2018-21ல் 4,08,554 சொத்துக்கள் உருவாக்கப்பட்டன (**அட்டவணை 2.9**). உருவாக்கப்பட்ட சொத்துக்கள் எதுவும் புவிசார் குறியிடப்படவில்லை.

அட்டவணை 2.9 NMSAன் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்கள்

ஆண்டு	துறை	மண்புழு உரம் அலகு (எண்களில்)	பசுமை வீடு (எண்களில்)	நிழல் வலை வீடு (ச.மீ.)	HDPE மண்புழு உரம் (எண்களில்)	அறுவடைக்குப் பின் சேமிப்பு 50 ச.மீ. பகுதி (எண்களில்)
2018-19	வேளாண்மை	640	0	0	0	0
2019-20		5,022	0	0	0	0
2020-21		5,000	0	0	0	0
2018-19	தோட்டக்கலை	0	71,000	1,04,911	425	41
2019-20		0	23,000	1,19,430	0	15
2020-21		0	9,000	70,000	0	60
மொத்தம்		**10,662**	**1,03,000**	**2,94,341**	**425**	**116**

(ஆதாரம்: DoA, DoH)

தணிக்கைக் குழுவின், NMSAன் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துகளின் நேரடி சரிபார்ப்பு, RADன் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் இல்லாததை வெளிப்படுத்தியது **(பத்தி 2.1.8.2).** எனவே, சொத்துக்களை புவிசார் குறியிடத் தவறியது திட்டத்தின் வெற்றிக்கு ஆபத்தை விளைவிப்பதாக தணிக்கை கண்டறிந்தது. சொத்துகளின் தவறான கோரலின் மூலம், தவறாகப் பயன்படுத்தப்படும் நிதியை கண்காணிக்க முடியாமையே மேற் கூறப்பட்ட ஆபத்திற்கு காரணமாக உள்ளது கண்டறியப்பட்டது. இது திட்டத்தின் கண்காணிப்பை மோசமாக பாதித்தது.

2.1.11 முடிவுரை

AAPகளில் முன்மொழியப்பட்ட நிதிச் செலவினங்களைக் கணிசமாகக் குறைத்ததால் மாநிலத்தில் NMSA செயல்படுத்தல் பாதிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட செலவினங்களின் அடிப்படையில் AAPகளை மறுசீரமைப்பதில் GoTN தவறியதன் விளைவாக, நிதியின் குறைவான வழங்குதல் (thin spreading) மற்றும் திட்டங்களின் துணைக் கூறுகளைக் குறைத்தல் ஆகியவை நேர்ந்தது. RADன் கீழ் மேம்படுத்தப்பட்ட பகுதி எந்த அர்த்தமுள்ள தாக்கத்தையும் ஏற்படுத்த இயலாதவாறு மிகவும் குறைவாக இருந்தது. கீழிருந்து மேலாக திட்டமிடல் இல்லாமை, பண்ணை நீர் மேலாண்மை ஏற்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை மேற்க்கொள்ளல் ஆகிய கூறுகளைத் தவிர்ப்பது ஆகியவை முழுமையான திட்டமிடலை பாதித்தது.

மானியத்தை தவறாகப் பயன்படுத்துதல், ஒழுங்கற்ற மற்றும் மானியத்தின் தவறான அனுமதி போன்ற சந்தேகத்திற்குரிய நேர்வுகள் காரணமாக கள அளவிலான செயலாக்கம் பயன் குறைந்தது. பழ மர நாற்று வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு அலகுகளின் கீழ் சாதனைகளில் பெரிய அளவிலான தோல்விகள், தவறான பயனாளிகளை அடையாளம் காணுதல், வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை சுட்டிக்காட்டுகின்றன. SHM-ன் கீழ் வாங்கப்பட்ட பல இயந்திரங்கள் செயலிழந்து கிடக்கின்றன மற்றும் வங்கிக் கணக்கில் செலவழிக்கப்படாத நிலுவைகளின் நேர்வுகளைத் தணிக்கை குறிப்பிட்டது. NMSAன் PKVY கூறு

இரசாயன உரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதில் போதிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

JRFகளின் ஈடுபாட்டில் பற்றாக்குறை, முன்னேற்ற அறிக்கைகளை சரியான நேரத்தில் சமர்ப்பிக்காதது மற்றும் NMSAன் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை புவிசார்குறியிடல் செய்வதில் தோல்வி ஆகியவற்றின் காரணமாக கண்காணிப்பு பயனற்றதாயிற்று.

2.1.12 பரிந்துரைகள்

தணிக்கை முடிவுகளின் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகள் அளிக்கப்படுகின்றன:

- அடிமட்ட அளவிலான திட்டமிடல், மாவட்ட செயல்திட்டங்கள் தயாரித்தல் மற்றும் வருடாந்திர செயல் திட்டங்களாக ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்கு பயனுள்ள அணுகுமுறையை பின்பற்றலாம்.
- பல்வேறு திட்டங்களின் கீழ் உதவி பெறும் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் அடிப்படைத் தகுதிகள்/விதிமுறைகளை சரிபார்ப்பதை உறுதி செய்வதற்காக, GoTN, மண் சுகாதாரத் தரவு உட்பட விவசாயிகளின் தரவுத்தளத்தைத் தயாரித்து அவ்வப்போது புதுப்பிக்கலாம்.
- முறைகேடாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 252 நேர்வுகளிலும், அதாவது,நஞ்சை நிலம் உள்ள 24 பேருக்கு திட்டப் பலன்கள் முறைகேடாக வழங்கப்பட்டமை, முறையாகப் பயன்படுத்தப்படாத நிழல் வலை வீடுகள் கட்ட மானியம் வழங்கப்பட்ட 80 நேர்வுகள், திட்ட வழிகாட்டுதல்களுக்கு எதிராக 92 பேருக்கு கறவை மாடுகள் உதவி வழங்கியது மற்றும் 56 நபர்கள் நிலத்தின் உரிமையை உறுதி செய்யாமல் மானியம் வழங்கியது ஆகியவற்றை குறித்து விசாரணைக்குப் பின் பொறுப்பு நிர்ணயிக்கப்படலாம்.
- வேளாண்மை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை இயக்குநர், இளநிலை ஆராய்ச்சியாளர்களை தேர்ந்தெடுத்து, தேவைக்கேற்ப அவர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் முறையான திட்டத்தை உருவக்கலாம் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டலை விரிவுபடுத்துவதிலும், கள அளவிலான சிக்கல்களைக் கண்டறிவதிலும் அவர்களின் பங்கை வலுப்படுத்தலாம்.
- தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, அதற்காக வழங்கப்படும் நிதியைப் பயன்படுத்தி ஒரு வலுவான கண்காணிப்பு அமைப்பை உருவாக்கலாம் மற்றும் GoI ஆல் மேற்கொள்ளப்படும் NMSAன் இணைய அடிப்படையிலான கண்காணிப்பில் தீவிரமாக பங்கேற்கலாம்.
- திண்டுக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓராண்டுக்கு மேலாக செயல்படாமல் கிடக்கும் இயந்திரங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- வங்கிக் கணக்குகளில் இருக்கும் செலவழிக்கப்படாத நிதிகள், அதன் மீதான திரட்டப்பட்ட வட்டியுடன் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

அத்தியாயம் III

இணக்கத் தணிக்கை

அத்தியாயம் III

இணக்கத் தணிக்கை

அரசாங்கத்தின் துறைகள், அவற்றின் கள அமைப்புகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் இணக்கத் தணிக்கையானது, வளங்களை நிர்வகிப்பதில் பல குறைபாடுகளையும், ஒழுங்குமுறை, உரிமை, மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் தோல்விகளையும் வெளிப்படுத்தின. இவை பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன

3.1 மோசடியான கோரிக்கைகள்/பணம் வழங்குதல்கள்

உயர் கல்வித் துறை

அண்ணா பல்கலைக்கழகம்

3.1.1 பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதில் உள்ள முறைகேடுகள்

குறியீட்டு விதிகளை மீறுதல் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் உள் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் ஆகியவற்றின் விளைவாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் செய்வதற்கான முறையற்ற வழங்குதல்கள்.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம், 1998 (TNTTA), தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள், 2000 (TNTTR) மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் (பல்கலைக்கழகம்) நிதி மற்றும் கணக்கு கையேடு, 1999 (FA Manual) பல்கலைக்கழகத்தின் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதலில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை குறிப்பிடுகிறது. ஒரு முன்மொழிவில் கொடுக்கப்பட்டுள்ள மொத்த செலவினத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும், மேலும் 10 லட்சத்திற்கும் அதிகமான கொள்முதல்கள் பதிவாளரால் செயல்படுத்தப்பட வேண்டும் மற்றும் பல்கலைக்கழக கொள்முதல் குழு ஒன்றை இதில் உட்படுத்த வேண்டும் என்று FA கையேடு நிபந்தனையளிக்கின்றது.

(அ) பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குதல்

பிப்ரவரி 2016ல், தேர்வுக் கட்டுப்பாட்டாளர் (CoE), மாணவர்களின் பட்டப்படிப்புச் சான்றிதழ்கள், தரவரிசை சான்றிதழ்கள் (Rank certificates), மதிப்பீட்டுத்தரம் (grade)/மதிப்பெண் தாள்கள் மற்றும் மதிப்பெண்கள்/மதிப்பீட்டுத்தரம் (கல்விப் பதிவுகள்) முதலியவற்றின தொகுப்பு விவர அறிக்கை (consolidated statement) ஆகியவற்றை இலக்க முறை (digital) மயமாக்க முன்மொழிந்தார். துணைவேந்தர் (VC) இந்த முன்மொழிவுக்கு (5 பிப்ரவரி 2016) ஒப்புதல் அளித்தார் மற்றும் CoE அதே நாளில் அடையாளம் கண்டறியப்பட்ட ஆறு நிறுவனங்களிடமிருந்து இந்தப் பணிக்கான மேற்கோளைக் கோரினார். 16 பிப்ரவரி 2016க்குள் நான்கு[1]

[1] (i) GA சாப்ட்வேர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூரு, (ii) டெக்னோபிள் சொல்யூஷன்ஸ் இந்தியா (பி) லிமிடெட், சென்னை, (iii) இன்ஃபோஸ்பார்க் டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூரு மற்றும் (iv) ரெட்காசோ சொல்யூஷன்ஸ் (பி) லிமிடெட், சென்னை.

நிறுவனங்கள் தங்கள் ஏலங்களைச் சமர்ப்பித்தன. CoE மிகக் குறைந்த விலை கோரிய ஒப்பந்ததாரருடன்[2] (GST லிமிடெட்) 17 பிப்ரவரி 2016 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்தார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, GST லிமிடெட், டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டிய ஆவணத்தை ஒரு பக்கத்திற்கு ₹ 46 என்ற விகிதத்தில், மதிப்பெண்களின் தொகுப்பு விவர அறிக்கையைத் தவிர மற்ற கல்விப் பதிவுகளை ஒளி நகலெடுப்பது, ஒழுங்கமைப்பது, சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்களைச் சரிபார்ப்பதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்பக் கருவிகளை வழங்குவது மற்றும், தொழில்நுட்ப ஆதரவு அளிப்பது ஆகியவற்றின் மூலம் டிஜிட்டல் மயமாக்க விழைகிறது. மேலும், CoE (ஆகஸ்ட் 2016) தொகுப்புவிவர மதிப்பெண் பட்டியல்களை டிஜிட்டல் மயமாக்குவதற்காக மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகளின் இரண்டாவது தொகுப்பிற்கு அழைப்பு விடுத்தார் மற்றும் ஒரு பக்கத்திற்கு ₹ 25 என்ற விலையில் மிகக் குறைந்த ஒப்பந்ததாரருக்கு[3] (மேட்ரிக்ஸ் இன்க்.) ஆணை சமர்ப்பித்தார். 2012 முதல் 2016 வரையிலான கல்விப் பதிவேடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இரண்டு ஒப்பந்தங்களில் ₹ 11.41 கோடி மொத்த செலவினம் ஏற்பட்டுள்ளது. தணிக்கை மூலம் கண்டறியப்பட்ட முறைகேடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன:

பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக VCக்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவில் மதிப்பிடப்பட்ட செலவைக் குறிப்பிடாமல், FA கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை CoE மீறியுள்ளார். பதிவாளர் மற்றும் கொள்முதல் குழுவால் செய்யப்பட வேண்டிய கட்டாய செயல்முறையான ஒப்பந்த வழங்கல் முடிவை, FA கையேடு விதிகளை மீறி தானே வழங்க CoE முடிவு செய்தார். நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையினை குறிப்பிடாமல், சில குறிப்பிட்ட நிறுவனங்களின் பட்டியலில் இருந்து விலைபுள்ளிகளை அழைப்பதன் மூலம் திறந்த ஒப்பந்த TNTTA விதியை CoE மீறினார். **இணைப்பு 3.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, கார்டலைசேஷன் (cartelization) மூலம் ஏல மோசடிக்கான ஆதாரங்களையும் தணிக்கை கண்டறிந்தது.

படிப்பை முடித்த மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்விச் சான்றிதழ்களின் நகல்களை பல்கலைக்கழகம் பராமரிக்கவில்லை; மாணவர் தரவு எக்செல் (excel) வடிவத்தில் பராமரிக்கப்படுகிறது. இருப்பினும், CoE வழங்கிய பணியின் நோக்கம் சான்றிதழ்களை ஒளிநகல் செய்வதையும் உள்ளடக்கியது. இதனால், பணியின் நோக்கமே குறைபாடுடையதாக உள்ளது. பல்கலைக்கழகத்திலேயே இல்லாத கல்விப் பதிவேடுகளின் நகல்களை ஒளிநகல் செய்ததாக ஒப்பந்ததாரர் பொய்யாகக் கூறியுள்ளார் ஒப்பந்ததாரர் செய்த உண்மையான வேலையைச் சரிபார்க்காமல், அதற்கான பணம் வழங்கப்பட்டது. மாணவர்களின் தரவுகளிலிருந்து, GST லிமிடெட் மூலம் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பதிவுகளின் உண்மையான எண்ணிக்கை 7,33,722 பதிவுகள் மட்டுமே **(இணைப்பு 3.2)** என்று தணிக்கை கண்டறிந்தது. மேலும் இதனை பல்கலைக்கழகம் (ஜூலை 2021) உறுதிப்படுத்தியது. ஆயினும், 20,92,035 பதிவுகளை டிஜிட்டல் மயமாக்கப்பட்டதாக கருதி பணம் வழங்கப்பட்டது. Matrix Inc., எந்தப் பதிவையும் டிஜிட்டல் மயமாக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது மற்றும் பல்கலைக்கழகத்தால் உறுதிப்படுத்தப்பட்டது, இருப்பினும், 1,20,000 பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக நிறுவனத்திற்கு பணம் வழங்கப்பட்டது. நிதி

[2] GA சாப்ட்வேர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூரு,

[3] மேட்ரிக்ஸ் டெக்னாலஜிஸ் இன்க்., பெங்களூரு.

விவகாரங்களைக் கையாள்வதற்கான பொறுப்பில் உள்ள நபர்களின் அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அலுவல்களைப் பிரிக்கும் (segregation of duties) முறையைக் கடைப்பிடிக்காமல், CoE தானாகவே கொள்முதல் ஆணையை வெளியிடவும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும், நிதி ஒப்பளிப்பு வழங்கவும் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் செலுத்தவும் செய்தார். மேலும், பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழு (Executive Committee - EC) மற்றும் கூட்டமைப்பு (Syndicate) ஆகியவற்றின் ஒப்புதல் இல்லாமல் செலவினங்கள் செய்யப்பட்டது.

இவ்வாறு, கட்டாயப்படுத்தப்பட்ட உள் கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளால் ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்படாத சேவைகளுக்கு ₹ 11.41 கோடி முறைகேடாக பணம் வழங்கப்பட்டது.

(ஆ) வெற்று சான்றிதழ்களை அச்சிடுதல்

FA கையேட்டின் பத்தி 99, பொருட்களை வாங்குவதற்கான தேவையை கணிப்பது, மதிப்பிடப்பட்ட வருடாந்திர அல்லது மாதாந்திர நுகர்வு (estimated annual or monthly consumption) அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் அதற்கேற்ப பொருட்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நிபந்தனையளித்துள்ளது.

போலிச் சான்றிதழ்கள்[4] அச்சிடப்படுவதைத் தடுக்கும் வகையில் கூடுதல் பாதுகாப்பு அம்சங்களுடன் நீர் உட்புகவிடாத மற்றும் கிழிவு தடுப்பு (water and tear resistant) காகிதத்தில் வெற்றுச் சான்றிதழ்களை அச்சிடுவதற்கு CoEஆல் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு முன்மொழிந்தது (ஜூலை 2016). VCன் பணியை ஆற்றி வந்த ஒருங்கிணைப்பாளர் குழு[5] (Convener Committee), நவம்பர்/டிசம்பர் 2016 தேர்வுகள் முதல் நீர் உட்புகவிடாத மற்றும் கிழிவு தடுப்பு சான்றிதழ்களை வழங்குவதற்கான முன்மொழிவிற்கு ஒப்புதல் அளித்தது (19 ஆகஸ்ட் 2016). அதே நாளில், தேவையான அளவு மற்றும் சான்றிதழ்களில் இணைக்கப்பட வேண்டிய பாதுகாப்பு அம்சங்களைக் குறிப்பிடாமல் ஒன்பது நிறுவனங்களிடம் இருந்து CoE விலைப்புள்ளிகளைக் கோரினார். இரகசியத்தன்மையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட ஒப்பந்த முறையை CoE நியாயப்படுத்தினார். ஆயினும், பல பல்கலைக்கழகங்கள் வெற்று சான்றிதழ்களை அச்சிடுவதற்கு திறந்த ஒப்பந்தங்கள் அழைப்பதை தணிக்கை கண்டறிந்தது. எனவே, CoEஆல் உருவாக்கப்பட்ட ரகசியத் தன்மை என்பது, திறந்த ஒப்பந்த முறையை தவிர்ப்பதற்கான ஒரு சுழ்ச்சி என்று கண்டறியப்பட்டது. மேலும், இந்திய வங்கியின் சங்கத்தின்[6] (Indian Bank's Association- IBA) அங்கீகரிக்கப்பட்ட குழுவில் உள்ள பாதுகாப்பு அச்சுப்பொறியாளர்களிடம் இருந்து மட்டுமே விலைப்புள்ளிகளைக் கோரியதாக ஒருங்கிணைப்பாளர் குழுவின் தலைவரிடம் CoE கூறியதற்கு மாறாக, ஒப்பந்ததாரர்கள் யாரும் அதற்கான எந்த ஆதாரத்தையும் இணைக்கவில்லை. IBAவின் அங்கீகரிக்கப்பட்ட குழுவில், குறைந்த ஒப்பந்ததாரரான IFF லிமிடெட் இல்லை என்பதும் கண்டறியப்பட்டது. ஒப்பந்தத்தை மிகக் குறைந்த ஒப்பந்ததாரருக்கு (IFF லிமிடெட்) வழங்க CoE (செப்டம்பர் 2016) முன்மொழிந்தார். மேலும், ஒருங்கிணைப்பாளர் குழுவின்

---

[4] தர மதிப்பீடு/மதிப்பெண் தாள், தற்காலிக சான்றிதழ், ஒருங்கிணைந்த மதிப்பெண் தாள் மற்றும் பட்ட சான்றிதழ்.

[5] அரசுச் செயலர், உயர்கல்வித் துறை, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மற்றும் பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர்.

[6] இந்தியாவில் வங்கித் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பு.

தலைவர் என்ற முறையில் அரசாங்கத்தின் உயர் கல்வித் துறை செயலாளர், முழுக் குழுவிற்கு குறிப்பிடாமல், ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தார். IFF லிமிடெட்க்கு, 6 அக்டோபர் 2016 அன்று ₹ 62.34 கோடி மதிப்புள்ள வெற்று சான்றிதழ்களை[7] அச்சிடுவதற்கான பணி ஆணைகளை CoE வழங்கினார்.

'நுகர்வுப் பொருட்கள், எழுதுபொருள்கள் மற்றும் அச்சிடுதல்'[8] என்ற தலைப்பின் கீழ் வெற்றுச் சான்றிதழ்களை வாங்குவதற்கான வரவு செலவுத்திட்டம், அதற்கான மதிப்பீட்டில் ₹ 15 கோடியிலிருந்து அதன் திருத்தப்பட்ட மதிப்பீட்ட நிலையில் ₹ 66 கோடியாக திடீரென உயர்த்தப்பட்டது. "நுகர்வுப் பொருட்கள், எழுதுபொருட்கள் மற்றும் அச்சிடுதல்" ஆகியவற்றுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் திடீர் மற்றும் அதிகப்படியான அதிகரிப்பு குறித்து பல்கலைக்கழகத்தின் வரவு செலவுத் திட்ட முறையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேள்வி எழுப்பத் தவறிவிட்டனர்.

நவம்பர் 2016 மற்றும் செப்டம்பர் 2017க்கு இடையில் IFF லிமிடெட் வெற்று சான்றிதழ்களை வழங்கியது. மேலும், பல்கலைக்கழகம் IFF லிமிடெட்க்கு ₹ 65.46 கோடி (வரிகள் உட்பட) வழங்கப்பட்டது **(இணைப்பு 3.3)**. முந்தைய ஆண்டுகளின் கொள்முதல் ஆணைகளில் இருந்து, முந்தைய ஆண்டுகளில் பல்கலைக்கழகம் ஒரு வருடத்திற்கு தேவையான வெற்றுச் சான்றிதழ்களை மட்டுமே வாங்குவதை தணிக்கை கண்டறிந்தது. இருப்பினும், 2016-17ல், **அட்டவணை 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, ஆண்டுத் தேவையின் அளவில் 8.35 முதல் 13.49 மடங்கு அதிகமான வரையிலான வெற்றுச் சான்றிதழ்களைப் CoE பெற்றுள்ளார்.

அட்டவணை 3.1: வாங்கப்பட்ட அளவு மற்றும் வெற்று சான்றிதழ்களின் வருடாந்திர தேவை

வ. எண்	விவரம்	2016-20 இல் சராசரி ஆண்டு பயன்பாடு	வாங்கிய அளவு	ஆண்டுத் தேவைக்கு வாங்கப்பட்ட அளவின் விகிதம்	செப்டம்பர் 2021 வரை பயன்படுத்தப்பட்ட அளவு மற்றும் பயன்பாட்டின் விழுக்காடு
1	தர மதிப்பீடு/ மதிப்பெண் தாள்	11,97,397	1,00,00,000	8.35 முறை	55,43,000 (55 விழுக்காடு)
2	தற்காலிக சான்றிதழ்	1,85,714	20,00,000	10.77 முறை	7,21,000 (36 விழுக்காடு)
3	ஒருங்கிணைந்த மதிப்பெண் தாள்	1,50,435	20,30,000	13.49 முறை	5,74,500 (28 விழுக்காடு)
4	பட்ட சான்றிதழ்	1,81,895	20,00,000	11.00 முறை	7,70,000 (39 விழுக்காடு)

(ஆதாரம்: பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட தரவு)

செப்டம்பர் 2021 நிலவரப்படி ₹ 34.29 கோடி மதிப்பிலான சுமார் 50 விழுக்காடு வெற்றுச் சான்றிதழ்கள், இருப்பில் உள்ளன[9]. **அட்டவணை 3.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, 2016-17ஆம் ஆண்டில் ஒரு வருடத் தேவைக்கு அதிகமாக வாங்கப்பட்ட வெற்றுச் சான்றிதழ்களின் மதிப்பு, ₹ 57.14 கோடி என்று தணிக்கை கண்டறிந்தது. 2017-18லிருந்து தரவரிசை முறையில் உள்ள சீராய்வின் காரணமாகத் தரத் தாள் (Grade sheet) மற்றும் தொகுப்புவிவர மதிப்பெண்

[7] ஒரு கோடி மதிப்பெண் தாள்கள், தலா 20 இலட்சம் தற்காலிக சான்றிதழ் மற்றும் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் மற்றும் 20.30 லட்சம் ஒருங்கிணைந்த மதிப்பெண்கள்.

[8] தலைப்பு 11.1 (A) vi (a) நுகர்பொருட்கள், எழுதுபொருட்கள் மற்றும் அச்சிடுதல்.

[9] கையிருப்பு: 44,57,000 மதிப்பெண் தாள்கள், 12,30,000 ஒருங்கிணைந்த மதிப்பெண் தாள்கள், 12,79,000 தற்காலிக சான்றிதழ்கள் மற்றும் 14,55,500 பட்ட சான்றிதழ்கள்.

பட்டியல் வடிவத்தில் மாற்றம் கூறப்பட்டது. இதனால் இருப்பில் உள்ள வெற்றுச் சான்றிதழ்களில், ₹ 24.50 கோடி மதிப்பில் பயன்படுத்தப்படாத தரத் தாள்கள் மற்றும் தொகுப்பு விவர மதிப்பெண் பட்டியல்கள் பயன்படுத்தப்பட முடியாததாயிற்று (2017).

எந்தவொரு சரியான அளவுகோலைக் கொண்டும் தேவையான அளவை CoE மதிப்பிடவில்லை என்பதையும், ஒருங்கிணைப்பாளர் குழுவிடம் முன்மொழிவைச் சமர்ப்பிக்கும் போது சரியான அளவைக் குறிப்பிடவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது. மேலும், FA கையேட்டின் விதிகளின் படி கொள்முதல் குழு அமைக்கப்படவில்லை மற்றும் கொள்முதல் ஆணையை பதிவாளர் கருதிய வண்ணம் வழங்கவில்லை. இது கையேட்டின் விதியை மீறியதாக உள்ளது.

மேலும், IFF லிமிடெட் என்பது 6 அக்டோபர் 2016 அன்று இந்த கொள்முதல் ஆணையைப் பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்பு மட்டுமே, அதாவது, 4 ஆகஸ்ட் 2016 அன்று நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனம், கல்விப் பதிவேடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கு பிப்ரவரி 2016ல் பல்கலைக்கழகத்தின் கொள்முதல் ஆணையை பெற்ற GST லிமிடெட் என்ற நிறுவனத்தின் சகோதர நிறுவனம் (sister concern) என்று கண்டறியப்பட்டது. இந்திய அரசின் (GoI) பெறு நிறுவன விவகார அமைச்சகத்தால் (Ministry of Corporate Affairs) பராமரிக்கப்படும் தரவுத்தளத்தின்படி, GST லிமிடெட் மற்றும் IFF லிமிடெட் ஆகிய இரண்டிலும் இயக்குநர் பதவி வகிக்கும் தனி நபர்[10] ஒருவரே, இந்த நிறுவனங்களுக்கு தலைமை தாங்குகிறார். மேலும், IFF லிமிடெட் வெற்றுச் சான்றிதழ்கள் சொந்தமாக அச்சிட்டு வழங்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. இவை, மகாராஷ்டிராவை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிறுவனத்தில் இருந்து பெறப்பட்டது. இத்தகைய ஒரு உடன்படிக்கையை CoE தடைசெய்யவில்லை. மற்றொரு நிறுவனத்திற்கு பணியை துணை ஒப்பந்தம் செய்வதற்கு வழங்கப்பட்ட மறைமுகமான ஒப்புதலானது, மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்த முறையை நாடுவதற்கு மேற்கொள் காட்டப்பட்ட இரகசியத்தன்மை என்ற காரணம் கேலிக்கைகுரியது என நிரூபித்தது.

எனவே, மேலே விவரிக்கப்பட்ட உள் கட்டுப்பாடுகளில் உள்ள தளர்வுகள், அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கு வழி வகுத்தது. நம்பகத்தன்மையுடன் கூடிய கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றாமல் மிகப் பெரிய அளவிலான (abnormally huge quantity) வெற்றுச் சான்றிதழ்களை வாங்குவதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக ₹ 57.14 கோடி மதிப்புள்ள வெற்றுச் சான்றிதழ்கள் அதிகமாகக் கொள்முதல் செய்ததால் தவிர்த்திருக்கக்கூடிய அதிகப்படியான செலவினம் ஏற்பட்டது. இதில் சான்றிதழின் வடிவத்தை மாற்றியதால் ₹ 24.50 கோடி மதிப்புள்ள சான்றிதழ்கள் ஏற்கனவே பயன்படுத்த முடியாததாகிவிட்டது.

தணிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் (அ) மாணவர் பதிவேடுகளை முழுமையடையாத டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வெற்று சான்றிதழ்களை அச்சடிப்பதில் உள்ள முறைகேடுகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு பணம் செலுத்தும் மோசடி தொடர்பாக அதிகாரிகளின் பங்கு குறித்து விசாரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது (பிப்ரவரி 2022) (ஆ) பல்கலைக்கழகத்தின் FA கையேட்டின் விதிகளை மறுபரிசீலனை செய்தல் மற்றும் உள்கட்டுப்பாட்டு முறையை சீர்திருத்த மற்றும் பலப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

10 திரு. கணேஷ் காளியன் (இயக்குனர் அடையாள எண் - DIN 03577514).

(பிப்ரவரி 2022) (இ) அனுமதியளிக்கப்பட்ட எந்தவொரு கொள்முதல்/ பணிகளுக்கும் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு TNTTA/TNTTRன் விதிகளை கண்டிப்பாக கடைபிடிக்க வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன, என்று GoTN பதிலளித்தது.

ஆயினும், பதிவேடுகளை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு முறையில்லாமல் வழங்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்கள் அரசாங்கத்தின் பதிலில் குறிப்பிடப்படவில்லை. மேலும், அதிகாரிகளின் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் மற்றும் முறையான திருத்தங்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

3.1.2 மோசடியான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத முறையில் ஒப்பந்தக்காரருக்கு பணம் வழங்கல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மண்டல மேலாளர்களால் கொள்முதல் நடைமுறை மீறப்பட்டமை மற்றும் உள் கட்டுப்பாடுகளின் தோல்வி காரணமாக ₹ 3.22 கோடி ஏற்றுக்கொள்ள முடியாத செலவினம்.

GoTNன் நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (Tamil Nadu Civil Supplies Corporation - TNCSC), பொது விநியோக முறையின் (Public Distribution System- PDS) கீழ் அத்தியாவசியப் பொருட்களின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது. TNCSC மாநிலத்தில் 2,610 நேரடி கொள்முதல் மையங்கள் (Direct Procurement Centres- DPCs), 1,455 நியாய விலைக் கடைகள் (Fair Price Shops- FPS) மற்றும் 296 கிடங்குகளை இயக்குகிறது. கள செயல்பாடுகள் அதன் 33 மண்டலங்களில் மண்டல மேலாளர்களால் (Regional Managers - RM) நிர்வகிக்கப்படுகின்றன. சரக்குகள் வரவு மற்றும் வெளியீட்டின் போது இருப்புகளை (stocks) எடைபோடுவதற்காக DPCக்கள், FPS மற்றும் கிடங்குகளில் வெவ்வேறு திறன் கொண்ட மின்னனு எடை அளவிடும் கருவிகளை TNCSC நிறுவியுள்ளது. தமிழ்நாடு சட்ட அளவியல் (அமலாக்கம்) விதிகள், 2011-ன் (Tamil Nadu Legal Metrology (Enforcement) Rules) கீழ் எடைக் கருவிகளின் சேவை மற்றும் பராமரிப்பு மற்றும் எடைக் கருவிகளை சட்டப்பூர்வமாக முத்திரை குத்துவதற்கு வசதியாக வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தில் (Annual Maintenance Contract - AMC) நுழைவதற்கு RMகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எடைக்கருவிகளின் AMC கட்டணங்களின் மீதாக ஒப்பந்ததாரர் M/s. சுந்தர் ஸ்கேல்ஸ்(M/s. sundar scales) செய்த மோசடி காரணமாக திருநெல்வேலி மண்டல மேலாளர் (தணிக்கை) அளித்த புகாரின் அடிப்படையில் (பிப்ரவரி 2020), சுந்தர் ஸ்கேல்ஸ் மீது TNCSCன் மேலாண் இயக்குநர் இது குறித்து ஒரு புலனாய்விற்கு உத்தரவிட்டார் (ஜூலை 2020). அதே நேரத்தில், TNCSCன் இணைக்கத்

தணிக்கையின் போது (நவம்பர் 2020 - ஏப்ரல் 2021), சுந்தர் ஸ்கேல்ஸுடன் AMC ஒப்பந்தம் செய்த 16 மண்டலங்களில் 13ல்[11] AMC கட்டணங்களை தணிக்கைக் குழு ஆய்வு செய்து பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

முத்திரை கட்டணத்தை மோசடியாகக் கோரியது - ₹ 1.09 கோடி

TNCSCன் மண்டல மேலாளர்கள் M/s. சுந்தர் ஸ்கேல்ஸுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் விதிமுறைகளின்படி சோதனை எடையளவுகளையும், எடை கருவிகளையும் முத்திரையிடுவதற்கு ஒப்பந்ததாரர் ஏற்பாடு செய்ய வேண்டும். உரிய அதிகாரியிடம் செலுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்ற கட்டணங்களை கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு உரிமை உண்டு. சட்ட அளவியல் ஆய்வாளர்களால் வழங்கப்பட்ட முத்திரை சான்றிதழ்களை அதற்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்துடன் ஒப்பிட்டு ஆய்வு செய்ததில் பின்வருவன வெளிப்படுத்தப்பட்டது:

- 2016-20ஆம் ஆண்டில், நான்கு மண்டலங்களில் ₹ 1 கோடியை மோசடியாகக் கோருவதற்காக ஒப்பந்ததாரர் போலி முத்திரையிடல் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளார். (**இணைப்பு 3.4**). சட்ட அளவியல் துறையின் பல போலி பண ரசீதுகளை, ஒரே எடைக்கருவி, இல்லதா எடைக்கருவிகள், கழிக்கப்பட்ட எடைக்கருவிகள் ஆகியவற்றின் மீதாக தயாரித்து சமர்ப்பிப்பதன் மூலம் இந்த மோசடியை மேற்கொண்டார். சம்மந்தப்பட்ட சட்ட அளவியல் ஆய்வாளர்கள் உறுதி செய்ததன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த முத்திரையிடல் சான்றிதழ்கள் போலியானது என நிரூபிக்கப்பட்டது. DPC/FPS கிடங்குக்குப் பொறுப்பான அதிகாரிகளால் ஒப்பந்ததாரரின் விலைப் பட்டியல்களை (Bills) சரிபார்ப்பதற்கான அடிப்படைச் சரிபார்ப்பைக் கூட மேற்கொள்ளாமல், இந்த மோசடியான பணக் கோரிக்கைகள் RMகளால் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- அதே காலகட்டத்தில், ஒப்பந்ததாரர் உண்மையில் செலுத்தப்பட்ட முத்திரைக் கட்டணத்தின் ரசீதுகளில் குறிப்பிடப்பட்ட தொகையை திருத்தி எழுதுதல், மேலே எழுதுவதன் (over writing) மூலம் மோசடியாக மாற்றினார். நான்கு மண்டலங்களின் RMகள் 157 நேர்வுகளில் ₹ 0.09 கோடி மோசடியாகக் கோரப்பட்டதை ஒப்புக் கொண்டனர் (**இணைப்பு 3.4**). DPC/FPS/கிடங்குகளின் பதிவுகளின்படி எடைக் கருவிகளின் எண்ணிக்கை மற்றும் கோரப்பட்ட கட்டணங்கள் ஆகியவற்றைச் சரிபார்க்காமல் பணம் செலுத்தப்பட்டன. செலுத்தப்பட்ட தொகையை எண்களாகவும், வார்த்தைகளாகவும் குறிப்பிடும் நடைமுறையை ஒப்பந்ததாரர் பின்பற்றவில்லை. இது ரசீதில் உள்ள தொகையை திருத்துவதற்கு வசதியாக இருந்தது.

ஏற்றுக்கொள்ள முடியாத சேவைக் கட்டணங்கள் - ₹ 2. 13 கோடி

ஒப்பந்த விதிமுறைகளின்படி, குறிக்கப்பட்ட கட்டணத்தில் உதிரிபாகங்களின் விலை மற்றும் சேவைக் கட்டணத்தை கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு உரிமை உண்டு. MD, TNCSCன் ஆணைகளின் (மே 2012) படி, ஒரு வருடத்திற்கு ஒரு

[11] அரியலூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், பெரம்பலூர், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் விருதுநகர்.

எடைக் கருவிக்கான தொகுக்கப்பட்ட (consolidated) உதிரி மற்றும் சேவைக் கட்டணங்கள், தலைமை அலுவலகத்தின் குறிப்பிட்ட ஒப்புதல் இல்லாமல், ₹ 1,500க்கு மிகாமல் இருக்க வேண்டும். 13 மண்டலங்களில், உதிரிபாகங்கள் மற்றும் சேவைக் கட்டணம் உச்சவரம்பைத் தாண்டியதாக தணிக்கை கண்டறிந்துள்ளது. ஏனெனில், ஒப்பந்ததாரர், ஒரே காலாண்டிற்குள், ஒரே எடைக் கருவிக்கான உதிரி பாகங்களை பல முறை மாற்றியதாகவும், இல்லாத எடைக்கருவிகள் / தடைசெய்யப்பட்ட எடைக் கருவிகளை பழுது பார்த்ததாகவும் கூறி போலி ரசீதுகளை சமர்ப்பித்தார். சோதனை சரிபார்க்கப்பட்ட மண்டலங்களில் 13ன் RMகள், உதிரி பாகங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கான ஒப்பந்தக்காரரின் விலைப் பட்டியல்களை ஏற்கும் போது (passing bills) உரிய கவனத்துடன் செயல்படவில்லை. ₹ 1,500க்கு மேல் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு MDன் தனிப்பட்ட ஒப்புதல் வேண்டும் என்ற உத்தரவுகளை அவர்கள் மீறியுள்ளனர். 2017-20ல் ஒப்பந்ததாரருக்கு உதிரிபாகங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு உச்சவரம்புக்கு அதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ₹ 2.13 கோடி[12] **(இணைப்புகள் 3.5 மற்றும் 3.6)**.

மோசடி பரிவர்த்தனைகளுக்கு வழிவகுத்த பல்வேறு அதிகாரிகளின் மீதான குறைபாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

இணையத்தில் கிடைக்கும் வணிக பட்டியலில், மின்னணு எடைக் கருவிகளின் பழுது மற்றும் பராமரிப்பு சேவையை வழங்கும் பல வணிக நிறுவனங்கள் உள்ளன. ஆயினும், சுந்தர் ஸ்கேல்ஸ் எடைக் கருவிக்கான AMC ஒப்பந்தத்தைப் பெற்றுள்ள ஆறு[13] மண்டலங்களிலிருந்து கிடைக்கும் விவரங்கள் பொறுத்தமட்டில், RMகள், சுந்தர் ஸ்கேல்ஸ், நெல்லை ஸ்கேல்ஸ் மற்றும் விவேக் ஸ்கேல்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்களின் நிலையான குழுவிடமிருந்து மட்டுமே விலைப்புள்ளிகளை கோரினர் விடுத்துள்ளனர். ஒப்பந்ததாரர்களுடன் நடந்த தொடர்புகளை ஆய்வு செய்ததில், சுந்தர் ஸ்கேல்ஸ் மற்றும் விவேக் ஸ்கேல்ஸ் ஆகியவை ஒன்றிற்கொன்று தொடர்புடைய நிறுவனங்கள் என்று உறுதிசெய்யப்பட்டது. எனவே, இது மண்டல மேலாளர்கள்/அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கூடிய கார்ட்டலைசேஷன் என்பதை தணிக்கை கண்டறிந்தது.

- ➢ மூன்று[14] மண்டலங்களில், எடைக் கருவிகளின் AMCக்கான செலவு ₹ 25 இலட்சத்தைத் தாண்டியது. ஆயினும்,TN ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம், 1998யின் விதிகளின் கீழ் RMகள் திறந்த ஒப்பந்தத்தை (tender) அழைக்கத் தவறியது வெளிப்பட்டது.
- ➢ 2015-16 மற்றும் 2019-20க்கு இடையிலான காலகட்டத்தில் AMCக்காக சுந்தர் ஸ்கேல்ஸ் உடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட 16 மண்டலங்களில் AMCக்கான செலவு 149 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் மற்ற மண்டலங்களில் 66 விழுக்காடு மட்டுமே அதிகரித்தது **(இணைப்பு 3.7)**. காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மண்டலங்களில், கூடுதலான செலவினம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விடங்களில் ஏற்பட்டுள்ள செலவு, முறையே 2015-16ல் ₹ 6.39 இலட்சம் மற்றும் ₹ 7.65 இலட்சத்திலிருந்து 2019-20ல்

---

12 உதிரி பாகங்கள் விலை மற்றும் சேவைக் கட்டணங்கள் முறையே ₹ 1.61 கோடி மற்றும் ₹ 0.52 கோடி என்ற ஏற்றுக்கொள்ள முடியாத கோரப்பட்ட தொகை.

13 கடலூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், தேனி மற்றும் திருவண்ணாமலை.

14 கடலூர், காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூர்.

₹ 45.63 இலட்சம் (699 விழுக்காடு) மற்றும் ₹ 36.69 இலட்சம் (372 விழுக்காடு) ஆக அதிகரித்துள்ளது. AMC மீதான செலவினங்களில் இயல்பு மீறிய அதிகரிப்பு இருந்தபோதிலும், அதற்கான காரணத்தை, மோசடியான செலவினங்களை தடுக்கும் பொருட்டு RMகள் பகுப்பாய்வு செய்யவில்லை.

- ஜூலை 2020ல் திருநெல்வேலி மண்டலத்தின் மேலாளரால் (தணிக்கை) இதனை கோடிட்ட போதிலும், TNCSCன் உள் தணிக்கை புலனாய்வு மூலம் இதில் உள்ள மோசடி நோக்கத்தை உறுதி செய்த போதிலும், நிறுவனத்தை தடுப்புப்பட்டியலில் சேர்த்ததைத் தவிர, TNCSC எந்த குற்ற நடவடிக்கையையும் தொடங்கவில்லை.
- காஞ்சிபுரத்தின் RM, ஒப்பந்ததாரரிடமிருந்து "அதிகப்படியாக செலுத்தப்பட்ட" ₹ 25 இலட்சத்தினை திரும்பப் பெற்றதற்கான ஆதாரம் பதிவில் இல்லை. வழங்கப்பட்ட பணத்தின் மீட்டெடுப்பு மோசடியினை உறுதி செய்ததாக தணிக்கை கண்டறிந்தது. ஆனால், எந்த தண்டனை நடவடிக்கையும் ஊழியர்களின் ஈடுபாடு பற்றிய விசாரணையும் இல்லாமல் தொகையை மீட்டெடுப்பது மட்டுமே மேற்கொள்வது குற்றவாளிகளை தண்டிக்காமல் தவறினை மூடிமறைக்க உதவும்.

இவ்வாறு, கொள்முதல் நடைமுறைகளை மீறுதல், கொள்முதல் செயல்முறையின் கார்ட்டலைசேஷனை தடுப்பதில் மண்டல மேலாளர்கள் தவறியது மற்றும் குறைபாடுள்ள உள் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவை ₹ 3.22 கோடி மோசடியான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத செலவினங்களுக்கு காரணமாகி TNCSCக்கு இழப்பை ஏற்படுத்தியது.

GoTN தணிக்கை முடிவுகளை ஏற்றுக்கொண்டு, 16 மண்டலங்களில், ஒப்பந்ததாரருக்கு மோசடியாக வழங்கப்பட்ட ஏற்றுக்கொள்ள முடியாத பண வழங்கல்கள், ₹ 4.31 கோடி[15] இழப்பிற்கு காரணமாக இருந்ததாகக் கூறியுள்ளது (டிசம்பர் 2021). மேலும், தவறு செய்த அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட விளக்க கேட்பு அறிவிப்பிற்கு அவர்களிடமிருந்து விளக்கம் கிடைத்தவுடன் அவர்களின் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் பண மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்றும், தேவைபட்டால், சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அதிகாரிகள் மூலம் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் GoTN பதிலளித்தது.

ஒப்பந்ததாரர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், சுந்தர் ஸ்கேல்ஸ் உடன் ஒப்பந்தம் செய்த 16 மண்டலங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் இந்த செயல் மீதான பங்கு விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தணிக்கை பரிந்துரைக்கிறது.

[15] முந்தைய துணை பத்தியில் சுட்டிக்காட்டியபடி ₹ 3.22 கோடி இழப்பு ஏற்பட்ட 13 மண்டலங்களில் மட்டுமே தணிக்கை நடத்தப்பட்டது.

3.2 இழப்பு/ வீண் செலவினம்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

3.2.1 இரண்டு தங்குமிடங்கள் கட்டுமானத்தில் பயனற்ற செலவு

GoTN கட்டுமானத் தொழிலாளர்கள் தங்குவதற்கு இரண்டு தங்குமிடங்களைத் தேவை மதிப்பீடு ஆய்வு மேற்கொள்ளாமலும், மற்றும் கட்டட அமைப்பாளர்களுடன் இணைந்து செயல்படாமலும் கட்டியது. இந்த தங்கும் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டதிலிருந்து பயன்படுத்தபடாமல் இருப்பதால் ₹ 31.66 கோடி பயனற்ற செலவினமாக மாறியது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் (CWWB) நல நிதியைப் பயன்படுத்தி, ₹ 106 கோடி செலவினத்தில், கட்டுமான தொழிலாளர்களுக்கு தற்காலிக தங்குமிடம் வழங்குவதற்காக ஒன்பது[16] தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியது (டிசம்பர் 2014). வருவாய்த்துறை அல்லது உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிலம் ஒதுக்கப்பட்டு, பொதுப்பணித் துறை (PWD) மூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 30 கி.மீ. ஆரம் (radius) கொண்ட பரப்பில் கட்டப்படும் கட்டுமானப் பணித் தளங்களில் பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்கள் தங்குவதற்கு இந்த தங்கும் விடுதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். தங்கும் விடுதிகளில் தங்கும் கட்டுமானத் தொழிலாளர்கள், பராமரிப்புக் கட்டணமாக நாள் ஒன்றுக்கு ₹ 20 செலுத்த வேண்டும்.

ஜனவரி 2019 மற்றும் செப்டம்பர் 2021ல் நடந்த தணிக்கையில், CWWB, டிசம்பர் 2014ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட ஒன்பது தங்குமிடங்களில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் எழிச்சூர் மற்றும் தையூர் 'B' கிராமங்களில் மொத்தம் ₹ 31.66 கோடி செலவினத்தில் ஒவ்வொன்றிலும் 1,000 தொழிலாளர்கள் தங்கும் வசதி கொண்ட இரண்டு தங்கும் விடுதிகள் கட்டப்பட்டன (**இணைப்பு 3.8**) என்று அறியப்பட்டது.

(அ) எழிச்சூர் கிராமத்திலுள்ள தங்கும் விடுதி

- மார்ச் 2017ல் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த போதிலும், மின்மாற்றி (electrical transformer) நிறுவுதல் மற்றும் அறைகலன்கள் (furniture) கொள்முதலில் தாமதம் ஏற்பட்டதால், CWWB, பொதுப் பணித்துறையிடமிருந்து (PWD) ஜூன் 2019 ல் கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டது.
- CWWB, இந்த தங்கும் விடுதிகளில் கட்டுமானத் தொழிலாளர்களை தங்க வைக்க பல்வேறு கட்டட அமைப்பாளர்கள் சங்கங்களை அணுகியது. 2019ஆம் ஆண்டு ஜூலை முதல் அக்டோபர் வரையிலான காலகட்டத்தில், 1,000 பேர் கொண்ட தங்குமிடம், ஒரு சில சந்தர்ப்பங்களில், ஆறு முதல் 49 தொழிலாளர்களை தங்க வைப்பதற்கு குறைவாகவே பயன்படுத்தப்பட்டது என்று தணிக்கை கண்டறிந்தது. நவம்பர் 2019 முதல் இன்று வரை (அக்டோபர் 2021) தங்கும் விடுதிகள் தங்குபவர்கள் இல்லாமலேயே இருந்தது.

---

16 சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் தலா 1,000 பணியாளர்கள் தங்கும் வசதிகொண்ட ஐந்து தங்குமிடங்களும், கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மாவட்டங்களில் தலா 500 பேர் தங்கும் வசதி கொண்ட 4 தங்குமிடங்களும் ஆகும்.

(ஆ) தையூர் 'B' கிராமத்திலுள்ள தங்கும் விடுதி

- தங்கும் விடுதி கட்டுமானம் பிப்ரவரி 2018ல் நிறைவடைந்த போதிலும், முக்கியமாக தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாததால், இரண்டு வருட தாமதத்திற்குப் பிறகு, ஏப்ரல் 2020ல் பொதுப்பணித் துறையிடமிருந்து CWWB கட்டிடத்தை பெற்றுக் கொண்டது.
- ஏப்ரல் 2020ல் CWWB தங்கும் விடுதியைக் கையகப்படுத்திய பின்னரும் தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளில் சிக்கல்கள் நீடித்தன. அதைத் தொடர்ந்து, ஜூன் 2020ல், அருகிலுள்ள ஏரியிலிருந்து நீர் வழங்குவதற்கான புதிய பணிக்காக GoTN ₹ 25.25 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்தது. ₹ 19.79 இலட்சம் செலவில் இப்பணி நிறைவடைந்த நிலையில், நான்கு கி.மீ. நீளமுள்ள HDPE குழாயில் பல்வேறு அடைப்பு ஏற்பட்டிருந்ததால் ஏரியில் இருந்து தேவையான தண்ணீரை எடுக்க முடியவில்லை.
- பிப்ரவரி 2018ல் நிறைவடைந்ததிலிருந்து, எந்தத் தொழிலாளியும் தங்கும் விடுதியில் தங்கவில்லை. கோயம்பேடு காய்கறி சந்தையின் 245 தொழிலாளர்கள் தங்குவதற்கு தற்காலிகமாக 7 மற்றும் 15 மே 2020 இடையேயான ஒரு வார காலத்திற்கு கோவிட் - 19 தடுப்பு நடவடிக்கையாக சந்தை மூடப்பட்ட போது இந்த தங்குமிடம் பயன்படுத்தப்பட்டது. அதன்பின், தங்கும் விடுதி முழுமையாக ஆட்கள் இல்லாமல் உள்ளது
- தையூர் விடுதியில் பணியமர்த்தப்பட்டவர்கள் 2020 ஜனவரி முதல் நவம்பர் வரை மாவட்ட அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டனர்.

இரண்டு தங்குமிடங்களையும் பொறுத்தவரையில் தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- கட்டட அமைப்பாளர்கள் தங்களுடைய தொழிலாளர்களை தங்குமிடங்களில் தங்க வைப்பது முற்றிலும் தன்னார்வ அடிப்படையிலாகும். கட்டட அமைப்பாளர்கள் தயக்கம் காட்டுதல், தங்குமிடங்கள் கட்ட சரியாக திட்டமிடப்படாமல் இருந்ததை உணர்த்தியது.
- நவம்பர் 2019ல் கட்டட அமைப்பாளர்களின் பிரதிநிதி, CWWB உடனான சந்திப்பின் போது, தங்குமிடங்களில் இருந்து பணியிடங்களுக்கு தொழிலாளர்களைக் கொண்டு செல்வதற்கான கூடுதல் செலவு காரணமாக தங்குமிடங்களில் தங்களுடைய தொழிலாளர்களை தங்க வைப்பதில் உள்ள சிரமங்களை வெளிப்படுத்தினார். இதனால், கட்டட பணித் தளம் இடம் தேர்வு முறை சரியாக இல்லை என தணிக்கையில் கண்டறியப்பட்டது.

இவ்வாறு, எவ்வித தேவை கருத்தாய்வும் இன்றி, திட்டமிடாமல் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டதாலும், கட்டட அமைப்பாளர்களுடன் முறையான தொடர்பை ஏற்படுத்தாததாலும், ₹ 31.66 கோடி செலவினத்தில் கட்டப்பட்ட இரண்டு தங்கும் விடுதிகளும், 2017-18ல் கட்டி முடிக்கப்பட்டதில் இருந்து, பயனற்ற நிலையில் உள்ளன. இதனால், மொத்த செலவினமான ₹ 31.66 கோடியானது பயனற்ற செலவினமானது.

கோவிட்-19 காரணமாக, இந்த தங்குமிடங்களை சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு சிகிச்சை வசதிகள் அல்லது தங்கும் வசதிக்கான இருப்பு மையங்களாக அரசாங்கம் வைத்திருக்கிறது என்றும், இந்த மையங்கள் தொற்றுநோய் முடிந்தவுடன் பயன்படுத்தப்படும் என்றும் GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). இருப்பினும், கோவிட்-19 தொற்றுநோய்க்கு முன்பே இந்த மையங்கள் மார்ச் 2017/பிப்ரவரி 2018ல் முடிக்கப்பட்டதிலிருந்து செயலற்ற நிலையில் இருப்பதை தணிக்கை குறிப்பிடுகிறது.

தணிக்கை பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறது:

- திட்டமிடப்படாத கட்டுமானத்தின் காரணமாக பயன்படுத்தப்படாமல் இருக்கும் அடுத்தடுத்த நிகழ்வுகளை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். முறையான நிர்வாக ஒப்பளிப்பிற்கு முன் திட்ட மதிப்பீடு செயல்முறையை (project appraisal process) சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.
- பிற துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் கட்டண அடிப்படையில் தங்க அனுமதிப்பதை அரசாங்கம் கருத்தில் கொள்ளலாம்.

பள்ளிக் கல்வித் துறை

3.2.2 இலவச சீருடை வழங்குவதில் தேவையற்ற செலவினம்

சொந்த சீருடை பரிந்துரைத்த 72 மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 31,152 மாணவர்களுக்கு சீருடை வழங்குவதில் ₹ 4.13 கோடி வீண் செலவு ஏற்பட்டது. மேலும், 49 மாதிரி பள்ளிகளில் 21,086 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ₹ 2.22 கோடி மதிப்பிலான சீருடைகள் மிகக்குறைவாக மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு, ஆண்டுதோறும் நான்கு சீருடைகள்[17] இலவசமாக வழங்கும் திட்டம் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு (GoTN) செயல்படுத்தி வருகிறது. இந்த சீருடைகள் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் சத்துணவுத் திட்டத்தின் (Nutritious Meal Programme - NMP) கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் பள்ளிக் கல்வி இயக்குநராலும் (Director of School Education - DSE) தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை தொடக்கக் கல்வி இயக்குநராலும் (Director of Elementary Education - DEE) செயல்படுத்தப்படுகிறது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் (Director of Handloom and Textiles - DHT) துணி கொள்முதல் மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளார் மற்றும் சமூக நல இயக்குநர் (Director of Social Welfare - DSW) மகளிர் தையல் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சீருடைகளை தைக்க உதவுகிறார். தைக்கப்பட்ட சீருடைகள் அந்தந்த பள்ளிகள் மூலம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட DEOக்கள்/BEEOகளிடம்[18] வழங்கப்படுகின்றன.

---

[17] இத்திட்டம் 1985 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012-13 ஆம் கல்வியாண்டு முதல் நான்கு சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[18] மாவட்டக் கல்வி அலுவலர்கள்/தொகுதி தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

2021-22ஆம் கல்வியாண்டில், தமிழ்நாட்டில் உள்ள அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளின் மொத்த மாணவர் எண்ணிக்கை 47.89 இலட்சம்[19]. அவர்களில் 38.41 இலட்சம் பேர் (80 விழுக்காடு) மதிய உணவு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர், எனவே இலவச சீருடைக்கு தகுதி பெற்றுள்ளனர். 2018-21ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் GoTN ஆண்டுக்கு சராசரியாக ₹ 409.63 கோடி செலவினம் ஏற்படுகிறது.

2021 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நான்கு[20] மாவட்டங்களில் உள்ள 1,425 அரசு உதவிபெறும் (Government aided -GA) பள்ளிகளில் 214 மாதிரி[21] பள்ளிகளில் சீருடைப் பயன்பாடு குறித்த தணிக்கை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- சென்னை மாவட்டத்தில் உள்ள 66 மாதிரி GA பள்ளிகளில் 48ல், பள்ளிகளின் நிர்வாகங்கள் வெவ்வேறு வண்ணம்/வடிவமைப்பு கொண்ட சீருடையை அமுலாக்கியுள்ளன. எனவே, மாணவர்கள் GoTN இலவசமாக வழங்கிய சீருடையை அணியவில்லை. வேறு 13 GA பள்ளிகளில், மாணவர்கள் வாரத்தில் ஒரு நாள் முதல் மூன்று நாட்கள் வரை இலவச சீருடையை அணிந்தனர். மீதமுள்ள நாட்களில் அவர்கள் பள்ளி நிர்ணயித்த சீருடையை அணிந்தனர்.

- மீதமுள்ள மூன்று[22] மாவட்டங்களில் உள்ள 148 மாதிரி GA பள்ளிகளில், 24ல், GoTN வழங்கிய சீருடைகள் பயன்படுத்தப்படவில்லை. பதிலாக, பள்ளி நிர்வாகத்தால் பரிந்துரைக்கப்பட்ட வெவ்வேறு சீருடைகள் பயன்படுத்தப்பட்டன. மேலும், 36 பள்ளிகளில், மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் முதல் மூன்று நாட்களுக்கு அரசு வழங்கிய சீருடைகளை அணிந்து வந்தனர்.

- மாதிரி மாவட்டங்களில், மாணவர்கள் வெவ்வேறு சீருடைகளை வாரம் முழுவதும் அணிந்திருந்த 72 மாதிரி GA பள்ளிகளுக்கு 2019-21ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சீருடைகளின் விலை, ₹ 4.13 கோடி **(அட்டவணை 3.2)**. மேலும், 2019-21ஆம் ஆண்டில் வாரத்தில் ஒன்று முதல் மூன்று நாட்கள் வரை மாணவர்கள் இலவச சீருடை அணிந்திருந்த 49 மாதிரி GA பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட சீருடைகளின் விலை, ₹ 2.25 கோடி **(அட்டவணை 3.2).**

---

19 அரசுப் பள்ளிகள் 37,555ல், 34.46 இலட்சம் மாணவர்களும், 7,284 முழு உதவி பெறும் பள்ளிகளிலும், 1,056 பகுதி உதவி பெறும் பள்ளிகளில் 13.43 இலட்சம் மாணவர்களும் உள்ளனர்.

20 சென்னை, காஞ்சிபுரம், தூத்துக்குடி மற்றும் வேலூர்.

21 ஒவ்வொரு மாவட்டத்திலும் இருபத்தைந்து விழுக்காடு அல்லது குறைந்தபட்சம் 50 GA பள்ளிகள், இவற்றில் குறைவானது.

22 காஞ்சிபுரம், தூத்துக்குடி மற்றும் வேலூர்.

அட்டவணை 3.2: 2019-21 ஆம் ஆண்டில் மாதிரி GA பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட சீருடைகளின் விலை

வ. எ ண்	மாவட்டம்	உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை		வாரத்தின் அனைத்து நாட்களுக்கும் வெவ்வேறு சீருடைகளை பரிந்துரைத்த பள்ளிகள்			வாரத்தில் ஒன்று முதல் மூன்று நாட்களுக்கு வெவ்வேறு சீருடைகளை பரிந்துரைத்த பள்ளிகள்		
		மொத்தம்	மாதிரி பள்ளிகள்	பள்ளி-களின் எண்-ணிக்கை	2019-22 இல் மாணவர்-களின் எண்-ணிக்கை	வழங்-கப்பட்ட சீருடைக்-கான விலை (₹ கோடியில்)	பள்-ளிகளின் எண்-ணிக்கை	2019-22 இல் மாணவர்-களின் எண்-ணிக்கை	வழங்-கப்பட்ட சீருடைக்-கான விலை (₹ கோடியில்)
1	சென்னை	350	66	48	19,510	4.13	13	6,520	2.25
2	காஞ்சிபுரம்	76	57	7	3,756		10	4,201	
3	தூத்துக்குடி	857	55	14	6,093		19	5,725	
4	வேலூர்	142	36	3	1,730		7	4,827	
	மொத்தம்	**1,425**	**214**	**72**	**31,089**	**4.13**	**49**	**21,273**	**2.25**

(ஆதாரம்: DSE / DEE மற்றும் அந்தந்த பள்ளிகளால் வழங்கப்பட்ட விவரங்கள்.)

இந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் (Heads Masters - HM), தணிக்கை முடிவுகளை ஏற்றுக்கொள்வதோடு, அவர்கள் தங்கள் மாணவர்களுக்கான இலவச சீருடைகள் கோரவில்லை என்றும், அவை, அனைத்து NMP பயனாளிகளுக்கும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது என்றும் பதிலளித்தனர். 2019-22க்கான கல்வியாண்டில் 1,45,107 மாணவர்களில் 61,908 பேர் மட்டுமே NMPயின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று மாதிரி GA பள்ளிகளில் சேர்க்கை தரவுகளின் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. இந்த 43 விழுக்காடு மாணவர்கள் மட்டுமே இலவச சீருடைக்கு தகுதி பெற்றுள்ளனர், மீதமுள்ள 57 விழுக்காடு மாணவர்கள் இலவச சீருடைக்கு தகுதி பெறவில்லை. இரண்டு வெவ்வேறு சீருடைகளை அணிவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்று சில பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். பள்ளிகளில் இருந்து குறிப்பிட்ட கோரிக்கைகள் (indents) பெறாமல், செயல்படுத்தப்படும் தற்போதுள்ள திட்டம் தேவையின்றி இலவச சீருடைகளை பள்ளிகளுக்கு வழங்குவதாக தணிக்கை கண்டறிந்தது.

தணிக்கை முடிவுகளை ஏற்றுக்கொண்ட GoTN, டிசம்பர் 2021ல் பள்ளிக் கல்வி ஆணையர்அனைத்து தலைமைக் கல்வி அதிகாரிகளுக்கும் சீருடை பெறும் அனைத்து மாணவர்களும் அதைத் தவறாமல் அணிவதை உறுதிசெய்ய தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என்று பதிலளித்தது, (மார்ச் 2022). கள அதிகாரிகள் அதை கண்காணித்து, எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வார்கள் என்று GoTN மேலும் கூறியது.

தனியார் பள்ளிகளில் படிக்கும் பயனாளிகளை சீருடை கேட்புக் கோரிக்கைகள் இல்லாமல் வழங்கப்பட்ட இலவச சீருடையை அணிய வற்புறுத்துவது, பயனாளிகள் ஒரு வகை சீருடையையும் மற்ற மாணவர்கள் பள்ளி நிர்வாகம் பரிந்துரைக்கும் வேறு வகை சீருடையையும் அணியும் சூழ்நிலையை உருவாக்கும் என்று தணிக்கை கண்டறிந்தது. இந்தச்சூழல் வெவ்வேறு சீருடைகளின் அடிப்படையில் மாணவர்களிடையே ஒற்றுமையின்மையை உருவாக்க வல்லது மற்றும் இது இறுதியில் சீருடை பரிந்துரைக்கப்படும் முதன்மை நோக்கத்தை முறியடிக்கிறது.

எனவே, GA பள்ளிகளில் NMP சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் அவர்களது தேவையை அறிந்துகொள்ளாமல், DSE/DEE மூலம் வழங்கப்படும் சீருடைகளால்

₹ 4.13 கோடி தேவையற்ற செலவினம் ஏற்பட்டது. மேலும், சீருடையை ஓரளவு மட்டுமே பயன்படுத்திய மாணவர்களுக்கு ₹ 2.25 கோடி மதிப்பில் சீருடைகள் வழங்கப்பட்டன.

தணிக்கை பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறது:

- அரசு, திட்ட வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்யலாம் மற்றும் இலவச சீருடைகளுக்கு குறிப்பிட்ட சீருடை கேட்புக் கோரிக்கைகள் வழங்கும் பள்ளிகளின் மாணவர்களுக்கு மட்டுமே இலவச சீருடைகளை வழங்கலாம்.
- வாரத்திற்கு ஒன்று முதல் மூன்று நாட்கள் மட்டுமே இலவச சீருடை அணிய அனுமதிக்கும் பள்ளி மாணவர்களுக்கு சீருடைகளின் எண்ணிக்கையை அரசு குறைக்கலாம்.

3.3 ஒழுங்குமுறை முறைகேடுகள் மற்றும் பிற சிக்கல்கள்

உயர்கல்வித் துறை

3.3.1 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகள்

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மின்-பாடத்தொகுப்புகள் (e-Content) மற்றும் மின்-கற்றல் (e-Learning) முகப்பு (portal) உருவாக்குதலுக்கான ஒப்பந்த ஆவணங்கள் தயாரிப்பதில் முறைகேடுகள், ஒப்பந்த மதிப்பீட்டில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் ஒப்பந்ததாரர் வழங்கிய சேவையின் தரத்தை உறுதி செய்யத் தவறியதால் ₹ 10.70 கோடி தேவையற்ற செலவினமும் ₹ 5.17 கோடி தொகை செலுத்தும் எதிர்பாரா பொறுப்பும் (contingent Liability) ஏற்பட்டது.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம், 1998 (The Tamil Nadu Transparency in Tenders Act - TNTTA) மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், ஒப்பந்தங்களை கோருவதற்கான நடைமுறை, ஒப்பந்த ஆவணம் தயாரித்தல், ஒப்பந்தங்களை மதிப்பீடு செய்தல், ஒப்பந்ததாரர் செய்த சேவைகளுக்கான கட்டணம் வழங்குதல் போன்றவற்றிற்கு வழிவகுக்கின்றது. பிப்ரவரி 2021ல் நடந்த மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் (Madurai Kamaraj University - MKU) பதிவுகளின் தணிக்கை ஆய்வானது விதிகளில் இருந்து விலகியமையால் ஏற்பட்ட வீண் செலவினங்களை வெளிப்படுத்தின.

ஆகஸ்ட் 2013ல், பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகத்தால் (Directorate of Distance Education -DDE) நடத்தப்படும் படிப்புகளின் பாடத் தொகுப்புகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கும், ஒரு பிரத்யேக மின்-கற்றல் முகப்பில் மின்- பாடத் தொகுப்புகளை வழங்குவதற்கும் பல்கலைக்கழகத்தின் கூட்டமைப்பு ஒப்புதல் அளித்தது. ஆரம்பத்தில் சுமார் ₹ 5 கோடி முதல் ₹ 6 கோடி செலவில் மதிப்பிடப்பட்ட இந்தத் திட்டம், DDEன் நிதியைப் பயன்படுத்தி செயல்படுத்தப்பட இருந்தது. பல்கலைக்கழகத்தின் கூடுதல் இயக்குநர், பல்கலைக்கழகத்தின் DDE, ஊடாடும் டிஜிடல் பாடத் தொகுப்புகள் (interactive digital content) மற்றும் கட்டண செலுத்த வசதியுடன் கூடிய மின்-கற்றல் முகப்பை (e-Learning portal with payment gateway) உருவாக்க, ஆர்வத்தின் வெளிப்பாட்டை(Expression of

Interest - EoI) கோரினார் (அக்டோபர் 2013). EoIல் ஆறு நிறுவனங்கள் பங்கு பெற்றன. பெறப்பட்ட EoIஐ அறிந்து கொள்வதற்கும் ஒரு தொழில்நுட்ப அறிக்கை மற்றும் தொடர்புடைய ஒப்பந்த ஆவணங்களைத் தயாரிக்கவும் பல்கலைக்கழகம் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட 'நிபுணர் குழுவை'[23] அமைத்தது. டிசம்பர் 2013ல், MKUன் பதிவாளர் ஒப்பந்தங்களைக் கோரினார். பணியின் நோக்கம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

(அ) உரை (text), குரல் ஓசை (voice over), இயங்குபடங்கள் (animations), விளக்கப்படங்கள் போன்றவற்றுடன் டிஜிட்டல் பாடத் தொகுப்புகளை உருவாக்குதல் (ஆ) கட்டணம் செலுத்தும் வசதி (payment gateway), மெய்தோற்ற வகுப்பறை வசதி (virtual classroom facility) போன்றவற்றுடன் மின்-கற்றல் முகப்பை உருவாக்குதல் மற்றும் (இ) மின் பாடத்தொகுப்பு மற்றும் முகப்பினைப் பராமரித்தல்.

மூன்று[24] நிறுவனங்கள் தங்கள் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தன (ஜனவரி 2014) மற்றும் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட ஒரு ஒப்பந்த ஆய்வுக் குழு[25] அவற்றை ஆய்வு செய்தது(ஜனவரி 2014) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரை[26] குழு கண்டறிந்து ஒப்பந்தம் வழங்க பரிந்துரைத்தது. பல்கலைக்கழகத்தின் கூட்டமைப்பு குறைந்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை வழங்கியது (பிப்ரவரி 2014). 26 பிப்ரவரி 2014 அன்று பதிவாளர் பணி ஆணையை வழங்கினார். ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனம் மின்-கற்றல் முகப்பை உருவாக்கி, 2,324 மின் புத்தகங்களின் தொகுதிகளை (volumes) பதிவேற்றியது. (மே 2014 முதல் அக்டோபர் 2016 வரை). ஜனவரி 2014 மற்றும் ஏப்ரல் 2015ல், ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்ததாரர் வழங்கிய சேவைகளுக்காக பல்கலைக்கழகம் ₹ 10.70 கோடி[27] வழங்கியது. மார்ச் 2020ல் உள்ளக முயற்சிகள் மூலம் புதிய போர்டல் உருவாக்கப்பட்டு தொடங்கப்படும் வரை, சுமார் ஐந்து ஆண்டுகளாக இந்த போர்டல் செயல்பாட்டில் இருந்தது.

MKUல் மின்-பாடத்தொகுப்பு திட்டம் தொடர்பான பதிவுகளின் தணிக்கை ஆய்வு பின்வரும் குறைபாடுகளை வெளிப்படுத்தியது:

- **மதிப்பீடு கூட்டமைப்பால் (Syndicate) அங்கீகரிக்கப்படவில்லை**: கூட்டமைப்பின் கொள்கை ஒப்புதலின் அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பகுதி வாரியான செலவுப் விவரத்துடன் கூடிய விரிவான மதிப்பீட்டுத் தயாரிப்போ அல்லது எடுத்துக் கொள்ளப்படும் அளவோ பணியின் கூட்டமைப்பிற்குத் தெரிவிக்கப்படவில்லை.
- **ஒப்பந்த ஆவணங்கள் நிபுணர்களால் தயாரிக்கப்படவில்லை**: தணிக்கை மூலம் ஆய்வு செய்யப்பட்ட கோப்புகள், இரண்டு உறுப்பினர் கொண்ட நிபுணர்கள் குழு டெண்டர் ஆவணங்களைத் தயாரித்திருப்பதைக்

---

23 அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம கிராமப்புற நிறுவனம் உறுப்பினர்கள்.

24 (i) எம்.எஸ். ஜன்யா ஐடி டெக்னாலஜிஸ், ஹைதராபாத், (ii) M/s. மஹிமா டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட், சேலம் மற்றும் (iii) M/s. SET இன்போ டெக் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.

25 MKUலிருந்து ஏழு அதிகாரிகள்/ஆசிரியர்கள் மற்றும் மற்ற பல்கலைக்கழகங்களில் இருந்து இரண்டு நிபுணர்கள் உள்ளனர்.

26 SET இன்ஃபோடெக் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.

27 மின் புத்தக மேம்பாடு மற்றும் மின் கற்றல் முகப்பின் வளர்ச்சிக்காக.

காட்டியது. ஆவணங்கள்[28] உண்மையானதாகத் தோன்றாததால், தணிக்கை, நிபுணர் குழுவின் இரு உறுப்பினர்களையும் அணுகியது. மேலும் அவர்கள் இருவரும் ஒப்பந்த ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதை தணிக்கைக்கு தனித்தனியாக உறுதிப்படுத்தினர். முறையாக நியமிக்கப்பட்ட வல்லுநர்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியிலிருந்து ஒதுக்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. இதன் விளைவாக எற்பட்ட தரம் குறைந்த ஏல ஆவணங்கள் மற்றும் ஒப்பந்த மதிப்பீட்டு முறை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- **வழங்கப்பட வேண்டிய சேவையின் தன்மை பற்றிய தெளிவின்மை**: ஒப்பந்த செய்யப்பட்ட பணிகள் மூன்று தனித்தனி பகுதிகளைக்[29] கொண்டிருந்தன. பகுதி (i) அதாவது, மின் கற்றலுக்கான “பாடத்தொகுப்பு தயாரிப்பு” (content preparation) மற்றும் “மின்-புத்தக மாற்றம்” (e-Book conversion) ஆகிய துணைக் கூறுகளை உள்ளடக்கிய “மின்-கற்றல் பாடத்தொகுப்பு உருவாக்குதல்” (E- learning content development). ஒப்பந்த ஆவணத்தின்படி, பல்கலைக் கழகம் படிப்புகளின் பாடத்திட்டத்தை வழங்க வேண்டும் மற்றும் ஒப்பந்ததாரர் (சேவை வழங்குநர்) பாடத்தொகுப்புகளை உருவாக்கி, குரல் ஓசை, இயங்குபடங்கள் போன்றவற்றுடன் கூடிய மின் புத்தகமாக மாற்ற வேண்டும். இருப்பினும், பல்கலைக்கழகம் உண்மையில் புத்தக வடிவில் உள்ளடக்கத்தை வழங்கியது மற்றும் ஒப்பந்ததாரரின் பங்கு அதை மின் புத்தகமாக மாற்றுவது மட்டுமே என்று கண்டறியப்பட்டது. SET இன்ஃபோடெக் ஒரு புத்தகத்திற்கு ₹ 75,700 என்று குறிப்பிட்டிருந்தது (பாடத் தொகுப்பு உருவாக்கத்திற்கு ₹ 19,950 மற்றும் மின்-புத்தக மாற்றத்திற்கு ₹ 55,750). இரண்டாவது மிகக்குறைந்த ஒப்பந்ததாரர் ₹ 90,000 மதிப்பிட்டிருந்தார் (பாடத் தொகுப்பு உருவாக்கத்திற்கு ₹ 45,000 மற்றும் குரல் ஓசை மின்-புத்தக மாற்றத்திற்கு ₹ 45,000 முதலியன). எனவே, பாடத் தொகுப்பு உருவாக்கம் உண்மையில் SET இன்ஃபோடெக் மூலம் மேற்கொள்ளப்படாததால், பணியின் ஒரு பகுதியாக பாடத் தொகுப்பு உருவாக்கத்தன் தவறான சேர்க்கை (wrong inclusion of content development), SET இன்ஃபோடெக் L1 ஆக மாறுவதற்கு வழிவகுத்ததை தணிக்கை கண்டறிந்தது; இல்லையெனில், SET இன்ஃபோடெக் விலைப்புள்ளியில் காட்டிய ₹ 55,750க்கு எதிராக மின்புத்தக மாற்றத்திற்கு தங்கள் விலைப்புள்ளியில் ₹ 45,000 காட்டிய இரண்டாவது குறைந்த ஒப்பந்ததாரர் L1ஆக இருந்திருப்பார்.

- **பணியின் நோக்கம் தவறாக கணிக்கப்பட்டமை**: ஒப்பந்தம் செய்யப்பட்ட பணிகளில் உருவகப்படுத்தப்பட்ட (simulated) வகுப்பறைச் சூழல் மூலம் கற்றலுக்கான மெய்நிகர் (virtual) வகுப்பறையின் உருவாக்கம் அடங்கும். ஜூன் 2017 வரை, திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி

---

28 ஒரு நிபுணரிடமிருந்து வந்ததாகக் கூறப்படும் ஒரு மின்னஞ்சல் மற்றும் கையொப்பமிடப்படாத ஒரு அறிக்கை மற்ற நிபுணரிடமிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

29 (i) மின்-கற்றல் உள்ளடக்க மேம்பாடு, (ii) மின்-கற்றல் முகப்பின் வடிவமைப்பு மற்றும் மேம்பாடு மற்றும் (iii) மேலாண்மை மற்றும் ஆதரவு.

முறையில் இணையவழி படிப்புகளை UGC அனுமதிக்கவில்லை என்று தணிக்கை கண்டறிந்துள்ளது. மேலும், இணைய மெய்நிகர் வகுப்புகளை நடத்துவதற்கான எந்த திட்டத்தையும் பல்கலைக்கழகம் தயாரிக்கவில்லை. வெற்றிகரமான ஒப்பந்ததாரர் பல்கலைக்கழகத்திற்காக உருவாக்கப்பட்ட மின்-கற்றல் முகப்பில் மெய்நிகர் வகுப்பறை வசதியை வழங்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. பல்கலைக்கழகம், அதன் ஒப்பந்தத்தில், இந்தப் பணியை உள்ளடக்கியிருந்தது தேவையற்றது மற்றும் இறுதியில் செயல்படுத்தப்படவும் இல்லை என்று தணிக்கை கண்டறிந்தது. வெற்றிகரமான ஒப்பந்ததாரர் இந்த பணிக்கான இரண்டாவது குறைந்த ஒப்பந்ததாரரால் விலைப்புள்ளியில் காட்டப்பட்ட ₹ 6 கோடிக்கு எதிராக ₹ 0.38 கோடிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்தனர். எனவே, ஒப்பந்தத்தில் தேவையற்ற பணி உள்ளிட்டமையால், SET இன்ஃபோடெக் லிமிடெட், மிகக் குறைந்த ஒப்பந்ததாரராக வழிவகுத்தது.

- **பரவலான விளம்பரம் இல்லாமை:** தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள், 2000 (TNTTR)ன் விதி 11 (2), ஒப்பந்தத்தின் மதிப்பு ₹ 5 கோடிக்கு மேல் இருந்தால், ஒப்பந்த அழைப்பு அறிவிப்பு (Notice Inviting Tenders -NIT) ஒரு ஆங்கில நாளிதழின் அகில இந்திய பதிப்புகளிலும், மாநிலத்திற்குள் ஒரு தமிழ் செய்தித்தாளின் அனைத்து பதிப்புகளிலும் ஒப்பந்த அழைக்கும் ஆணையத்தினால் (Tender Inviting Authority -TIA) வெளியிடப்பட வேண்டும் என்று விழைகிறது. துணைவேந்தர், திறந்த ஒப்பந்த முறைக்கு ஒப்புதல் அளிக்கையில், இந்துஸ்தான் டைம்ஸ் (Hindustan Times) மற்றும் தினமணி நாளிதழ்களில் NIT வெளியிட உத்தரவிட்டார். ஆயினும், தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகளில் இந்துஸ்தான் டைம்ஸில் NITயை வெளியிட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஒரு குறிப்பிட்ட தணிக்கை வினாவிற்கு, இந்துஸ்தான் டைம்ஸில் NITயை வழங்கியதற்கான எந்த ஆதாரத்தையும் DDE இயக்குநரால் சமர்ப்பிக்க இயலவில்லை. எனவே, ஒப்பந்ததாரர்களிடையே ஆரோக்கியமான போட்டியை உறுதி செய்வதற்காக, கூடுதல் இயக்குநர், DDE ஒப்பந்தத்திற்கான பரந்த விளம்பரத்தை உறுதி செய்யவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. விளம்பரம் ஒரு தமிழ் செய்தித்தாளில் மட்டுமே வெளியிடப்பட்டது என்பதை GoTN, பதிலில் ஏற்றுக்கொண்டது. (மார்ச் 2022) ஆயினும், ஒப்பந்த அழைப்பிற்கான விளம்பரத்தில் குறியிடப்பட்ட விதிகளை மீறியதற்க்கான பொறுப்பை GoTN நிர்ணயிக்கவில்லை.

- **EoIல் பங்கேற்ற ஆறு நிறுவனங்களை அமைக்காமை:** TNTTRன் விதி 12ன் படி, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள், கடந்தகால வழங்குநர்களை, சாத்தியமான வழங்குநர்கள் மற்றும் வேறு ஏதேனும் நன்கு அறியப்பட்ட நிறுவனம உட்பட அனைத்து சாத்தியமான ஒப்பந்ததாரர்களுக்கும் TIA, NITயை அனுப்பலாம்.இருப்பினும் EoI முன்மொழிவுகளை அனுப்பிய ஆறு நிறுவனங்களுக்கும் MKU, NITயை அனுப்பவில்லை. இதன் விளைவாக, அவர்கள் ஒப்பந்த

அழைப்பில் பங்கேற்கவில்லை. இதனால், ஒப்பந்தத்திற்கு பரவலாக விளம்பரம் செய்வதை பல்கலைக்கழகம் உறுதி செய்யவில்லை.

- **தொடர்புடைய (prospective) ஒப்பந்ததாரர்களைத் தவிர்த்தல்:** TNTTRன் விதி 14ன் படி, பிணைவைப்புத் தொகை (Earnest Money Deposit - EMD) பொதுவாக கொள்முதல் விலை மதிப்பில் ஒரு விழுக்காட்டிற்கு அதிகமாக இருத்தல் கூடாது என வழங்குகிறது. மேலும், வைப்புத் தொகை (Security Deposit - SD) கொள்முதல் விலை மதிப்பில் ஐந்து விழுக்காட்டிற்கு மேல் இருக்கக்கூடாது. இந்த திட்டத்திற்கு ஆரம்பத்தில் ₹5 கோடி முதல் ₹6 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டாலும், பல்கலைக்கழகம் ₹ 15 இலட்சம் EMD நிர்ணயித்தது. இது ஒப்பந்த மதிப்பில் சுமார் மூன்று விழுக்காடு ஆகும் மற்றும் SD கொள்முதல் விலை மதிப்பில் 10 விழுக்காடு என நிர்ணயிக்கப்பட்டது. ஒரு ஒப்பந்ததாரரர் EMDக்கு பணம் திரட்ட நேரம் கோரியது கண்டறியப்பட்டது. இது விதிகளுக்கு எதிரானது. எனவே, வழக்கத்துக்கு அதிகமான EMD மற்றும் SD ஆகியவற்றை நிர்ணயித்ததன் மூலம், பல்கலைக்கழகம் தொடர்புடைய ஒப்பந்ததாரர்களைத் தடுத்தது என்று தணிக்கை கண்டறிந்தது.

- **வழங்கப்படும் தரமான தீர்வைக் கருத அமைப்பு இல்லாதது:** GoI, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (Ministry of Electronics & Information Technology - MeITY) வழங்கிய வழிகாட்டுதல்களின்படி [30], IT திட்டங்களுக்கான தர மற்றும் செலவு அடிப்படையிலான ஒப்பந்த தேர்வுகளில், ஒப்பந்ததாரர் வழங்கும் தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளின் முன்மொழிவின் அடிப்படையில் ஒப்பந்தம் தீர்மானிக்கும் போது, தரத்திற்கு அதிகப்படியாக 80 விழுக்காடு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். ஆயினும், ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப முன்மொழிவில் தரத்திற்கு பல்கலைக்கழகம் எந்த முக்கியத்துவத்தையும் வழங்கவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது.

- **மின்-பாடத்தொகுப்பின் தரம் உறுதி செய்யப்படவில்லை:** பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பாடநெறி பாடத்தொகுப்பு, குரல்வழி, இயங்குபடம், விளக்கப்படங்கள் போன்றவற்றுடன் டிஜிட்டல் பாடத்தொகுப்பாக மாற்றப்பட வேண்டும். மாறாக, ஒப்பந்ததாரர் புத்தகங்களை ஒளிநகல் மட்டும் செய்து உள்ளேற்றம் (Host) செய்தார். அக்டோபர் 2016 நிலவரப்படி, ஒப்பந்ததாரர் 2,324 மின் புத்தகங்களை முகப்பில் பதிவேற்றியுள்ளார். ஒரு மின் புத்தகத்திற்கு ₹ 55,750 வீதம் 1,852 புத்தகங்களுக்கு முழுப் பணம் செலுத்தப்பட்டது. பல்வேறு துறைகளின் தலைவர்கள், தணிக்கை வினாவிற்கு, பதிவேற்றப்பட்ட மின் புத்தகங்களில் குரல்வழி, விளக்கப்படங்கள் அல்லது இயங்குபடங்கள் எதுவும் இல்லை என்று பதிலளித்தனர். புத்தகங்கள் ஒளிநகல் மட்டும் எடுக்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டன. இருப்பினும், MKUன் கூட்டமைப்பு, இரண்டு உறுப்பினர்களால்

30 செயல்படுத்தும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதல் குறிப்புகள்.

கொடுக்கப்பட்ட கருத்து வேறுபாடுகளை[31] (ஜனவரி 2015) மீறி, ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தை அங்கீகரித்து ஒப்புதல் அளித்தது. மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மின்-பாடத்தொகுப்பு குழுவின் கூட்டத்தின் விவரக்குறிப்பு (minutes of the meeting) மற்றும் அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மென்பொருள் உருவாக்குபவருக்கு பணம் செலுத்தப்பட்டது என்று DDEன் இயக்குநர் தணிக்கைக்கு பதிலளித்தார் (ஏப்ரல் 2021). மின்பாடத்தொகுப்பு குழுவின் விவரக்குறிப்பில் பதிவேற்றப்பட்ட மின்புத்தகங்களின் எண்ணிக்கையை மட்டுமே குறிப்பிட்டது. தரத்தினைப் பற்றி குழு மௌனமாக இருந்ததால், பதில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மார்ச் 2015க்குப் பிறகு, மின்-பாடத்தொகுப்பின் தரம் தொடர்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்காததை மேற்கோள் காட்டி, ஒப்பந்ததாரருக்கு மின் புத்தகங்கள் பதிவேற்றம் செய்வதற்கான பணம் செலுத்துவதை பல்கலைக்கழகம் நிறுத்தியது

இது முதல்முறை முயற்சியாக இருப்பதால், ஒப்பந்ததாரர் வழங்கிய சேவையின் தரத்தை பல்கலைக்கழகத்தால் கண்டறிய முடியவில்லை என்று GoTN பதிலளித்தது. மென்பொருள் உருவாக்குபவர் அளித்த விலைப்பட்டியலின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது என்றும் குரல்வழி, மெய்நிகர் வகுப்பறை, கைப்பேசி பதிப்பு மற்றும் கலந்துரையாடும் தொகுதிகள் போன்ற அம்சங்களை மென்பொருள் உருவாக்குபவர் உருவாக்கி வழங்கவில்லை என்பதையும் பதில் ஏற்றுக்கொண்டது. ஒப்பந்தம் கோரும் அதிகாரிகள் தாங்கள் கொள்முதல் செய்யும் பொருளின் தரத்தை அறிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதால் பதில் ஏற்கக்கூடியதாக இல்லை.

எனவே, எந்த ஏற்பு சோதனையும் இல்லாத நிலையில், தரத்தை உறுதி செய்யாமல் பணம் செலுத்தப்பட்டு, குரல்வழி, இயங்குப்படம் அல்லது விளக்கப்படம் இல்லாமல் 1,852 புத்தகங்களை ஒளி நகல் மட்டுமே செய்து பதிவேற்றியதற்காக, பல்கலைக்கழகம் ₹ 10.32 கோடியை செலுத்தியது.

- **மொபைல் செயலியை உள்ளடக்கம் (hosting) செய்யாதது:** மாணவர்கள் தங்கள் மொபைல் போன்களில் பாடத் தொகுப்புகளைப் பார்ப்பதற்கு, ஒப்பந்ததாரர் இ-போர்ட்டலின் மொபைல் பதிப்பை (Mobile app) உருவாக்க வேண்டும். ஒப்பந்ததாரர் மொபைல் செயலியை பதிவேற்றியதாக கூறப்படுகிறது. ஆனால், இந்த பதிப்பு அதன் உரிமை அளிப்புக் கடிதத்தை சமர்பிக்காததால் அதன் உள்ளடக்கம் Google Play Storeஆல் இடைநிறுத்தப்பட்டது (அக்டோபர் 2015).

- **செயல்திறன் உத்தரவாதத்தை நிறுத்தி வைக்காதது:** ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்படும் பணத்தில் 10 விழுக்காடு செயல்திறன் உத்தரவாதமாகத் தக்கவைக்கப்படும் என்று ஒப்பந்த ஆவணம் குறிப்பிடுகிறது. ஆனால் பல்கலைக்கழகம் அளிக்கப்பட்ட தொகையில் 10 விழுக்காட்டை செயல்திறன் உத்தரவாதத்திற்காக கழிக்கவில்லை. இது ஒப்பந்ததாரருக்கு தேவையற்ற ஆதரவை வழங்குவதோடு பல்கலைக்கழகத்தின் நலனையும் பாதுகாக்கத் தவறியது.

---

[31] ஒப்பந்தம் செய்யப்பட்ட பணிகளின் கூறுகள் முழுமையாக முடிக்கப்படவில்லை என்று ஒரு குழு உறுப்பினர் மறுத்தார், மற்றொரு உறுப்பினர் இவ்வளவு அதிகப்படியான செலவினம் தேவையற்றது என்று மறுத்தார்.

ஏப்ரல் 2015 வரை மொத்தம் ₹ 10.70 கோடியை ஒப்பந்ததாரருக்கு பல்கலைக்கழகம் செலுத்தியது. அதன்பிறகு சேவை குறைபாட்டைக் காரணம் காட்டி பணம் வழங்குதலை நிறுத்தியது. ஒப்பந்ததாரர் பணம் செலுத்துமாறு பலமுறை கோரிக்கை விடுத்து ₹ 5.17 கோடிக்கு சட்டப்பூர்வ நோட்டீஸ் அனுப்பினார் (டிசம்பர் 2020). அளிக்கப்பட்ட சேவையில் குறைபாடு மற்றும் ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்டதாகக் கோரப்படும் சேவைகளை வழங்காதது ஆகியவற்றைக் காரணம் காட்டி பணம் செலுத்த பல்கலைக்கழகம் மறுத்துவிட்டது. ஒப்பந்ததாரர் MSME *சமாதானிடம்*[32] புகார் அளித்தார். மேலும் இந்த விவகாரம் ஜூலை 2021 அன்று நிலவரப்படி நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில், பல்கலைக்கழகம் உள்அக (in-house) முயற்சிகளுடன் ஒரு முகப்பை உருவாக்கியது (மார்ச் 2020) மற்றும் SET இன்ஃபோடெக் உருவாக்கிய மின்-கற்றல் முகப்பை நிறுத்தியது. ஒப்பந்ததாரர் உருவாக்கிய மின்-பாடத்தொகுப்புகள் புதிய முகப்பில் பயன்படுத்தப்படவில்லை. முகப்பை பயன்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை குறித்த எந்தத் தரவையும் பல்கலைக்கழகம் பராமரிக்கவில்லை. ஆயினும், குரல்வழி,விளக்கப்படங்கள் மற்றும் ஊடாடும் இயங்குபடங்கள் இல்லாமல் ஒளி நகலாக மட்டுமே செய்யப்பட்ட பிரதிகளாக புத்தகங்கள் பதிவேற்றப்பட்டதாலும், மெய்நிகர் வகுப்பறை மற்றும் மொபைல் பதிப்பை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் இல்லாததாலும், இந்த திட்டம் முழுவதுமே அதன் நோக்கத்தில் தோல்வியுற்றது . அதற்கான செலவினமும் தேவையற்ற செலவாக உள்ளது.

இவ்வாறு, மின்-பாடத் தொகுப்பு மற்றும் மின்- கற்றல் முகப்பை உருவாக்குவதற்க்கான ஒப்பந்தத்தை வழங்குவதில் மற்றும் நிர்வகிப்பதில் ஏற்பட்ட முறைகேடுகளால் ₹ 10.70 கோடி தேவையற்ற செலவும் ₹ 5.17 கோடி எதிர்ப்பாரா தொகை செலுத்தும் பொறுப்பும் ஏற்பட்டது.

தணிக்கை கணக்காயரின் அவதானிப்புகள் பரிசீலிக்கப்பட்டு எதிர்கால பரிவர்த்தனைகளில் கவனமாக பின்பற்றப்படும் என்று பதிவாளர், MKU கூறியதாக GoTN பதிலளித்தது. மின்-பாடத்தொகுதி மற்றும் மின்-கற்றல் முகப்பை உருவாக்குவதில் உள்ள எதிர்பாரா தொகை செலுத்தும் பொறுப்பு (contingent liability) ₹ 5.17 கோடி சட்ட வழக்குகளின் கீழ் இருப்பதால், நீதிமன்றத் தீர்ப்பின்படி தீர்மானிக்கப்படும் என்றும் பதிலளித்தது.

தணிக்கை பரிந்துரை:

- பல்கலைகழக அதிகாரிகளின் தவறுகள் குறித்து அரசு விசாரணை நடத்தி அவர்கள் மீது அதற்கான பொறுப்பு நிர்ணயிக்கப்படலாம்.
- TNTTA மற்றும் TNTTR, விதிகளுக்கு கூடுதலாக, தகவல் தொழில்நுட்ப கொள்முதலின் தொழில்நுட்ப தன்மையைக் கருத்தில் கொண்டு, தரமற்ற தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை கொள்முதல் செய்தல் மற்றும் வீண் செலவினங்களைத் தடுக்க, தகவல் தொழில்நுட்பக் கொள்முதல்களுக்கான பிரத்யேக வழிகாட்டுதல்களை உருவாக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

[32] குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன மேம்பாட்டுச் சட்டம், 2006ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு வசதி, இது மாநில அரசுகளால் அமைக்கப்படும் எளிதாக்கல் குழுக்கள் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிலுவையில் உள்ள பணக் கோரிக்கைகளை வழங்குவதற்கு வசதியாக உள்ளது.

நீர்வளத் துறை

3.3.2 கூடுதல் நிதிச்சுமை

மத்திய அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல், நீர்ப்பாசனத் குளங்களை செப்பனிடுதல், புதுபித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியவற்றுக்கான திட்டத்தை விரைவாக செயல்படுத்தியதால், மத்திய அரசின் ₹ 29.95 கோடி உதவித் தொகை கிடைக்கப்பெறவில்லை. இது மாநில அரசின் நிதி நிலைக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தியது.

தமிழ்நாடு அரசு (GoTN) தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் (திட்டம்) 49 நீர்ப்பாசன குளங்களை செப்பனிடுதல், புதுபித்தல் மற்றும் புனரமைத்தல் (Repair, Renovation and Restoration - RRR) ஆகியவற்றிற்கு) நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது (ஆகஸ்ட் 2017). பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி திட்டம் - அனைத்து வயல்களுக்கும் நீர் என்ற (‘*Pradhan Mantri Krishi Sinchayee Yojana-Har Keth Ko Pani*’ - PMKSY-HKKP) திட்டத்தின் மூன்றாம் கட்டமாக, இந்திய அரசு (GoI) மற்றும் GoTN மூலம் நிதி அளிப்பு பங்கிடப்பட்ட சிறப்புப் பிரிவான- வறட்சி ஏற்படும் பகுதியின் கீழ் இந்த திட்டம் ₹ 23.42 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. திட்டச் செலவில் 60 விழுக்காட்டை (₹ 14.05 கோடி) GoI ஏற்க வேண்டும் மற்றும் GoTN செலவில் 40 விழுக்காட்டை (₹ 9.37 கோடி) ஏற்க வேண்டும்.

சென்னை நீர்வளத் துறையின் (Water Resource Department - WRD) தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் (Engineer-in-Chief - EIC) நடந்த திட்டத்தின் மீதான தணிக்கை (பிப்ரவரி 2021) பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

10 பிப்ரவரி 2015 அன்று GoI நிதியுதவிக்காக மாநில தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவால் (State Technical Advisory Committee - STAC) திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், GoTN திட்டத்திற்கு 10 ஆகஸ்ட் 2017 அன்று நிர்வாக ஒப்புதல் அளித்து, அதே நேரத்தில் GoIன் பங்கைப் பெற அதனை அணுகியது. GoI அதன் முதல் தவணையான ₹ 7.03 கோடியை தாமதமாக 5 நவம்பர் 2018 அன்று வழங்கியது. குறிப்பிட்ட நடைமுறையின்படி ஆவணங்களை EIC பூர்த்தி செய்யத் தவறியதன் காரணமாக, GoI முதல் தவணையை வெளியிட 14 மாதங்கள் இயல்பு மீறிய தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், EIC, GoI பங்குக்காக காத்திருக்காமல், திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியது. இதன் விளைவாக, இரண்டாவது தவணையை வெளியிடுவதற்கு முன் செய்யக்கூடிய அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட செலவான ₹ 11.72 கோடிக்கு (திட்டச் செலவில் 50 விழுக்காடு) எதிராக, EIC, 31 மார்ச் 2019 வரை ₹ 19.52 கோடி செலவினம் மேற்கொண்டது. செலவை மீறியதன் விளைவாக, உண்மையான செலவினத்தின்[33] அடிப்படையில் தகுதியான ₹ 6.41 கோடிக்கு எதிராக மத்திய உதவித்தொகையை ₹ 1.95 கோடியாக GoI கட்டுப்படுத்தியது.

EIC, மத்திய உதவியின் இரண்டாம் தவணையை வழங்க கோரும் போது, பருவமழை தொடங்குவதற்கு முன், மீதமுள்ள மத்திய உதவியை எதிர்பார்த்து பணிகளை முடிக்க வேண்டும் என்று GoTNக்கு தெரிவித்தது. ஆயினும், GoI உதவித்தொகைக்காக நிலுவையிலுள்ள பணியை நிறுத்துமாறு வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான உதவியின் (Chief Engineer, Design Research &

[33] செப்டம்பர் 2020 நிலவரப்படி திட்டம் முடிக்கப்பட்ட மொத்தச் செலவு - ₹ 22.38 கோடி.

Construction Support -CE, DRCS) தலைமைப் பொறியாளரிடமிருந்து (டிசம்பர் 2018) கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், மழைக்காலம் முடிந்த பின்னரும் பணிகள் தொடர்ந்தது கண்டறியப்பட்டது. இரண்டாம் தவணையை வெளியிடுவதற்கு முன் திட்டச் செலவில் 50 விழுக்காட்டிற்கு மேல் செலவிடக்கூடாது என்ற நிபந்தனையை EIC அறிந்திருந்தது. வழிகாட்டுதல்களின்படி பணியை திட்டமிடுவதில் EIC தவறியதால், உரிய மத்திய நிதி உதவியான ₹ 13.43 கோடிக்கு[34] எதிராக, ₹ 8.98 கோடி[35], GoIஆல் வழங்கப்பட்டது.

மத்திய நீர் ஆணையத்தின் (Central Water Commission - CWC), கள அலுவலகத்தின் கண்காணிப்பு, சுயாதீன நிறுவனங்களால் மதிப்பீடு (evaluation) செய்யப்படுதல் மத்திய அரசின் முழு பங்கினை பெறுவதற்கு முன்பாக திட்டத்தின் செலவில் 50 விழுக்காட்டிற்கு மேல் செலவு செய்யாமை போன்றவை மத்திய உதவியைப் பெறுவதற்காக பின்பற்றப்பட வேண்டிய குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளாக திட்ட வழிகாட்டுதல்களும், தெளிவுறுத்தல்களும்(clarifications) வெளிப்படுத்துகின்றன. மேலும், மத்திய உதவியைப் பெறுவதற்கு முன், திட்டங்களுக்குச் செய்யப்பட்ட எந்தச் செலவையும் மீழப்பெறுவதை அரசு அனுமதிக்கவில்லை. நிதி வெளியீட்டிற்கான GoI வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததால், 49 குளங்களை RRR பணிகள் தொடர்பாக GoTNஆல் மத்திய உதவிகளைப் பெற முடியவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது.

இதே திட்டத்தின் கீழ், 2015-16ஆம் ஆண்டில் 104 நீர்ப்பாசன குளங்களின் RRR பணியை GoTN மேற்கொண்டது. செய்யப்பட்ட செலவினங்கள், GoI லிருந்து தகுதியான உதவி மற்றும் பெறப்பட்ட உண்மையான மத்திய உதவி ஆகியவை **அட்டவணை 3.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3: 2015-16 ஆண்டின் போது RRR பணிகள்

(₹ கோடியில்)

ஆண்டு	RRR பணியின் மொத்த செலவினம்			தகுதியான உதவித்தொகை			பெறப்பட்ட உதவித்-தொகை	குறைவு
	கட்டம் 1	கட்டம் 2	மொத்தம்	கட்டம் 1	கட்டம் 2	மொத்தம்		
2015-16	27.02	27.30	54.32	17.10	17.63	34.73	9.23	25.50

(ஆதாரம்: EICன் பதிவுகளிலிருந்து பெறப்பட்ட தரவு)

2015-16ஆம் ஆண்டில் கூட, திட்டத்தை முடிப்பதற்கு முன் ஒரு சுயாதீன நிறுவனத்தால் உடநிகழ் மதிப்பீட்டை (Concurrent) நடத்தாததால், GoTN தகுதியான மத்திய உதவி தொகையான ₹ 25.50 கோடியைப் பெற முடியவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது.

பாசனத் குளங்களில் பருவ மழை நீரை சேமித்து வைக்கும்பொருட்டு பருவமழைக்கு முன்பாகவே பணிகளை முடிப்பதற்காக, GoIன் நிதியை எதிர்பார்த்து இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது என்று GoTN பதிலளித்தது (டிசம்பர் 2021). கட்டம் I மற்றும் கட்டம் II திட்டங்களுக்கான உடநிகழ் மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்காதது குறித்து சுட்டிக்காட்டும் பொழுது, 2020 நவம்பரில் CWCக்கு இறுதி அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டதாக GoTN தெரிவித்துள்ளது.

[34] உண்மை செலவினமான ₹ 22.38 கோடியில் அறுபது விழுக்காடு

[35] முதல் தவணை - ₹ 7.03 கோடி மற்றும் இரண்டாவது தவணை - ₹ 1.95 கோடி.

GoI உதவி நிலுவையில் உள்ள நிலையில், வேலையை நிறுத்துவதற்கான முன்மொழிவு EIC ஆல் பெறப்படும் முன்னதாகவே (24 டிசம்பர் 2018) பருவமழை முடிந்துவிட்டதால், பதில் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. GoIன் உதவி நிலுவையில் இருந்ததால், பருவமழையின் போது மழை நீரை சேமித்து வைப்பதற்கு இடையூறு விளையாமல் இருக்க, தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படாமல் EIC தடுத்திருக்கலாம். மேலும், 2015-16ல் எடுக்கப்பட்ட திட்டங்களின் ஒரே நேரத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை, நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக தாமதம் செய்யப்பட்டாலும் எந்த நோக்கத்தையும் செயல்படுதுவதக இல்லை.

எனவே, EIC ஆனது GoIன் வழிகாட்டுதல்களின்படி பணிகளை திட்டமிடத் தவறியதாலும், ஒரு சுயாதீன நிறுவனத்தால் ஒரே நேரத்தில் பணி மதிப்பீடு செய்யாததாலும், 151 நீர்ப்பாசன குளங்களில் RRR பணிகளைப் பொறுத்தவரையிலான தகுதியான மத்திய உதவியான ₹ 29.95 கோடி[36] கிடைக்காமல் போனது.

தகுதியான உதவியை முழுமையாகப் பெறுவதற்கு,இந்திய அரசின் வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றுவதை அரசாங்கம் உறுதிசெய்யலாம் என்று தணிக்கை பரிந்துரைக்கிறது.

3.4 தவிர்க்கக்கூடிய / பயனற்ற செலவு

கால்நடை வளர்ப்பு, பால், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை

3.4.1 ஒப்பந்தக்காரருக்கு தகுதியற்ற சலுகை

நடைபெற்று வந்த கட்டுமானப் பணிகளை இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக காப்பீடு (Insurance) செய்ய ஒப்பந்தக்காரர் தவறியது, மற்றும் ஒப்பந்த நிபந்தனையை தள்ளுபடி செய்ததன் விளைவாக, ஓக்கி (Ockhi) புயலினால் ஏற்பட்ட சேதங்களின் மறுசீரமைப்பில் ₹ 3.15 கோடி தவிர்க்கக்கூடிய செலவினம்.

மீன்வள ஆணையர் (Commissioner of Fisheries - CoF), மற்றவற்றிற்க்கிடையில், மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள்[37] (fish landing centres - FLC) நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பாவார். தலைமை பொறியாளர் (Chief Engineer - CE) தலைமையிலான ஒரு பொறியியல் பிரிவு கட்டுமான மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மீன்வளத் துறையின் கட்டடப் பணி ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் (General Conditions of Contract - GCC) பிரிவு 47.1ன் படி, ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்தக்காரரால் செயல்படுத்தப்பட்ட பணிகள் நிர்வாக பொறியியலாளரிடம் (Executive Engineer - EE) ஒப்படைக்கப்படும் வரை, அவை ஒப்பந்தக்காரரின் பொறுப்பில் பராமரிக்கப்படும். அதன்படி, தீ, வெள்ளம், எரிமலை வெடிப்பு, பூகம்பம், பிற இயற்க்கை சீர்கேடுகள் மற்றும் பிற இயற்கை

36 ₹ 25.50 கோடியுடன் ₹ 4.45 கோடி (₹ 13.43 கோடி கழித்தல் ₹ 8.98 கோடி) சேர்த்து.

37 FLCக்கள் பாரம்பரிய மற்றும் சிறிய அளவிலான இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக் கப்பல்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை தரையிறக்கம், பெருத்தல்கள் மற்றும் பழுதுபார்க்கும் வசதிகளைக் கொண்டுள்ளன.

பேரழிவுகள், கடவுளின் செயல்களிலிருந்து எழும் இடர்கள், ஆகியவற்றினால் எழும் எந்தவொரு இழப்பு அல்லது சேதங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்காது மற்றும்இதுபோன்ற காலகட்டத்தில், இவற்றிற்க்கு எதிராக ஒப்பந்தக்காரர் தனது சொந்த காப்பீட்டை ஏற்பாடு செய்ய வேண்டும்

தணிக்கை பின்வருவனவற்றை குறிப்பிடுகிறது (மார்ச் 2021):

ஜனவரி 2017ல், கன்யாகுமரி மாவட்டத்தில் சின்னத்துறை மற்றும் எராவிபுத்தென்துறை ஆகிய கிராமங்களுக்கு அருகிலுள்ள ஒரு மீன் இறங்கும் தளத்தை (FLC) நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட ₹ 10 கோடிக்கு GoTN நிர்வாக அனுமதியை வழங்கியது. திட்டக் கூறுகளில் 60 மீட்டர் நீளம் கொண்ட நான்கு குறுகிய நேர்கல்சுவர்கள்[38] (groynes) மற்றும் மீன் ஏலத்திற்கான ஏல மண்டபம் கட்டுமானங்கள் அடங்கும். ஒரு ஒப்பந்தக்காரருக்கு[39] இந்த பணி வழங்கப்பட்டது மற்றும் ஏப்ரல் 2017ல் அவர் பணியைத் தொடங்கினார் **(இணைப்பு 3.9)**.

இந்த வேலை சுமார் 90 விழுக்காடு முடிவுபெற்ற நிலையில் இருந்தபோது, கடுமையான சூறாவளி புயல் ‘ஒக்கி’ (புயல்), 2017 நவம்பர் 30 ஆம் தேதி கன்யாகுமரி மாவட்டத்தைக் கடந்து சென்றது, இதனால் கட்டுமானத்தில் இருந்த நான்கு நேர்கல்சுவர்களுக்கு[40] கடுமையான சேதம் ஏற்பட்டது.

சூறாவளி சேதங்களுக்குப் பிறகு, ஒப்பந்தக்காரர் பணியை நிறுத்தி (டிசம்பர் 2017) சேதமடைந்த நேர்கல்சுவர்களின் மறுசீரமைப்பிற்கு பின்னரே பணியைத் தொடர முடியும் என்று EEக்கு அறிவித்தார். இதற்கிடையில், அரசாங்கத்தின் முதன்மை செயலாளர் மற்றும் பிற அதிகாரிகள் இந்த தளத்தை ஆய்வு செய்து, அசல் திட்டத்தின் படி பணிகளை முடிக்க உடனடியாக மறுசீரமைப்பு மதிப்பீடுகளைத் தயாரிக்க EEக்கு அறிவுறுத்தினர். அறிவுறுத்தல்களின் அடிப்படையில், சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களை மறுசீரமைத்த பிறகு வேலையை முடிக்க EE ₹ 4.20 கோடியில் ஒரு புதிய மதிப்பீட்டைத் தயாரித்தார் இதற்கு GOTN ஆல் நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது (ஏப்ரல் 2018). புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன (செப்டம்பர் 2018). ஒரு ஒப்பந்தக்காரர்[41] மறுசீரமைப்பு பணிகளை மொத்தம் ₹ 4.20 கோடி **(இணைப்பு 3.9)** செலவில் மேற்கொண்டார்.

தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

GCCன் 47.1 வது பிரிவை மீறும் வகையில் ஒப்பந்தக்காரர் கட்டுமானப் பணிகளுக்கு காப்பீடு எடுக்கவில்லை. புயல் நிகழ்வுக்கு முன்னர் எந்த நேரத்திலும் காப்பீட்டுக்கான ஆதாரத்தை EE வலியுறுத்தவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. சூறாவளியின் பின்னர் ஒப்பந்தக்காரர், 23 நவம்பர் 2017 தேதியிட்ட, யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம், திருநெல்வேலின் மண்டல மேலாளரால் (Divisional Manager of United India Insurance Company - DM, UIIC) வழங்கப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தை சமர்ப்பித்தார். அக்கடிதத்தில், இப்படிப்பட்ட பணிகளுக்கு, UIIC காப்பீட்டை வழங்காது என்று கூறப்பட்டிருந்தது. UIIC நிறுவனத்தினடமிருந்து பெறப்பட்டதாக கூறப்படும்

[38] அரிப்பு மற்றும் சறுக்கலை சரிபார்க்க, கடலோரத்திற்கு செங்குத்தாக கடலுக்குள் கட்டப்பட்ட தாழ்வான சுவர் அல்லது உறுதியான தடுப்பு.

[39] திரு. எம்.மாதவன்.

[40] நான்கு நேர்கல்சுவர்களின் மொத்த நீளமான 240 மீட்டரில் 131 மீட்டர் நீளம் சூறாவளியால் சேதமடைந்ததாக மதிப்பிடப்பட்டது.

[41] திரு. எம். சேதுராஜ்.

கடிதத்தின் உண்மை தன்மையைக் கண்டறியாமல், அரசாங்க செலவில் மறுசீரமைப்பு பணிகளை எடுக்க EE முன்மொழிந்தார் (டிசம்பர் 2017). ஏற்பட்ட சேதத்தை சரிசெய்வதற்கான பொறுப்பிலிருந்து ஒப்பந்தக்காரரை விடுவிப்பதற்காக, EE அளித்த ஏற்பு முறையற்றது என்று தணிக்கை கண்டறிந்தது. ஒப்பந்தக்காரர் சமர்பித்த கடிதத்தை ஏற்றுக்கொள்வதற்கான EEன் முடிவு கவனமற்றது ஏனெனில் காப்பீட்டுத் தொகையை ஏற்பாடு செய்வது ஒப்பந்தக்காரரின் பொறுப்பாகும்.

CE, EE சமர்ப்பித்த (ஜனவரி 2018) சேதங்களை மறுசீரமைப்பிற்க்கான புதிய மதிப்பீட்டில், GCCன் 47.1 வது பிரிவை சுட்டிக்காட்டி (ஏப்ரல் 2018) எந்தவொரு இழப்பு அல்லது சேதங்களுக்கும் அரசாங்கம் பொறுப்பேற்காது என்ற கருத்தை எடுத்துரைத்தார். ஆயினும், GCCன் 47.1வது பிரிவைப் செயல்படுத்துவதற்கான CEன் கருத்திற்க்கு EE பதிலளிக்கவில்லை. ஆனால், சேதங்களை ஆய்வு செய்த அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின்படி மறுசீரமைப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது என்று பதிலளித்தார் (மே 2018). மேலும், GCCன் காப்பீட்டு பிரிவை மறுஆய்வு செய்ய வேண்டும் என்றும் மேலும் சேதங்களைத் தவிர்க்க மறுசீரமைப்பு பணிகளை அனுமதிக்கவும் அவர் கோரினார்.

ஆகஸ்ட் 2018ல், CE இப்பணியின் விவரங்களை COF தலைமையிலான ஒப்பந்த ஏற்பு குழு (Tender Award Committee -TAC) முன் வைத்தார். TAC, ஒப்பந்தக்காரருக்கு நிலுவையில் உள்ள எந்தவொரு கட்டணத்தையும் செலுத்தாமல் நிறுத்தி வைத்து ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிக்க தீர்மானிப்பதோடு, இது தொடர்பாக இறுதி முடிவை எடுப்பதற்காக ஒரு விரிவான அறிக்கை GOTNக்கு சமர்ப்பிக்கப்படவும் உத்தரவிட்டது. மேலும், மறுசீரமைப்பு பணிகளுக்கு புதிய ஒப்பந்தங்களை அழைக்குமாறு TAC, CEக்கு தெரிவித்தது. GCCன் 47.1 வது பிரிவை அமல்படுத்துவதை வலியுறுத்த TAC தவறிவிட்டது. மேலும் GoTNக்கு ஒரு தெளிவற்ற பரிந்துரையை வழங்கியது.

இதற்கிடையில், சூறாவளிக்கு ஒரு நாள் முன்பு எடுக்கப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில், டிசம்பர் 2017 மற்றும் மார்ச் 2018ல் ஒப்பந்தக்காரருக்கு EE ₹ 1.70 கோடி வழங்கினார். சேதமடைந்த கட்டமைப்பை தனது சொந்த செலவில் அல்லது காப்பீட்டின் மூலம் மறுசீரமைப்பதற்கான நிபந்தனையை ஒப்பந்தம் கொண்டிருந்தபோதிலும், ₹ 1.70 கோடியை புயல் சேதத்திற்குப் பிறகு மற்றும் சேதத்தை மீட்டெடுப்பதற்கு முன்பே ஒப்பந்தக்காரருக்கு வழங்கியது கவனமற்ற செய்கை என்று தணிக்கை கண்டறிந்தது. இதனால், ஒப்பந்தக்காரர்குரிய பட்டிலை நிறுத்தி வைப்பதற்கான TACன் முடிவு, ஏற்கனவே பணம் வழங்கியதால் செயல்படுத்த முடியவில்லை. சம்பந்தப்பட்ட EEயிடமிருந்து உரிய விளக்கம் கோரப்பட்டு பெறப்படும் பதில், தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிக்க COFன் பரிந்துரையின் பேரில் GoTN முடிவு செய்யவில்லை (டிசம்பர் 2021). மேலும் பாதுகாப்பு வைப்புத்தொகையை (₹ 19.68 இலட்சம்) யையும், செயல்திறன் உத்தரவாதமாக (performance guarantee) நிறுத்தப்பட்ட தொகை (₹ 63.57 இலட்சம்) யையும் பறிமுதல் செய்ய எவ்வித உத்தரவுகளையும் வழ்ங்கவில்லை.

CAGன் தணிக்கை அறிக்கை (Civil), 2003-04ல், இதேபோன்ற திட்டமான நேர்சுவர்கள் கட்டுமானத்தில் இயற்கை பேரழிவுகள் காரணமாக ஏற்படும் இழப்பை ஈடுகட்ட ஒப்பந்தத்தில் கட்டாய விதிமுறைகளை சேர்க்காததால் ஏற்பட்ட கூடுதல்

செலவினங்களைப் பற்றி ஒரு தணிக்கை கண்டுபிடிப்பு தரப்பட்டது (**பத்தி 4.2.1**). GoTN இப்போது பொருத்தமான நிபந்தனை சேர்ப்பதை உறுதிசெய்துள்ளபோதிலும், அதை அமல்படுத்துவதை உறுதிப்படுத்தவில்லை.

இவ்வாறாக, UIICலிருந்து பெறப்பட்ட ஒரு போலி கடிதத்தின் அடிப்படையில், ஒப்பந்த நிபந்தனைகளைச் செயல்படுத்த EE தவறியதாலும், புயல் சேதத்திற்குப் பிறகும் ஒப்பந்தக்காரருக்கு ₹ 1.70 கோடி வழங்கியதாலும் அவரது கவனமற்ற முடிவினாலும், மறுசீரமைப்பு பணிகளுக்கு ₹ 3.15 கோடி[42] தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்ப்பட்டது.

ஒப்பந்தக்காரர் தவறான விவரங்கள் (அல்லது) போலியான/தவறான தகவல்கள் (அல்லது) முழுமையற்ற விவரங்கள் வழங்கியுள்ளார் என்று கண்டறியப்பட்டால், GCCன் 47.1 வது பிரிவின் கீழ் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).மேலும், சம்பந்தப்பட்ட EE யிடமிருந்து தேவையான விளக்கம் கோரப்பட்டு, பெறப்படும் பதில் சமர்ப்பிக்கப்படும் என்றும் GoTN பதிலளித்தது. ஆயினும், பெறப்பட்ட பதில், EEன் தரப்பில் உள்ள குறைபாடுகளை பற்றி விளக்கவில்லை என்பதைக் கண்டறிந்தது. GOTN எடுத்த நடவடிக்கையின் விளைவுகள் காத்திருக்குதலில் இருந்தது (ஏப்ரல் 2022).

தணிக்கை பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறது:

- ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் 47.1வது பிரிவின் கீழ் ஒப்பந்தக்காரர் பொறுப்பேற்க வேண்டும். ஒப்பந்தத்தின் அனைத்து நடைமுறைப்படுத்தக்கூடிய பிரிவுகளுக்கும் இணங்குவதை உறுதி செய்வதற்கான ஒரு முறையை GoTN உருவாக்க வேண்டும்.
- ஒப்பந்தக்காரரின் செலவில் சேதங்களின் மறுசீரமைத்தலை உறுதி செய்யாமல் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தவேண்டிய தொகையை வழங்கிய EEன் கவனமற்ற முடிவுக்கான பொறுப்பு அவர் மீது நிர்ணயிக்கப்படலாம்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

3.4.2 அதிக அளவு நெல் விதைகளை வழங்குதலில் தவிர்க்கக்கூடிய செலவினம்

வேலூர் மாவட்டத்தில் உழவர்களுக்கு நெல் விதைகளை அவர்கள் தேவைக்கேற்ப வழங்காததால், 590 மெட்ரிக் டன் நெல் விதைகள் அதிகளவில் வழங்கப்பட்டுள்ளது, இது தவிர்க்ககூடிய ₹ 1.33 கோடி கூடுதல் செலவிற்கு வழிவகுத்தது.

தமிழக அரசு ‘திருத்திய நெல் சாகுபடி (System for Rice Intensification-SRI) முறையைப் பின்பற்ற ஊக்குவிக்கிறது. இது 14 நாட்கள் ஆன இளம் நாற்றுகளை அதிக இடைவெளியுடன் நடவு செய்தல் மற்றும் நிலத்தில் ஈரப்பதம்/ஈரப்பதம் இல்லாமை மாறி மாறி வருதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். வழக்கமான நெல் சாகுபடி முறைப்படி ஒரு ஹெக்டேருக்கு 50 கிலோ (kg) நெல் விதைகள்

[42] ஏற்பட்ட மொத்த செலவினம் (₹ 8.79 கோடி மற்றும் ₹ 4.2 கோடி) பணியின் ஒப்பந்த மதிப்பைக் கழித்தல் (₹ 9.84 கோடி).

தேவைப்படுவதற்கு மாறாக, SRIஇல் ஒரு ஹெக்டேர் பயிரிட ஏழு முதல் எட்டு கிலோ நெல் விதைகள் மட்டுமே தேவைப்படும். SRI சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் (NADP) நெல் இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ₹ 5,000 உதவித் தொகை வழங்க GoTN அனுமதிக்கிறது. மேலும், விதை விலையில் 50 விழுக்காடு அல்லது ஒரு கிலோவிற்கு ₹ 20[43] என இவ்விரண்டில் எது குறைவோ அது மானியமாக அளிக்கப்பட்டு தரமான விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியாளர்களுக்கு, கிலோவுக்கு ₹ 8 மானியம் வழங்கப்படுகின்றது.

வேலூர் வேளாண்மை இணை இயக்குநர் (JDA) அலுவலகத்தில் பதிவேடுகளின் ஆய்வில் (ஜூன் 2021), 2016-21 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், 9,023 விவசாயிகள் SRI முறையைப் பின்பற்றி 14,040 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்வதாக வட்டார அளவிலான வேளாண்மை உதவி இயக்குநர்கள் (ADAs) பட்டியலிட்டனர். பட்டியலிடப்பட்ட விவசாயிகளுக்கு, சம்மந்தப்பட்ட வேளாண் அலுவலர்களால், SRI முறை சாகுபடிக்கான உரிய சரிபார்ப்பு மற்றும் சான்றளிக்கப்பட்ட பிறகு, ஹெக்டேருக்கு ₹ 5,000 மானியம் வழங்கப்பட்டது. இருப்பினும், இதை அனைத்து விவசாயிகளுக்கும் ஒரு ஹெக்டேருக்கு எட்டு கிலோ என்ற உண்மையான தேவைக்கு மாறாக ADAக்கள் ஹெக்டேருக்கு 50 கிலோ நெல் விதைகளை வழங்கியுள்ளனர். இந்த முரண்பாட்டிற்கான காரணங்களை கண்டறியும் நோக்கில், ஒரு ஹெக்டேருக்கு 50 கிலோ நெல் விதைகளையும் கூடவே SRI சாகுபடிக்காக NADPன் கீழ் ₹ 5,000 மானியத் தொகையையும் பெற்ற 71 விவசாயிகளின் விண்ணப்பங்களை தணிக்கை மாதிரியாக தெரிவுசெய்து பகுப்பாய்வு செய்தது. மேற்கூறிய அனைத்து விவசாயிகளும் சாகுபடிக்கு SRI முறையைப் பின்பற்றினர் என்பதும், சம்பந்தப்பட்ட வேளாண்மை அலுவலரால் சாகுபடி முறை சான்றளிக்கப்பட்டது என்பதும் கண்டறியப்பட்டது. விதை விநியோகத்திற்கான செயல்முறையனது SRI சாகுபடி முறையையும் வழக்கமான சாகுபடி முறையையும் பிரித்து காட்டாமையால் விதை விநியோகத்தின் அளவு சாகுபடி முறையுடன் இணைக்கப்படவில்லை.

இதனால், ADAக்கள் 9,023 SRI விவசாயிகளுக்கு உண்மையான தேவைக்கு அதிகமாக 5,89,680 கிலோ நெல் விதைகளை வழங்கியுள்ளனர். இதன் விளைவாக, **அட்டவணை 3.4ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, வழங்கப்பட்ட நெல் விதைக்கு அளித்த மானியத்தில் ₹ 1.33 கோடி தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது என தணிக்கையில் கண்டறியப்பட்டது.

43 2017-18 வரை விதை விலையில் 50 விழுக்காடு அல்லது கிலோவிற்கு ₹ 10, இவற்றில் எது குறைவோ அதுவும், 2018-21ல் விதை விலையில் 50 விழுக்காடு அல்லது கிலோவிற்கு ₹ 20, இவற்றில் எது குறைவோ அதுவும் மானியமாக வழங்கப்பட்டது.

அட்டவணை 3.4: SRI விவசாயிகளுக்கு அதிக அளவு நெல் வழங்குதல்

ஆண்டு	விவசா-யிகளின் எண்-ணிக்கை	வேலூர் மாவட்டத்தில் SRI ன் கீழ் உள்ள நிலப்-பரப்பளவு (ஹெக்-டேரில்)	ஹெக்-டேருக்கு 50 கிலோ என வழங்கப்-பட்ட விதைகளின் அளவு (கிலோ கிராமில்)	ஹெக்-டேருக்கு 8 கிலோ என வழங்கப்பட வேண்டிய விதைகளின் அளவு (கிலோ கிராமில்)	தேவைக்கு அதிகமான விதை விநியோகம் (கிலோ கிராமில்)	நெல் விதைக்-கான மானிய விகிதம் ₹	தேவைக்கு அதிகமான விதைகள் விநியோகத்திற்கு செய்த செலவினம்
(A)	(B)	(C)	(D)	(E) = (C x ₹ 8)	(F) = (D-E)	(G)*	(H) = (F x G)
2016-17	3,500	3,927	1,96,350	31,416	1,64,934	18	29,68,812
2017-18	1,614	3,604	1,80,200	28,832	1,51,368	18	27,24,624
2018-19	1,801	2,787	1,39,350	22,296	1,17,054	28	32,77,512
2019-20	1,820	3,150	1,57,500	25,200	1,32,300	28	37,04,400
2020-21	288	572	28,600	4,576	24,024	28	6,72,672
மொத்தம்	**9,023**	**14,040**	**7,02,000**	**1,12,320**	**5,89,680**	**-**	**1,33,48,020**

* விதை உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் மானியம் ஒரு கிலோவிற்கு ₹ 8 மற்றும் விவசாயிகளுக்கு விதை விநியோக மானியம் ஒரு கிலோவிற்கு ₹ 10 (2016-18) மற்றும் ₹ 20 (2018-21)

(ஆதாரம்: JDA பதிவேடுகள்)

அணைக்கட்டு மற்றும் கே.வி குப்பம் ஊராட்சி ஒன்றியங்களின் வேளாண்மை உதவி இயக்குநர்கள், அதிகப்படியான விதைகளை வழங்கியுள்ளதை ஒப்புக்கொண்டனர். ஆயினும், நெல் விதைகளை வழங்கும் வேளாண் கிடங்கு விதை வழங்குதலுக்கு அதற்கான விண்ணப்பத்தையே சார்ந்திருப்பதாகக் கூறினர். நெல் விதைகள் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் செயல்முறையும் திருத்த சாகுபடி உதவிக்கான விண்ணப்பங்களின் செயல்முறையும் ஒன்றுக்கொன்று இணைக்கப்படாததை தணிக்கை கண்டறிந்தது. விதை வழங்குதலுக்கான விண்ணப்பத்தில், விவசாயிகள் சாகுபடி செய்ய உத்தேசித்துள்ள பரப்பளவை குறிப்பிடுகின்றனர், ஆனால் விண்ணப்பத்தில் சாகுபடி முறையை குறிப்பிட பத்தி எதுவும் இல்லை. வேளாண்மைக் கிடங்குகள் சாகுபடி முறை பற்றி விண்ணப்பங்களிலிருந்து அறிய இயலாததால், சாகுபடி முறையைப் பொருட்படுத்தாமல் அனைத்து விவசாயிகளுக்கும் ஹெக்டேருக்கு 50 கிலோ விதைகளை வழங்க வழிவகுத்தது.

விதை வாங்கும் சமயத்தில், விவசாயிகளுக்குத் சாகுபடி முறை தேர்வு செய்யும் உரிமை உண்டு என்றும் அவர்கள் வயல் நிலை மற்றும் சூழ்நிலையின் அடிப்படையில் பாரம்பரிய நடவு முறை அல்லது SRI நடவு முறையைத் தேர்வு செய்யலாம் என்றும் GoTN பதிலளித்தது (ஜனவரி 2022). விதைக்கட்டுப்பாட்டு உத்தரவின்படி, 50 கிலோ எடையுள்ள சான்றளிக்கப்பட்ட விதைப் பைகளைத் திறக்கக் கூடாது என்ற அடிப்படையில், ஹெக்டேருக்கு 50 கிலோ விதைகள் வழங்கப்படுவதை அந்தப் பதில் மேலும் நியாயப்படுத்தியது. இருப்பினும், விவசாயிகளின் விதை விநியோக விண்ணப்பத்தில் சரியான அளவு விதைகளை வழங்குவதற்கு சாகுபடி முறையை சேர்க்க நடவடிக்கை எடுப்பதாக GoTN உறுதியளித்தது.

எனவே, தனிப்பட்ட விவசாயிகளின் விதைத் தேவையை வயல் பரப்பு மற்றும் நெல் பயிரிடும் முறை ஆகியவற்றின் அடிப்படையில் சரிபார்க்க தகுந்த முறையை வகுக்கத் தவறியது, வேலூர் மாவட்டத்தில் மட்டும் ₹ 1.33 கோடி

தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினத்திற்கு வழிவகுத்துள்ளது என தணிக்கை கண்டறிந்தது.

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பின்பற்றப்படும் முறையை வேளாண்மை இயக்குநர் மறுஆய்வு செய்து, விவசாயிகள் பின்பற்றும் நடவு முறையின்படி மட்டுமே விதைகள் வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும் என்று தணிக்கை பரிந்துரைக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு 8 கிலோ மட்டுமே தேவைப்படும் SRIவிவசாயிகளின் நலனுக்காக 8 கிலோ பைகளில் சான்றளிக்கப்பட்ட விதைகளை தயாரிக்கும் முறை உருவாக்கப்பட வேண்டும்

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை

3.4.3 MRI ஸ்கேனர்களை வாங்குவதில் தவிர்க்கக்கூடிய அதிகப்படியான செலவினம்

மூன்று அரசு மருத்துவமனைகளின் தலைவர்களின் செயல்பாட்டால் MRI ஸ்கேனர்கள் பொருத்துவதற்கான இடத்தை அடையாளம் காண்பதில் தாமதம் ஏற்பட்டது. இதன் விளைவாக ₹ 1.12 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது மற்றும் தேவைப்படும் நோயாளிகளுக்கு MRI ஸ்கேன் சேவைகள் தொடங்குவதில் ஒரு வருடத்திற்கும் மேலாக தாமதம் ஏற்பட்டது.

தமிழக அரசின் (GoTN) பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் லிமிடெட் (Tamil Nadu Medical Services Corporation Limited - TNMSC), அரசு மருத்துவ நிறுவனங்களுக்கு மருத்துவ உபகரணங்களின் கொள்முதல் மற்றும் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குகிறது. 2017-19 ஆம் ஆண்டில், 22 அரசு தலைமையக மருத்துவமனைகள் (Government Headquarters Hospitals - GHQH) மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு (Government Medical College Hospitals - GMCH), தேசிய சுகாதார இயக்கம் (National Health Mission) (14 MRI ஸ்கேனர்கள்) மற்றும் *பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா* (ஒரு MRI ஸ்கேனர்) ஆகியவற்றின் கீழ் இந்திய அரசு வழங்கிய நிதியைப் பயன்படுத்தியும், TNMSCன் சொந்த நிதிகள் பயன்படுத்தியும் (ஏழு MRI ஸ்கேனர்கள்) MRI ஸ்கேனர்களை TNMSC கொள்முதல் செய்தது. **(இணைப்பு 3.10)**.

TNMSC ஆல் அமைக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பக் குழு[44] பல்வேறு வகையான அரசு மருத்துவமனைகளுக்கு[45] ஏற்ற MRI ஸ்கேனர்களின் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளை உருவாக்கியது (ஜூலை 2017). மருத்துவமனைகளின் அளவு மற்றும் தேவையைப் பொறுத்து, நான்கு வெவ்வேறு மாதிரியான MRI ஸ்கேனர்கள் வாங்க முடிவு செய்யப்பட்டன, மேலும் தேர்வு செய்யப்பட்டமருத்துவமனைகளில் MRI ஸ்கேனர்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றிற்காக TNMSC திறந்த ஒப்பந்த முறையினை

---

44 சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் அரசு ராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை ஆகியவற்றிலிருந்து நான்கு கதிரியக்க நிபுணர்களைக் கொண்டது.

45 தாலுகா மருத்துவமனைகள், மாவட்ட தலைமையக மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்.

மேற்கொண்டது (ஆகஸ்ட் 2017). ஒப்பந்த செயல்முறையையின் முடிவில், வெற்றிகரமான ஒப்பந்ததாரர் ஆன சீமென்ஸ் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடட், (M/s Simens Healthcare Private Ltd.,) க்கு, 30 டிசம்பர் 2017 அன்று 19 MRI ஸ்கேனர்களுக்கு TNMSC ஒரு கொள்முதல் ஆணையை (PO) வழங்கியது. POன் படி, மருத்துவமனை அதிகாரிகளால் இடம் ஒப்படைக்கப்பட்ட 90 நாட்களுக்குள் MRI ஸ்கேனர்கள் வழங்கப்பட்டு நிறுவப்பட வேண்டும். TNMSC அதே நிறுவனத்துடன் மூன்று வருட காலம் வரை செல்லுபடியாகும் விலை ஒப்பந்தத்தை செய்து கொண்டது (ஜனவரி 2018). ஒப்பந்தத்தின்படி, ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விலையானது டிசம்பர் 2018 வரை செல்லுபடியாகும். டிசம்பர் 2018க்குப் பிறகு, இறக்குமதி செய்யப்பட்ட அலகின் விலை அமெரிக்க டாலர் மதிப்பில் மாறாமல் இருக்கும் ஆனால் PO தேதியன்று நடைமுறையில் உள்ள அந்நிய நாணயமாற்று வீதத்தின் (prevailing foreign exchange) அடிப்படையில் உண்மையான விலை கணக்கிடப்பட வேண்டும். மேலும், உள்ளூர் உபகரணங்களின் விலை ஒப்பந்தத்தின் இரண்டாம் ஆண்டில் நான்கு விழுக்காடும் மூன்றாம் ஆண்டில் மேலும் நான்கு விழுக்காடும் அதிகரிக்கும். கட்டண ஒப்பந்தத்தின் அடிப்படையில், 10 ஏப்ரல் 2018 (ஒரு அலகு) மற்றும் 10 அக்டோபர் 2018 (இரண்டு அலகுகள்) ஆகிய தேதிகளில் ஒரே வழங்குநரிடம் மேலும் இரண்டு POக்கள் அளிக்கபட்டன.

TNMSC மற்றும் மருத்துவமனைகளில் ஜூன் முதல் ஆகஸ்ட் 2021 வரையிலான பதிவுகளின் தணிக்கை ஆய்வு, **அட்டவணை 3.5ல்** கொடுக்கப்பட்டுள்ள மூன்று MRI ஸ்கேனர் அலகுகள் தொடர்பாக வழங்குநருக்கு செலுத்தப்பட்ட உண்மையான கட்டணம் அதிகமாக இருப்பதாக வெளிப்படுத்தியது.

அட்டவணை 3.5: MRI ஸ்கேனர் அலகுகளை வழங்குபவருக்கு அதிக கட்டணம் செலுத்தப்பட்டது*

மருத்துவ-மனையின் பெயர்	தேதி				கட்டணம் (ரூபாயில்)		
	கொள்முதல் ஆணை	தளத்தை ஒப்படைத்தல்	மின் வசதி வழங்குதல்	செயல்-படுத்துதல்	POன் படி	செலுத்-தப்பட்ட தொகை	அதிகமாக செலுத்-தப்பட்ட தொகை
GHQH, காஞ்சிபுரம்	30/12/2017	29/06/2019	05/03/2020	05/03/2020	5,62,61,560	6,00,01,076	**37,39,516**
GHQH, பெரம்பலூர்	30/12/2017	29/05/2019	07/12/2019	24/12/2019	5,62,61,560	6,00,01,076	**37,39,516**
GHQH, திருப்பூர்	10/10/2018	02/06/2019	12/12/2019	18/12/2019	5,62,61,560	6,00,01,076	**37,39,516**
அதிகமாக செலுத்தப்பட்ட மொத்தத் தொகை							**1,12,18,548**

* MRI ஸ்கேனரின் மாதிரி: எசென்சா-16

(ஆதாரம்: TNMSC வழங்கிய தரவு)

மருத்துவமனை அதிகாரிகளால் நிறுவல் தளத்தை (Installation site) தயார் செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக MRI ஸ்கேனர்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் அதிக கட்டணம் செலுத்தப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. இந்த மூன்று மருத்துவமனைகளாலும் இடத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டதால், கட்டண ஒப்பந்தத்தின் முதல் வருடத்தில் MRI அலகுகளை இறக்குமதி செய்ய முடியவில்லை என்றும், இதனால் அந்நிய நாணயமாற்று வீதம் அதிகரித்ததமை மற்றும் உள்ளூர் துணைக்கருவிகளுக்கான விலைகள் உயர்வின் அடிப்படையில், இரண்டாவது வருட கட்டண ஒப்பந்தத்திற்குப் பொருந்தும் தொகையை ஒப்பந்தகாரர் கோரினார்.

ஒப்பந்தகாரரின் அதிக தொகைக்கான கோரிக்கையானது, ஆரம்பத்தில் TNMSCஆல் நிராகரிக்கப்பட்டாலும், தளத் தயார்நிலை இல்லாமல் அலகுகளை இறக்குமதி செய்ய முடியாது என்பதை ஒப்பந்தகாரர் உறுதிப்படுத்தியமையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தளத் தயார்நிலை செய்வது என்பது, ஆயத்த தயாரிப்பு பணியைத் தொடங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தளங்களை ஒப்பந்தகாரர் TNMSCயிடம் ஒப்படைப்பதும் MRI ஸ்கேனர்களை நிறுவுவதற்கு 125 கிலோ-வோல்ட் ஆம்பியர் (Kilo-Volt Ampere -KVA) மின் வசதி அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

கீழே விவரிக்கப்பட்டபடி மூன்று மருத்துவமனைகளின் தரப்பில் தவிர்க்கப்படக்கூடிய தாமதங்களை தணிக்கை கண்டறிந்தது:

GHQH, காஞ்சிபுரம்:

- பிப்ரவரி 2018ல் TNMSC, ஒப்பந்தகாரர் மற்றும் மருத்துவமனை அதிகாரிகளால் ஒரு கூட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மற்றும் MRI ஸ்கேனரை நிறுவுவதற்காக பெண்கள் அறுவை சிகிச்சை பிரிவில் காலியாக உள்ள இடம் அடையாளம் காணாப்பட்டது.
- இருப்பினும்,மருத்துவ கண்காணிப்பாளர் (Medical Superintendent - MS), MRI ஸ்கேனரை நிறுவுவதற்காக, ‘சட்டபேரவையின் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்’ (‘Member of Legislative Assembly Constituency Development Scheme’ - MLACDS) மூலம் நிதியளிக்கப்பட்ட புதிய கட்டிடம் கட்டுவதற்கு இசைந்தார். ஆனால், TNMSC, அந்த யோசனையை நிராகரித்து, ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி பெண்கள் அறுவை சிகிச்சை பிரிவை ஒதுக்கி, 125 KVA மின்வசதி உறுதி செய்யக் கோரியது.
- MRI ஸ்கேனரை நிறுவுவதற்கான தளத்தை அடையாளம் காண்பதில் TNMSC மற்றும் MS இடையே கருத்து வேறுபாடு இருப்பதை தணிக்கை கண்டறிந்தது. பிப்ரவரி 2018ல் அடையாளம் காணப்பட்ட தளத்தை நிராகரித்த பிறகு, இதற்கான மற்ற கட்டிடங்களின் பொருத்தத்தை ஆய்வு செய்ய MS எந்த முயற்சியும் எடுக்கவில்லை.
- MRIஸ்கேனர் வைப்பதற்கான புதிய கட்டிடத்திற்கான இடம் நவம்பர் 2018ல் இறுதி செய்யப்பட்டது மற்றும் புதிதாக கட்டப்பட்ட கட்டிடம் ஜூன் 2019ல் மட்டுமே TNMSCயிடம் ஒப்படைக்கப்பட்டது. மின் பணிகள் 2019 அக்டோபரில் முடிக்கப்பட்டு, பிப்ரவரி 2020ல் 150 KVA உயர் மின்னழுத்த வழங்கலுக்கு (High Tension Supply) TANGEDCO ஒப்புதல் அளித்தது

இதனால், இருக்கும் கட்டிடங்களில் தகுந்த இடத்தைக் காணத் தவறியதால், MRI ஸ்கேனர் பொருத்துவதற்கு உரிய இடத்தை அமைத்தலில் இயல்பு மீறிய தாமதம் ஏற்பட்டு, 2017 டிசம்பரில் கொள்முதலுக்காக கோரப்பட்ட கருவிகள் மார்ச் 2020ல் இயக்கப்பட்டன.

GHQH , பெரம்பலூர்:

- ஜூன் 2018ல், TNMSC மற்றும் ஒப்பந்தகாரர் மருத்துவமனைக்குச் சென்று, MRI ஸ்கேனரை வைக்க விபத்து மற்றும் அவசரநிலைத் பிரிவின் தரைத் தளத்தில் ஒரு இடத்தை பரிந்துரைத்தனர்.

MS தளத்தை வெளிநோயாளிகள் பிரிவிற்க்கு மாற்ற முடிவு செய்து, பிப்ரவரி 2019ல் மீண்டும் விபத்து மற்றும் அவசரநிலைத் பிரிவிற்கு மாற்றினார்.ஆயத்த தயாரிப்பு பணிகளைத் தொடங்குவதற்காக ஏப்ரல் 2019ல் TNMSC யிடம் ஒப்படைக்கப்பட்டது.

- அதே நேரத்தில், பெரம்பலூர் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் (Joint Director of Health Services - JDHS), MRI அலகுக்கு 125 KVA மின்சாரம் வழங்குவதற்காக, திருச்சி PWD (மின்வசதி)ன் நிர்வாகப் பொறியாளரிடம் (Executive Engineer) கோரிக்கை விடுத்தார் (ஜூலை 2018). PWD ஏழு மாதங்கள் எடுத்து, பிப்ரவரி 2019ல் மதிப்பீட்டைச் சமர்ப்பித்தது. நிதி இருந்தபோதிலும், தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் (Election Model Code of Conduct) காரணமாக வேலை உடனடியாக தொடங்கப்படவில்லை. இறுதியாக 2019 நவம்பரில் பணிகள் முடிக்கப்பட்டு 2019 டிசம்பரில் MRI ஸ்கேனர் இயக்கப்பட்டது.

இவ்வாறு, MRI ஸ்கேனர் வைப்பிற்க்காக ஒதுக்கப்படும் தளத்தில் MS தரப்பில் தடுமாற்றம் ஏற்பட்டதால், இயல்பு மீறிய தாமதம் ஏற்பட்டது. அதன் விளைவாக MRI ஸ்கேனர் அதிக விலையில் 2019 டிசம்பரில் இயக்கப்பட்டது.

GHQH, திருப்பூர்:

- 2018 அக்டோபரில் PO வழங்கப்பட்டாலும், மார்ச் 2019ல் மட்டுமே, புதிதாகக் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தின் தரை தளத்தில் 100 படுக்கைகள் கொண்ட பிரிவில் 1,300 சதுர அடி இடத்தை MS அடையாளம் கண்டது.
- TNMSC உடனான ஒருங்கிணைப்பு சிக்கல்கள் காரணமாக, 125 KVA மின்சாரம் வழங்குவதற்கான பணி ஆணை வழங்குவதில் ஆறு மாதங்கள் தாமதம் ஏற்பட்டது. 2019 டிசம்பரில் பணிகள் நிறைவடைந்தன, மேலும் MRI ஸ்கேனர் மார்ச் 2020ல் அதிக விலையில் இயக்கப்பட்டது.

இவ்வாறாக, MRI ஸ்கேனருக்கான தளத்தை சரியான நேரத்தில் தயார்படுத்துவதற்கு PWD மற்றும் TNMSC உடன் திறம்பட ஒருங்கிணைக்க மருத்துவமனை அதிகாரிகள் தவறியமை தேவைப்படும நோயாளிகளுக்கு, MRI ஸ்கேன் சேவைகள் தொடங்குவதில் ஓராண்டு கால தாமதம் மற்றும் ₹ 1.12 கோடி தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவு ஆகியவற்றிற்கு வழிவகுத்தது.

GoTN, மேற்கூறிய தணிக்கை முடிவுகளை ஏற்றுக்கொண்டு அதற்கான பதிலில் (மார்ச் 2022), மேற்கண்ட மாவட்டங்களில் MRI ஸ்கேனர்களை நிறுவுவதற்கு 125 KVA மின்சாரம் தேவைப்பட்டமையே ₹ 1.12 கோடி அதிகமான செலவினம் ஏற்பட்ட காரணம் என்று கூறியது. இருப்பினும், GoTNன் பதில் தள அடையாளம் மற்றும் மின் இணைப்பில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடவில்லை.

இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, PWD அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து, இன்னல்களை தீர்த்துவைக்க, கள அளவில் பொருத்தமான, துறைகளுக்கிடையேயான கட்டமைப்புகள் (inter departmental structures) ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தணிக்கை பரிந்துரைக்கிறது.

3.5 நிதி முடக்கம்/பயனற்ற முதலீடுகள்

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை

3.5.1 திருச்சியில் மத்திய வணிக வளாகம் செயல்படுத்தப்படாமை

திருச்சிராப்பள்ளி அருகே கள்ளிக்குடியில் ₹ 77.04 கோடி செலவில் கட்டப்பட்ட மத்திய வணிக வளாகம், முறையற்ற திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் உரிய நிலம் அடையாளம் காணப்படுவதில் உள்ள குறைபாடுகளால் நான்கு ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் உள்ளது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் (CAMAB) தலைமையில் செயல்படும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) விவசாய விளைபொருட்களுக்கான புதிய உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் அவற்றை சந்தைப்படுத்த வாய்ப்பு அமைத்துத்தருகிறது. திருச்சிராப்பள்ளி மாநகரில் தற்போதுள்ள காந்தி சந்தையில் மக்கள் கூட்டம் அதிகரிப்பு மற்றும் அங்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும் பொருட்களின் அளவை கையாளுவதற்கு போதுமான வசதியின்மை ஆகிய காரணங்களின் அடிப்படையில் செப்டம்பர் 2013ல், திருச்சி மாவட்டத்திலுள்ள கள்ளிக்குடி கிராமத்தில் காய்கறிகள் பழங்கள் மற்றும் பூக்களுக்கான புதிய மத்திய வணிக வளாகம் அமைப்பதற்கான முன்மொழிவை CAMAB தமிழக அரசுக்கு அனுப்பினார். அதன்படி ₹ 12.06 கோடி மதிப்புகள், 9.79 ஏக்கர் அளவுள்ள தனியார் நிலத்தை வாங்குவதற்கும், அதில் ₹ 65 கோடி மதிப்புடைய மத்திய வணிக வளாகம் கட்டுவதற்கும் TNSAMBக்கு GoTN உத்தரவுகள் அளித்தது (பிப்ரவரி 2014 மற்றும் ஜூன் 2014). கட்டுமான பணிக்கான மொத்த செலவு மதிப்பீட்டில் (செலவினம்), 95 விழுக்காடு தொகை, அதாவது, ₹ 61.70 கோடியினை நபார்டு வங்கிக் கடன் மூலம் நிதியளிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி அளித்தது.

ஜூன் 2014ல் TNSAMB நிலத்தை வாங்கிய பின், அக்டோபர் 2014ல் CAMAB ₹ 61.70 கோடியை வழங்கினார். ஜூலை 2017ல் மொத்தம் ₹ 64.98 கோடி செலவில் கள்ளிக்குடியில் மத்திய வணிக வளாகம் கட்டுமானப் பணி நிறைவுப்பெற்று[46] செப்டம்பர் 2017ல் இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இவற்றுள் வணிகர்களுக்கென ஒதுக்கப்பட்ட 623 கடைகளில் 421 கடைகளும், உழவர், உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு (FPO) ஒதுக்கப்பட்ட 207 கடைகளில் 148 கடைகளும் மே 2022ல் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.ஆயினும், மே 2022 நிலவரப்படி இவற்றுள், FPOக்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளில் 18 மற்றும் குளிர்பதன சேமிப்பகம் (cold storage) மட்டுமே செயல்படத் தொடங்கியுள்ளன. சந்தை வணிகர்கள் தற்போதைய இடத்தை விட்டு இடம் மாற விரும்பாததால் மொத்த மட்டும் சில்லறை வணிகர்களுக்கென ஒதுக்கப்பட்ட கடைகள் எதுவும் செயல்படவில்லை.

CAMAB மற்றும் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), திருச்சி அலுவலகங்களின் பதிவுகள் ஜனவரி 2021 மற்றும் செப்டம்பர் 2021ல் ஆய்வு

46 1,000 கடைகள், தரப்படுத்தும் மற்றும் வரிசைப்படுத்தும் வசதிகள், குளிர்பதனக் கிடங்கு மற்றும் சுமைவண்டி எடை நிறு கருவி, நிர்வாக கட்டிடம், வணிக வங்கி, தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரம், உணவகம், மாநாட்டு அரங்கம், ஓய்வு அறை போன்ற பொதுவான வசதிகளுடன்.

செய்யப்பட்டது. மேலும், செப்டம்பர் 3, 2021 அன்று கூட்டு நேரடி ஆய்வு (JPI) நடத்தப்பட்டது. மொத்தம் ₹ 77.04 கோடி[47] செலவில் ஜூலை 2017ல் நிறுவப்பட்ட மத்திய வணிக சந்தை கட்டுமானம் முடிவடைந்ததிலிருந்து செயல்படத் தொடங்கவில்லை என்பது ஆய்வில் வெளிப்பட்டது. அமைக்கப்பட்ட புதிய உள்கட்டமைப்பை செயலற்ற நிலையில் இருக்கக் காரணமான GoTN மற்றும் CAMABஇன் குறைப்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- **சந்தையின் இருப்பிடம்**: கள்ளக்குடியில் மத்திய சந்தையை அமைக்க முடிவு செய்வதற்கு முன் TNSAMB எந்த ஒரு சாத்தியக்கூறு ஆய்வையும் மேற்கொள்ளவில்லை. மேலும், காந்தி சந்தையிலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் புதிதாக கட்டப்பட்ட மத்திய சந்தை உள்ளதால், காந்தி சந்தையில் உள்ள வணிகர்களுக்கு இவ்விடம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. நகருக்கு அருகாமையில் பொருத்தமான நிலத்தை அடையாளம் காணத் தவறியதால் காந்தி சந்தை இடமாற்றும் திட்டம் தடைப்பட்டது.

- **திட்டமிடல் மற்றும் கட்டுமானம்:** இரண்டு தளங்களை கொண்ட 19 அடுக்குமாடி கட்டிடத் தொகுதிகளாக (blocks) மொத்தம் 1,000 கடைகள் கட்டப்பட்டன. கட்டுமான பணி முடிந்தவுடன், வணிகர்கள் கடைகளின் அளவு போதுமானதாக இல்லை என்று தெரிவித்தனர். எனவே கடைகளுக்கு இடையிலான சுவர்களை அகற்றி, கடைகளின் அளவு அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக கடைகளின் எண்ணிக்கை 830ஆக குறைந்தது. மேலும், முதல் தளதத்தில் உள்ள கடைகள் வணிகர்களால் ஏற்றுக்கொளப்படவில்லை. வணிகர்களின் தேவைக்கேற்ப முறையான வடிவமைப்பு இல்லாமல் கடைகள் கட்டப்பட்டதே புதிய மத்திய வணிக வளாகத்திற்கு மாறத் தயங்குவதற்கு முக்கிய காரணமாகும்.

- **சந்தை வசதிகள்**: மத்திய வணிக வளாகத்தில் கனரக வாகனங்கள் நிறுத்த போதுமான இடம் இல்லை. இதற்காக இந்து சமய அறநிலைத் துறையிடமிருந்து 4.4 ஏக்கர் நிலததைப் பெறுவதற்கான திட்டம் (ஜூலை 2017) நிறைவேறவில்லை (ஆகஸ்ட் 2021).

- மத்தியச் சந்தையில் உருவாகும் கழிவுகளை அப்புறப்படுத்த சந்தையின் அருகாமையில் உள்ள 3.29 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலம் ஒதுக்கப்பட்டது. ஆயினும், கழிவுகளை அகற்றுவதற்கும் பயனுள்ள முறையில் உரமாக தயாரிப்பதற்கும் வசதிகள் உருவாக்கப்படவில்லை என்று தணிக்கையில் அறியப்பட்டது (ஆகஸ்ட் 2021).

- **கூடுதல் பணிகள்:** திருச்சி வணிகக் குழுச் செயலாளரின் (செப்டம்பர் 2020) கோரிக்கையின் அடிப்படையில் பல்வேறு பழுதுப்பார்ப்பு பணிகள், பராமரிப்பு பணிகள் மற்றும் CCTV ஏற்பாடுகளை வழங்குவதற்கான தொகையை உதவி செயற்பொறியாளர், TNSAMB, சென்னை, ₹ 1.88 கோடியாக மதிப்பீடு செய்து, அதனை GoTNன் நிர்வாக ஒப்பளிப்பு கோரி சமர்ப்பிப்பதார். இது நிலுவையில் உள்ளது.

---

47 மத்திய வணிக வளாகம் கட்டுவதற்கான செலவு ₹ 64.98 கோடி மற்றும் நிலத்தின் (9.79 ஏக்கர்) விலை ₹ 12.06 கோடி.

➢ கூட்டு நேரடி ஆய்வில், சூரிய சக்தி தகடுகள் இன்னும் மின்தொகுப்புடன் இணைக்கப்படாதமையால், மத்திய வணிக வளாகத்தில் நிறுவப்பட்ட ஐந்து சூரிய சக்தி அலகுகளும் நிறுவப்பட்டதிலிருந்து பயன்படுத்தப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

தகுந்த நிலம் அடையாளம் கண்டறிவதில் குறைபாடுகள், வணிகர்களை இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ள செய்யாமை, கடைகளின் தவறான வடிவமைப்பு மற்றும் போதிய வசதிகளின்மை போன்ற காரணங்களின் விளைவாக ₹ 77.04 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி மத்திய வணிக வளாகம், நிறுவப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும், முழுமையாக செயல்படவில்லை என்று தணிக்கை அறிந்தது.

மாவட்ட நிர்வாகத்தின் ஆதரவுடன் கள்ளிக்குடி சந்தையில் வணிகர்களின் பங்களிப்பை அதிகரிக்கவும், சந்தை வசதிகளை செயல்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக GoTN (நவம்பர் 2021) பதிலளித்தது.

வணிகர்கள் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப கடைகளை திருத்தம் செய்து அமைத்து (modify), தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் சந்தையை இயக்கவும், கடைகளை வாடகைக்கு விடவும் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தணிக்கை பரிந்துரை செய்கிறது.

உயர்கல்வித் துறை

3.5.2 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் விடுதிகள் பயனுக்கு வராமை

ஐந்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில், விடுதிகள் செயல்பட போதிய முன்முயற்சிகள் இல்லாததால், ₹ 6.64 கோடி பயனற்ற செலவினம்

தமிழக அரசு (GoTN) தலா ₹ 7.69 கோடியில் ஏழு[48] அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளை (GPTCs) கட்டுவதற்கு ₹ 53.83 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி அனுமதியை (AS/FS) (ஜனவரி 2010 மற்றும் ஜூன் 2010) வழங்கியது. அனுமதிக்கப்பட்ட கட்டிடங்களில் நிர்வாகத் தொகுதி, வகுப்பறைகள், தொழிற்கூடங்கள் மற்றும் விடுதித் தொகுதி ஆகியவை அடங்கும். ஏழு புதிய GPTCகளும் 2010-11 கல்வியாண்டிலிருந்து செயல்படத் தொடங்கின. புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரை அவர்கள் முதலில் தற்காலிக கட்டிடங்களில் தங்க வைக்கப்பட்டனர். ₹ 9.23 கோடி செலவில் ஏழு GPTCகளின்[49] விடுதிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு செப்டம்பர் 2011 முதல் ஆகஸ்ட் 2015 வரையிலான காலக்கட்டத்தில் அந்தந்த GPTCக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

48 தர்மபுரி, கரூர், பெரம்பலூர், தேனி, திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில்.

49 நான்கு இடங்களில் ஆண்கள் விடுதிகளும், மூன்று இடங்களில் பெண்கள் விடுதிகளும்.

அட்டவணை 3.6: தங்கும் விடுதிகளின் கட்டுமான செலவு விவரங்கள் மற்றும் விடுதிக்கான தளபாடங்கள்/சமையல் பாத்திரங்கள் வாங்குதலுக்கான செலவினம்

வ. எ ண்	GPTCன் பெயர்	விடுதியை முடித்த தேதி	ஏற்பட்ட செலவினம் (₹ இலட்சத்தில்)	வாங்கிய தளபாடங்கள்/ சமையல் பாத்திரங்களின் விலை (₹ இலட்சத்தில்)	(மார்ச் 2022 நிலவரப்படி) பயனுக்கு வருவதில் தாமதம்	விவரக்குறிப்பு
1	கரூர்	30/11/2012	132.70	0	9 ஆண்டுகள்	கட்டும் பணிகள் முடிந்ததும், பயன்படுத்தப் படவில்லை
2	தேனி	15/06/2012	145.06	7.25	9 ஆண்டுகள்	
3	திருவண்ணாமலை	07/02/2013	145.07	5.95	8 ஆண்டுகள்	
4	திருவாரூர்	13/06/2012	82.42	5.23	9 ஆண்டுகள்	
5	விழுப்புரம்	18/08/2015	134.00	6.95	6 ஆண்டுகள்	
	கூட்டுத் தொகை		*639.25*	*25.38*		
6	தருமபுரி	27/03/2013	145.06	9.58	-	பயன்படுத்தப்பட்டது* (2013-19)
7	பெரம்பலூர்	12/09/2011	139.28	8.55	-	2019-20 முதல் பயன்படு த்தப்பட்டது
	கூட்டுத் தொகை		*284.34*	*18.13*		
	மொத்தத் தொகை		923.59	43.51		

* இந்த விடுதியில் 2013-15ம் ஆண்டு தருமபுரி அரசு பொறியியல் கல்லூரி மாணவிகள் தங்கி படித்து வந்தனர். அதன்பிறகு 2015-19 ஆம் ஆண்டில் GPTC, கடத்தூர் விடுதி கட்டிடத்தில் இருந்து தற்காலிகமாக செயல்பட்டது. 2019 முதல், தங்கும் விடுதி காலியாக உள்ளது.

(ஆதாரம்: அந்தந்த GPTCகள் வழங்கிய விவரங்கள்)

பிப்ரவரி முதல் ஜூலை 2021 வரையிலான காலப்பகுதியில் GPTCகளில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ததில், கட்டிமுடிக்கப்பட்ட ஏழில் ஐந்து[50] தங்கும் விடுதிகள் கட்டுமானம் முடிந்த பிறகும் பயன்படுத்தப்படவில்லை **(அட்டவணை 3.6).** மேலும், பிப்ரவரி 2015ல், தளபாடங்கள்/சமையல் பாத்திரங்களை வாங்குவதற்காக ஒவ்வொரு GPTCக்கும் ₹ 7 இலட்சத்தை GoTN வழங்கியது. 2015 ஆம் ஆண்டில் ₹ 25.38 இலட்சம் செலவில் நான்கு GPTCக்களில்[51] வாங்கப்பட்ட தளபாடங்கள்/ சமையல் பாத்திரங்கள் தங்கும் விடுதிகளில் அடுக்கி வைக்கப்பட்டு நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாததால் வெவ்வேறு சீரழிந்த நிலைகளில் கிடப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. GPTCகளில் கண்டறியப்பட்ட சில குறிப்பிட்ட இன்னல்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

GPTC கரூர்:

GPTC, கரூரில் விடுதிக்கு நிரந்தரமான தண்ணீர் வசதி இல்லாததால், கட்டுமானம் முடிந்த பிறகு, விடுதி இயங்கப்படவில்லை. DoTEயிடம் முதல்வரின் கோரிக்கையின் அடிப்படையில் (நவம்பர் 2012), GoTN ஆனது, நீர் விநியோகத்தை வழங்குவதற்காக ₹ 12.53 இலட்சம் தொகைக்கான AS மற்றும் FS வழங்கியது (அக்டோபர் 2015). நிலத்தடி நீர் போதுமான அளவு இல்லாததால், தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய ஆழ்குழாய் கிணறு தோண்டும் பணியும் (ஜனவரி 2016) பலனளிக்காமல் இருந்தது. தற்போது, கிராம ஊராட்சிகளிலிருந்து பெறப்படும் தண்ணீர், GPTC இயங்குவதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது, தங்கும் விடுதிக்கு பலனளிக்கவில்லை.

மேலும், தண்ணீர் வசதி இல்லாமல் விடுதி செயல்படாததால், தளபாடங்கள்/ பாத்திரங்கள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட ₹ 7 இலட்சம் தொகையை, கல்லூரிமுதல்வரின் முடிவின் அடிப்படையில் (டிசம்பர் 2015), நிலையான வைப்புத்தொகையில் (மார்ச் 2016) சேமிப்பு செய்யப்பட்டது. தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட பிறகு, ஜனவரி 2022ல், விடுதியானது எட்டு மாணவர்களுடன் ஓரளவு செயல்படத் தொடங்கியது.

50 கரூர், தேனி, திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம்.

51 GPTC தேனி - ₹ 7.25 இலட்சம்; GPTC திருவண்ணாமலை - ₹ 5.95 இலட்சம்; GPTC திருவாரூர் - ₹ 5.23 இலட்சம் மற்றும் GPTC விழுப்புரம் - ₹ 6.95 இலட்சம்.

திருவண்ணாமலை மற்றும் திருவாரூரில் உள்ள GPTC:

நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமை ஆக்கிரமிப்பு மற்றும் பராமரிப்பு இல்லாததால், GPTC திருவண்ணாமலை மற்றும் GPTC திருவாரூர் விடுதி கட்டிடங்கள் பாழடைந்த நிலையில் உள்ளன. விடுதி கட்டிடங்களின் தளம் குழிந்து, சுவர்களில் விரிசல் ஏற்பட்டு, கதவுகள், கண்ணாடி ஜன்னல்கள், குடிநீர் குழாய்கள் போன்றவை உடைந்த நிலையில் இருந்தன. பொதுப்பணித்துறை மூலம் குறைகளை சரி செய்ய கல்லூரிமுதல்வர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

விடுதிகளில் காணப்படும் பொதுவான குறைபாடுகள்:

விடுதிகள் செயல்படுதல், உணவு, கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்வதை உள்ளடக்கியது. தங்கும் விடுதிகளில் சமையல் அறையை நடத்துவதற்கு கூடுதல் பணியாளர்கள் எவரையும் GoTN அனுமதிக்கவில்லை. ஏனெனில், தற்போதுள்ள முறையின்படி, தங்குபவர்கள் செலவைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் விடுதி நடத்தப்பட்டுவருகிறது. இருப்பினும், செலவினப் பகிர்வு அடிப்படையில் தங்கும் விடுதிகளை நடத்துவது குறித்த விரிவான வழிகாட்டுதல்கள் எதையும் DoTE வெளியிடவில்லை. DoTE மூலம் விடுதிகளை நடத்துவதற்கான தெளிவான வழிகாட்டுதல்கள் இல்லாதபோதிலும், பெரம்பலூர் GPTCன் முதல்வர் சுய ஏற்பாட்டின் மூலம் விடுதியை இயக்கி (2019), 30 மாணவர்கள் பயனடைந்ததை தணிக்கை கண்டறிந்துள்ளது. மற்ற GPTCகளின் முதல்வர்கள், விடுதிகளை இயக்குவதற்கு இதுபோன்ற எந்த ஒரு செயலூக்கமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தங்கும் விடுதிகளை செயல்படுத்தப்படாததற்கான காரணங்கள் குறித்த குறிப்பிட்ட தணிக்கை வினாவிற்க்கு அவர்கள் அளித்த பதில்களில், அனைத்து GPTCகளின் முதல்வர்கள், விடுதிகள் 'தேவை எழுப்பாமையே' அதற்கு காரணம் என்று கூறியுள்ளனர். அருகில் அரசு நடத்தும் இலவச விடுதிகள் இருப்பதாலும், மாணவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து பயணிக்க இலவச பேருந்து அனுமதி சீட்டு வசதி கிடைப்பதாலும் விடுதிக்கான தேவை குறைவு என முதல்வர்கள் கூறினர். ஆயினும், முதல்வர்கள் விடுதி சேர்க்கைக்கான விண்ணப்பங்களை அழைக்கவில்லை அல்லது விடுதி தங்குவதற்கான கோரிக்கை தொடர்பாக எந்தப் பதிவையும் பராமரிக்கவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. GPTC கரூரில் இணைக்கப்பட்டுள்ள விடுதியில், மாணவிகள் உணவகம் வசதி இல்லாமல் கூட தங்குவதற்கு தயாராக இருப்பதும், தங்கும் விடுதிக்கான தேவை இருப்பதையும் தணிக்கை கண்டறிந்துள்ளது. மேலும், ஐந்து GPTCக்களில் மூன்று அருகிலுள்ள அரசாங்கத்தால் நடத்தப்படும் விடுதியிலிருந்து 10 கிலோமீட்டர் (கிமீ) தொலைவிலும் மற்றும் GPTC, திருவாரூர் பேருந்து வசதியுடன் அருகிலுள்ள சாலையில் இருந்து மூன்று கிமீ தொலைவில் அமைந்துள்ளது. எனவே, பதில்களை ஏற்க கூடியதாக இல்லை.

இவ்வாறு, விடுதிகளை இயக்குவதற்கு முதல்வர்கள் மற்றும் DoTEன் தரப்பில் போதிய முன்முயற்சி இல்லாததாலும், கட்டிடங்கள் மற்றும் வசதிகளின் தரக்குறைவாலும், ₹ 6.39 கோடி செலவில் கட்டப்பட்ட ஐந்து விடுதிக் கட்டிடங்கள் மற்றும் ₹ 0.25 கோடியில் வாங்கப்பட்ட தளபாடங்கள் மற்றும் பாத்திரங்கள் எட்டாண்டுகள் வரை செயல்படாமல் பயனற்று கிடப்பதால் ₹ 6.64 கோடி பயனற்ற செலவினம் ஏற்பட்டது. இத்திட்டத்தின் பலன்கள், பயனாளிகளான மாணவர்களை சென்றடைய இயலவில்லை.

GoTN, தனது பதிலில் (ஏப்ரல் 2022) தணிக்கை கண்டுபிடிப்புகளை ஏற்றுக்கொண்டு, GPTCகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், விடுதிகளை

செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறியது. தணிக்கைக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையி, GPTCக்களில் தங்கும் விடுதிகளை நிர்வகிப்பதற்கான விதிகளை GoTN உருவாக்கியது (பிப்ரவரி 2022). மேலும், ஆறு முதல் ஒன்பது ஆண்டுகளாகச் செயலற்ற நிலையில் இருந்த ஐந்து விடுதிகளில் ஒன்றை ஓரளவுக்கு செயல்பத்துகிறது.

மீதமுள்ள ஐந்து விடுதிகளையும் மாணவர்களின் நலனுக்காக முழுமையாக செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று தணிக்கை பரிந்துரைக்கிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

3.5.3 ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையக் கட்டிடத்தின் செயலற்ற நிலை

மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையத்தை உருவாக்கத் தவறியதால், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ₹ 2.27 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டடம் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. மேலும், ஓராண்டுக்கும் மேலாக, ₹ 2.73 கோடி வங்கிக் கணக்கில் முடக்கப்பட்டது.

செப்டம்பர் 2015ல், மாண்புமிகு முதலமைச்சர் மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையத்தை (Integrated Sports Science Centre - ISSC) நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முடிவை அறிவித்தார். ISSCன் நோக்கமானது, மாநிலத்தின் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டியிடுவதற்கு உதவும் வகையில் அறிவியல் உபகரணங்களுடன் கூடிய உயர்தர விளையாட்டுப் பயிற்சிக்கான வசதிகளை வழங்குவதாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், உறுப்பினர் செயலாளரின் (Member Secretary,Sports Development Authority of Tamil Nadu (MS, SDAT) ஆரம்ப மதிப்பீட்டின்படி, ISSC அமைக்க முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ₹ 9.24 கோடி செலவு ஆகும் என்று குறிப்பிடப்பட்டது.இதில் கட்டிடங்களுக்காக ₹ 4.80 கோடியும், உபகரணங்களுக்கு ₹ 2.44 கோடியும், தொடரா செலவினங்களுக்காக (non-recurring cost) ₹ 7.24 கோடியும், தொடர் செலவுகளுக்காக (recurring cost) ₹ 2 கோடியும் அடங்கும். முதலமைச்சரின் அறிவிப்பு மற்றும் MS, SDATன் முன்மொழிவின் அடிப்படையில், GoTN (டிசம்பர் 2015) திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியது மற்றும் தொடரா செலவினங்களுக்காக ₹ 5 கோடி வழங்கியது. அதன்படி, ISSCக்கான கட்டிடம் ₹ 2.50 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்பந்தம் (tender) மூலம் (நவம்பர் 2016) ₹ 2.27 கோடி செலவில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன (அக்டோபர் 2017).

மதுரையில் உள்ள SDAT, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அலுவலகத்தின் பதிவுகளை (ஜூன் 2021) மற்றும் அரசின் தலைமை செயலகத்திலும் ஆய்வு செய்ததில், ISSC கட்டிடம் கட்டுமானப் பணிகள் முடிந்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ளது தெரியவந்தது. மேலும், உயர்தர விளையாட்டுப் பயிற்சிகள் அளிப்பதற்கான நோக்கத்தினை அடைய முடியவில்லை.

ISSCக்கான முன்மொழிவு, அதன் எட்டு துறைகளுக்காக உயர் செயல்திறன் சோதனை மற்றும் பயிற்சி உபகரணங்களை வாங்குவதை நோக்கமாகக் கொண்டது. அவை, (i) உடற்பயிற்சி உடலியல், (ii) உளவியல் (iii) உயிர் வேதியியல்

(iv) பயிற்சி முறை (v) ஊட்டச்சத்து (vi) உயிரியக்கவியல் மற்றும் கினீசியாலஜி[52] (Biomechanics and Kinesiology) (vii) ஆந்த்ரோபோமெட்ரி (Anthropometry) மற்றும்[53] (viii) விளையாட்டு மருத்துவம். ISSCக்கு தேவையான உபகரணங்களின் விலை ₹ 2.43 கோடி என்று கணக்கிடப்பட்டது (அக்டோபர் 2016).

இதற்கிடையே, தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் (Tamil Nadu Physical Education and Sports University -TNPESU), சென்னை, சென்னையில் உள்ள அதன் வளாகத்தில் அனைத்து வசதிகளடங்கிய முழுமையான உயிரியக்கவியல் துறையை அமைக்க தனியாக முன்மொழிந்தது. ₹ 13.12 கோடி செலவில், TNPESU வளாகத்தில், விளையாட்டு உயிரியக்கவியலில் மேன்மை பெற்று விளங்கும் மையத்தை (Centre of excellence) நிறுவுவதற்கான TNPESUன் முன்மொழிவுக்கு GoTN தனியாக ஒப்புதல் அளித்தது (ஜூலை 2017).

TNPESU விளையாட்டு உயிரியக்கவியல் மையத்தை நிறுவுவதற்கான அனுமதியின் விளைவாக, ISSCன் முன்மொழியப்பட்ட உயிரியக்கவியல் துறைக்கான உபகரணங்களை வாங்குவதை கைவிட முடிவு செய்யப்பட்டது. பிற உபகரணங்களை வாங்குவதற்கான ஒப்பந்தங்கள் ஜனவரி 2021ல் அழைக்கப்பட்டன. ஒப்பந்த ஆவணங்களை ஆய்வு செய்வதற்கும் தகுதியான ஒப்பந்ததாரர்களை தேர்ந்தெடுப்பதற்கும் ஏப்ரல் 2021ல் ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டாலும், இன்றுவரை (பிப்ரவரி 2022) ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்படவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. ஒப்பந்தங்ளை இறுதி செய்யாததற்கான குறிப்பிட்ட காரணங்களை SDAT வழங்கவில்லை. இதன் விளைவாக, வழங்கப்பட்ட ₹ 5 கோடியில், மீதித் தொகையாக ₹ 2.73 கோடி, SDATன் சேமிப்பு வங்கிக் கணக்கில் ஓராண்டுக்கும் மேலாகச் செயலற்ற நிலையில் இருந்தது. ISSCக்கான பணியாளர் தேவை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பை SDAT இன்னும் (பிப்ரவரி 2022) முடிவு செய்யவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

விளக்கப்படம் 3.1: ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம், மதுரை

(ஆதாரம்: SDAT)

TNPESU ஏற்கனவே விளையாட்டு அறிவியலின் பல்வேறு எல்லைகளைக் குறித்த ஆய்வு மற்றும் முன்னேற்றத்தில் ஈடுபட்டிருந்தாலும், எந்தவொரு விரிவான திட்டமிடலும் இல்லாமல் SDATயும் இதில் கொண்டுவரப்பட்டது. இவ்வாறாக, SDAT மற்றும் TNPESU இடையேயான ஒருங்கிணைப்பில்லாமை, ஒப்பந்தங்களை முடிவு செய்வதில் தாமதத்தை ஏற்படுத்தியதால் ISSC **(விளக்கப்படம் 3.1)** நிறுவப்படாமல் போயிற்று. இதன் விளைவாக, ₹ 2.27 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டிடம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பயனற்ற நிலையில் உள்ளது மற்றும் ₹ 2.73 கோடி

[52] விளையாட்டு நடவடிக்கைகளின் போது மனித உடல் இயக்கத்தின் விரிவான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு.

[53] மனித உடலின் இயற்பியல் பண்புகளின் முறையான அளவீடு.

SDATன் சேமிப்பு வங்கி கணக்கில் ஒரு வருடத்திற்கும் மேலாக கிடப்பில் உள்ளது (பிப்ரவரி 2022). இதனால், விளையாட்டு வளர்ச்சியில் அறிவியலைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தின் நோக்கம் இலக்கை அடையவில்லை.

உபகரணங்களை வாங்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வருவிக்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

தணிக்கை பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறது:

- விளையாட்டு அறிவியலை மேம்படச் செய்ய TNPESU மற்றும் SDAT இடையே ஒருங்கிணைப்புக்கான முறையான ஏற்பாட்டை GoTN உருவாக்கலாம்.
- ISSCக்கு பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பை வடிவமைக்கவும், பணியாளர்களைத் தேர்வு செய்யவும், உபகரணங்களை வாங்கவும், மேலும் தாமதமின்றி மையத்தை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

(ஆர். அம்பலவாணன்)

சென்னை
நாள் 02 ஆகஸ்ட் 2022

முதன்மை கணக்காய்வு தலைவர் (தணிக்கை-I),
தமிழ்நாடு

மேற்கையொப்பமிடப்பட்டது

(கிரீஷ் சந்திர முர்மு)

புது டில்லி
நாள் 05 ஆகஸ்ட் 2022

இந்திய கணக்காய்வு மற்றும்
தணிக்கைத் துறைத் தலைவர்

இணைப்புகள்

இணைப்பு 1.1
(பார்வை: பத்தி 1.5.2; பக்கம் 4)
நிலுவையில் உள்ள ஆய்வு அறிக்கைகள் மற்றும் பத்திகளின் துறை வாரியான விவரங்கள்

வ.எண்	துறையின் பெயர்	நிலுவையிலுள்ளவற்றின் எண்ணிக்கை	
		ஆய்வு அறிக்கைகள்	தணிக்கை கண்டுபிடிப்புகள்
1	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்	110	517
2	வேளாண்மை மற்றும் உழவர் நலன்	480	1,856
3	கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன்	102	490
4	பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலன்	60	349
5	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு	101	267
6	நிதி	48	155
7	மருத்துவம் மக்கள் நல்வாழ்வு	401	2,587
8	உயர் கல்வி	79	415
9	உள், மதுவிலக்கு மற்றும் கலால் ஆயத்தீர்வை	26	159
10	மனித வள மேலாண்மை	16	104
11	தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாடு	45	182
12	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்	27	143
13	பொதுப்பணி	20	60
14	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை	1,060	4,261
15	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி	541	2,722
16	பள்ளிக் கல்வி	229	873
17	சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை	77	307
18	சிறப்புத் திட்ட செயலாக்கம்	3	7
19	தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி	32	58
20	நீர் வளங்கள்	0	0
21	மாற்றுத் திறனாளிகளின் நலன்	49	174
22	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு	25	105
	மொத்தம்	**3,531**	**15,791**

இணைப்பு 2.1

(பார்வை: பத்தி 2.1.3; பக்கம் 8)

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் விவரங்கள்

வ. எண்	மாதிரி மாவட்டங்களின் பெயர்	துறைகளில் தொடர்பற்ற மாதிரி முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பெயர்			
		வ. எண்	வேளாண்மை	வ. எண்	தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்
1	கடலூர்	1 2 3	அண்ணாகிராமம் கடலூர் விருத்தாசலம்	31 32	மங்களூர் நல்லூர்
2	திண்டுக்கல்	4 5 6	திண்டுக்கல் பழனி தொப்பம்பட்டி	33 34	கொடைக்கானல் வடமதுரை
3	கன்னியாகுமரி	7 8	அகத்தீஸ்வரம் தோவாளை	35 36	தக்கலை திருவட்டாறு
4	கரூர்	9 10	கடவூர் தாந்தோணி	37 38	குளித்தலை கரூர்
5	சேலம்	11 12 13 14	மகுடஞ்சாவடி சேலம் சங்கரி தாரமங்கலம்	39 40	மேச்சேரி ஏற்காடு
6	தூத்துக்குடி	15	ஓட்டப்பிடாரம்		
		16 17	புதூர் கோவில்பட்டி	41	விளாத்திகுளம்
7	திருநெல்வேலி	18	ஆலங்குளம்		
		19	பாளையங்கோட்டை	42	வள்ளியூர்
8	திருப்பூர்	20 21 22	பல்லடம் திருப்பூர் வெள்ளகோயில்	43 44	காங்கேயம் உடுமலைபேட்டை
9	வேலூர்	23 24 25 26	அணைக்கட்டு குடியாத்தம் கே.வி. குப்பம் நெமிலி		
10	விழுப்புரம்	27 28 29 30	கொள்ளியனூர் மரக்காணம் திருவெண்ணைநல்லூர் வல்லம்	45 46 47	மயிலம் மேல்மலையனூர் வானூர்

இணைப்பு 2.2
(பார்வை: பத்தி 2.1.6.6; பக்கம் 13)
NMSA - RADன் கீழ் மாவட்ட வாரியான பரப்பளவு

(ஹெக்டேரில்)

வ. எண்	மாவட்டங்களின் பெயர்	2018-19					2019-20					2020-21					RADன் கீழ் உட்படுத்தப்பட்ட நிலத்தொகுப்பின் மொத்த பரப்பளவு (வேளாண்மை + தோட்டக்கலை)
		மொத்த மானாவாரி நிலப்பரப்பு	RADன் கீழ் உள்ள வேளாண்மை நிலத் தொகுப்பின் பரப்பளவு	தோட்டக்கலை நிலத் தொகுப்பின் பரப்பளவு	RADன் கீழ் உள்ள மொத்தப் பரப்பளவு	மொத்த மானாவாரி நிலப்பரப்பில் உள்ள பரப்பளவின் விழுக்காடு	மொத்த மானாவாரி நிலப்பரப்பு	RADன் கீழ் உள்ள வேளாண்மை நிலத் தொகுப்பின் பரப்பளவு	தோட்டக்கலை நிலத் தொகுப்பின் பரப்பளவு	RADன் கீழ் உள்ள மொத்தப் பரப்பளவு	மொத்த மானாவாரி நிலப்பரப்பில் உள்ள பரப்பளவின் விழுக்காடு	மொத்த மானாவாரி நிலப்பரப்பு	RADன் கீழ் உள்ள வேளாண்மை நிலத் தொகுப்பின் பரப்பளவு	தோட்டக்கலை நிலத் தொகுப்பின் பரப்பளவு	RADன் கீழ் உள்ள மொத்தப் பரப்பளவு	மொத்த மானாவாரி நிலப்பரப்பில் உள்ள பரப்பளவின் விழுக்காடு	
1	அரியலூர்	57,904	900	255	1,155	*1.99*	0	0	0	0	*0.00*	58,345	99	100	199	*0.34*	**1,354**
2	செங்கல்பட்டு	0	0	0	0	*0.00*	0	0	0	0	*0.00*	1,630	195	100	295	*18.10*	**295**
3	கோயம்புத்தூர்	58,226	1,148	100	1,248	*2.14*	57,392	172	0	172	*0.30*	56,592	93	100	193	*0.34*	**1,613**
4	கடலூர்	1,23,827	2,000	200	2,200	*1.78*	1,19,841	200	200	400	*0.33*	1,19,841	100	0	100	*0.08*	**2,700**
5	தருமபுரி	1,28,037	2,000	50	2,050	*1.60*	1,28,037	300	200	500	*0.39*	1,28,037	220	0	220	*0.17*	**2,770**
6	திண்டுக்கல்	1,24,446	2,182	240	2,422	*1.95*	1,32,974	150	0	150	*0.11*	1,28,369	200	100	300	*0.23*	**2,872**
7	ஈரோடு	48,594	700	200	900	*1.85*	0	0	200	200	*0.00*	48,055	199	0	199	*0.41*	**1,299**
8	கள்ளக்குறிச்சி	0	0	0	0	*0.00*	1,28,293	200	0	200	*0.16*	1,28,293	200	100	300	*0.23*	**500**
9	காஞ்சிபுரம்	0	0	100	100	*0.00*	0	0	0	0	*0.00*	1,364	100	0	100	*7.33*	**200**
10	கன்னியாகுமரி	0	0	2	2	*0.00*	0	0	0	0	*0.00*	0	0	100	100	*0.00*	**102**
11	கரூர்	37,609	618	210	828	*2.20*	30,173	200	0	200	*0.67*	34,636	100	100	200	*0.58*	**1,228**
12	கிருஷ்ணகிரி	1,45,435	2,500	300	2,800	*1.93*	1,44,601	300	200	500	*0.35*	1,44,601	100	0	100	*0.07*	**3,400**
13	மதுரை	51,963	800	150	950	*1.82*	51,975	200	0	200	*0.38*	51,945	198	100	298	*0.57*	**1,448**
14	நாகப்பட்டினம்	0	0	100	100	*0.00*	0	0	0	0	*0.00*	9,317	100	100	200	*2.15*	**300**
15	நாமக்கல்	95,889	2,000	500	2,500	*2.61*	99,494	200	0	200	*0.20*	99,494	212	100	312	*0.31*	**3,012**
16	பெரம்பலூர்	77,828	1,300	200	1,500	*1.93*	77,828	100	0	100	*0.13*	77,828	198	100	298	*0.38*	**1,898**
17	புதுக்கோட்டை	3,244	500	100	600	*18.50*	2,508	200	0	200	*7.97*	4,896	198	100	298	*6.09*	**1,098**
18	இராமநாதபுரம்	1,13,130	1,500	20	1,520	*1.34*	1,13,130	300	0	300	*0.27*	1,13,130	198	100	298	*0.26*	**2,118**
19	இராணிப்பேட்டை	0	0	0	0	*0.00*	0	0	0	0	*0.00*	17,379	99	0	99	*0.57*	**99**

(ஹெக்டேரில்)

வ. எண்	மாவட்டங்களின் பெயர்	2018-19					2019-20					2020-21					RADன் கீழ் உட்படுத்தப்பட்ட நிலத்தொகுப்பின் மொத்த பரப்பளவு (வேளாண்மை + தோட்டக்கலை)
		மொத்த மானாவாரி நிலப்பரப்பு	RADன் கீழ் உள்ள வேளாண்மை நிலத் தொகுப்பின் பரப்பளவு	தோட்டக்கலை நிலத் தொகுப்பின் பரப்பளவு	RADன் கீழ் உள்ள மொத்தப் பரப்பளவு	மொத்த மானாவாரி நிலப்பரப்பில் உள்ள பரப்பளவின் விழுக்காடு	மொத்த மானாவாரி நிலப்பரப்பு	RADன் கீழ் உள்ள வேளாண்மை நிலக் கொகுப்பின் பரப்பளவ	தோட்டக்கலை நிலத் தொகுப்பின் பரப்பளவு	RADன் கீழ் உள்ள மொத்தப் பரப்பளவு	மொத்த மானாவாரி நிலப்பரப்பில் உள்ள பரப்பளவின் விழுக்காடு	மொத்த மானாவாரி நிலப்பரப்பு	RADன் கீழ் உள்ள வேளாண்மை நிலத் தொகுப்பின் பரப்பளவு	தோட்டக்கலை நிலத் தொகுப்பின் பரப்பளவு	RADன் கீழ் உள்ள மொத்தப் பரப்பளவு	மொத்த மானாவாரி நிலப்பரப்பில் உள்ள பரப்பளவின் விழுக்காடு	
20	சேலம்	1,57,979	3,600	200	3,800	*2.41*	2,94,955	300	200	500	*0.17*	1,68,169	200	100	300	*0.79*	**4,600**
21	சிவகங்கை	74,028	1,300	100	1,400	*1.89*	78,712	300	0	300	*0.38*	88,233	198	100	298	*0.34*	**1,998**
22	தென்காசி	0	0	0	0	*0.00*	49,785	150	0	150	*0.30*	49,360	99	0	99	*0.20*	**249**
23	தஞ்சாவூர்	0	0	100	100	*0.00*	0	0	100	100	*0.00*	6,066	198	0	198	*3.26*	**398**
24	நீலகிரி	0	0	0	0	*0.00*	0	0	100	100	*0.00*	0	0	0	0	*0.00*	**100**
25	தேனி	52,695	500	120	620	*1.18*	0	0	0	0	*0.00*	52,695	99	100	199	*0.38*	**819**
26	தூத்துக்குடி	1,57,451	1,200	90	1,290	*0.82*	1,23,538	450	100	550	*0.45*	6,649	99	0	99	*1.49*	**1,939**
27	திருச்சிராப்பள்ளி	86,713	1,000	200	1,200	*1.38*	0	0	200	200	*0.00*	86,713	100	0	100	*0.12*	**1,500**
28	திருநெல்வேலி	11,371	300	100	400	*3.52*	0	0	100	100	*0.00*	11,371	99	100	199	*1.75*	**699**
29	திருப்பத்தூர்	0	0	0	0	*0.00*	46,100	200	0	200	*0.43*	46,100	98	100	198	*0.43*	**398**
30	திருப்பூர்	65,975	1,000	15	1,015	*1.54*	10,994	150	0	150	*1.36*	4,249	93	100	193	*4.54*	**1,358**
31	திருவள்ளூர்	0	0	0	0	*0.00*	0	0	0	0	*0.00*	81,933	100	100	200	*0.24*	**200**
32	திருவண்ணாமலை	90,859	1,500	200	1,700	*1.87*	91,869	600	100	700	*0.76*	91,869	200	0	200	*0.22*	**2,600**
33	திருவாரூர்	0	0	0	0	*0.00*	5,465	100	0	100	*1.83*	5,465	99	0	99	*1.81*	**199**
34	வேலூர்	77,119	1,200	100	1,300	*1.69*	0	0	0	0	*0.00*	34,570	100	0	100	*0.29*	**1,400**
35	விழுப்புரம்	3,63,242	2,100	300	2,400	*0.66*	3,63,242	100	200	300	*0.08*	1,76,538	200	0	200	*0.11*	**2,900**
36	விருதுநகர்	75,278	1,415	100	1,515	*2.01*	73,756	150	200	350	*0.47*	78,176	198	0	198	*0.25*	**2,063**
	மொத்தம்	**22,78,842**	**33,263**	**4,352**	**37,465**	*1.64*	**22,24,664**	**5,022**	**2,100**	**7,122**	*0.32*	**22,11,909**	**4,989**	**2,000**	**6,989**	*0.32*	**51,726**
		உட்படுத்தப்பட்ட மானாவாரி நிலப்பரப்பின் சதவீதமாக உள்ள பகுதி(2021)															*2.33*

இணைப்பு 2.3
(பார்வை: பத்தி 2.1.7.1; பக்கம் 14)
ஒப்புதல், ஒதுக்கீடு, அனுமதி, வழங்குகை மற்றும் உண்மையான செலவினத்தின் விவரங்கள் (கூறு வாரியாக)

(₹ கோடியில்)

ஆண்டு	GoIக்கு அனுப்பப்-பட்ட அங்கீகரிக்-கப்பட்ட AAP	GoI ஒப்பளிப்பு	GoI மற்றும் AAP இடையே உள்ள வேறுபாடு	GoI வழங்குகை	GoTN வழங்குகை	மொத்த வழங்குகை	உண்மையான செலவினம்	செலவிடப்-படாத தொகை	பயன்படுத்-தப்பட்ட நிதியின் விழுக்காடு
மானாவரி பகுதி மேம்பாடு (Rainfed Area Development -RAD)									
2018-19	96.06	60.37	35.69	35.50	23.66	59.16	57.97	1.19	*97.99*
2019-20	84.19	55.00	24.22	33.09	22.06	55.15	53.81	1.34	*97.57*
2020-21	50.00	50.00	0	30.00	20.00	50.00	49.56	0.44	*99.12*
மொத்தம்	**230.25**	**165.37**	**59.58**	**98.59**	**65.72**	**164.31**	**161.34**	**2.97**	***98.19***
மண் வள மேலாண்மை (Soil Health Management -SHM)									
2018-19	5.53	5.53	0	3.32	2.21	5.53	5.43	0.10	*98.19*
2019-20	16.85	9.43	7.42	5.66	3.77	9.43	8.84	0.59	*93.74*
2020-21	10.71	8.15	2.56	4.89	3.26	8.15	3.78	4.37	*46.38*
மொத்தம்	**33.09**	**23.11**	**9.98**	**13.87**	**9.24**	**23.11**	**18.05**	**5.06**	***78.10***
மண் வள அட்டை (Soil Health Card - SHC)									
2018-19	21.44	21.44	0	12.86	24.58	37.44	31.55	5.89	*84.27*
2019-20	13.94	9.27	4.67	5.56	3.01	8.57	7.45	1.12	*86.93*
